பக்கங்கள்: இருபத்திநான்கு+ IV+A,B=30

# உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

விலை ரூபா 15.00

www.uthayan.com

சுடர் 25 வள்ளுவர் ஆண்டு 2041 வைகாசி 2 ஞாயிற்றுக்கிழமை (16.05.2010) UTHAYAN-A Lively National Tamil Daily கதிர்: 171

மஹிந்த அரசின் புதிய அறிவிப்பான

# தேசிய நல்லிணக்க ஆணைக்குழு சர்வதேசத்தை ஏமாற்றும் நாடகம்!

## காலத்தை இழுத்தடிக்கும் பம்மாத்து என அரியநேத்திரன் காட்டம்



யாழ்ப்பாணம்,மே16

இனப்பிரச்சினைக்கான அடிப்படைகளை ஆராய்ந்து தேசிய நல்லிணக்கம் காண்பதற்காக அரசு நியமிக்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள தேசிய நல்லிணக்க ஆணைக் குழு, தமிழ்மக்களையும் சர்வதேசத்தையும் ஏமாற்றும் நாடகத்தின் ஓர் அங்கம். அது ஒரு பம்மாத்து ஏற்பாடு. காலத்தை இழுத்தடிக்க எடுத்துள்ள நடவடிக்கையாகவே இந்தக் குழுவை நோக்கவேண்டியுள்ளது.

- இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் சாடுகின்றார்.

பிரச்சினைகளின் அடிப்படைகளை ஆராய்ந்து தேசிய நல்லிணக்கம் காண 7பேர் கொண்ட ஆணைக்குழு ஒன்றை ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ நியமிக்கவுள்ளார் என்று அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்த கருத்துத் தொடர்பாகக் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு நேற்று உதயனுக்குத் தெரிவித்தார்.

இது விடயமாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:- இலங்கை சுதந்திரம் அடைந்தாகாக கூறப்படும் 1948முதல் கடந்த 61வருடகாலமாக-பல்வேறு ஒப்பந்தங்களை தமிழ்மக்களுடன் செய்து கொண்ட தெற்குத் தலைமைகள், இப்போது தமிழர் பிரச்சினை குறித்து ஆராய ஆணைக்குழு நியமிக்க முன்வருவது வேடிக்கையான விடயமாகும்.

தந்தை செல்வா - பண்டா ஒப்பந்தம், தந்தை செல்வா - டல்லி ஒப்பந்தம் என இரு ஒப்பந்தங்கள் பிரதான இரு கட்சிகளுடன் செய்யப்பட்டன. அதன் பின்னர் திம்புப் பேச்சுவார்த்தை, இலங்கை - இந்திய ஒப்பந்தம், விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம், தன்னாட்சி அதிகாரசபை, சுனாமி மீள் கட்டமைப்பு உடன்பாடு, அனைத்துக்கட்சி தெரிவுக்குழு, நிபுணர்குழு என காலத்துக்குக் காலம் தமிழர் பிரச்சினைகள் தொடர்பான எத்தனையோ உடன்பாடுகள் வந்து போயின.

கடந்த 61வருடகாலத்தில் வந்துபோன அந்த உடன்பாடுகளின் மூலம் தமிழர் பிரச்சினைக்குரிய மூல காரணத்தை கண்டறிய முடியாத அரசு, இப்போது புதிதாக

(24 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளுக்கு நிதி சேகரித்ததாக குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு கனடாவில் 6 மாதச் சிறை

ஒட்டாவா,மே16

கனடாவில் 2006ஆம் ஆண்டு காலப் பகுதியில் விடுதலைப் புலிகளுக்கு நிதி சேகரித்தவர் எனக் குற்றம் சாட்டப்பட்ட ஒருவருக்குக் கனேடிய நீதிமன்றம் நேற்று முன்தினம் 6 மாதகால சிறைத்தண்டனை விதித்துத் தீர்ப்பு வழங்கியுள்ளது.

நீதிமன்றத் தண்டனையைப் பெறுபவர் பிரபாகரன் தம்பித்துரை என்பவராவார்.

கனேடிய சட்டத்தின்படி பயங்கரவாதத்துக்கு உதவும் ஒருவருக்கு 10 வருட சிறைத்தண்டனை விதிக்கலாம். எனினும் குற்றத்தை ஒப்புக்கொண்டதால் இவருக்கு 6 மாதகாலச் சிறைத்தண்டனை வழங்கப் பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. கனேடிய உயர்நீதிமன்ற நீதியரசர் றொபேர்ட்

(24 ஆம் பக்கம் பார்க்க)

சம்பந்தன் தலைமையில் 14 பேரும் ஒன்றாக

## வன்னியில் மீளக்குடியமர்ந்துள்ள மக்களை சந்திக்கச் செல்லும் கூட்டமைப்பு எம்.பிக்கள்

யாழ்ப்பாணம்,மே16

வன்னியல் மீளக்குடியமர்ந்த மற்றும் நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 14 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஓர் அணியாகச் சென்று சந்தித்துக் கலந்துரையாடவுள்ளனர்.

எதிர்வரும் 21ஆம் திகதிமுதல் 24ஆம் திகதிவரை வன்னியில் தங்கியிருக்கும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இடம்பெயர்ந்த மக்கள் தங்கியுள்ள நலன்புரிநிலையங்கள் மற்றும் மீளக்குடியமர்ந்துள்ள இடங்களுக்கும் நேரில் செல்வர்.

எதிர்வரும் 21ஆம்திகதி காலை 7மணிக்கு வவுனியாவில் ஒன்று கூடும் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கூட்டமைப்பின் தலைவரான இரா.சம்பந்தன் தலைமையில் சென்று கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் மீளக்குடியமர்ந்துள்ளவர்களைச் சந்தித்து அவர்களின் வசதிகள், தேவைகள் மற்றும் பல்வேறு விடயங்கள் குறித்து ஆராய்வர்.

வவுனியா நலன்புரி நிலையங்களில் தங்கியுள்ளவர்களையும் கூட்டமைப்பு எம்.பிக்கள் சந்தித்து அவர்களின் நிலைமைகள் குறித்தும் கேட்டறிந்துகொள்வர்.

கடந்தவருடம் வன்னியில் இருந்து

(24 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னியில் உயிர்நீத்த எமது உறவுகளின் நினைவாக மட்டக்களப்பு மாவட்டத்தில் நாளை விசேட நிகழ்வுகள்

### 640 இந்து ஆலயங்களில் ஒரே நேரத்தில் பூசை, பிரார்த்தனைகள்

மட்டக்களப்பு,மே16

வன்னியில் உயிர்நீத்த எமது தமிழ் உறவுகளின் ஓராண்டு நிறைவையொட்டி நாளை திங்கட்கிழமை காலை 7மணிக்கு ஒரே நேரத்தில் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள 640 இந்து ஆலயங்களில் விசேட பூசை, பிரார்த்தனைகள் இடம்பெறவுள்ளன.

அத்துடன் மாவட்டத்தில் உள்ள கிறிஸ்தவ ஆலயங்களில் விசேட பிரார்த்தனைகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் இத்தகவலைத் தெரிவித்தார். (24 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலைத் தமிழர்களில் ஒரு தொகுதியினர் விமானம் மூலம் தமிழகத்திலிருந்து திரும்பினர்

திருகோணமலை,மே16

போர் உக்கிரமடைந்த வேளையில் திருகோணமலையில் இருந்து இடம் பெயர்ந்து தமிழகம் சென்று பல வருடங்கள் முகாங்களில் தங்கியிருந்தவர்களில் ஒரு தொகுதியினர் மீளவும் தமது இருப்பிடங்களுக்குத் திரும்பியுள்ளனர்.

அகதிகளுக்கான ஐ.நா.தூதரகத்தின் ஏற்பாட்டில் விமானம் மூலம் ஒருதொகுதியினர் அழைத்து வரப்பட்டுள்ளனர். அவர்கள் தமது வீடுகளில் மீளக்குடியமர்த்துவதற்கான வசதிகளை அந்நிறுவனம் மேற்கொண்டு வருகிறது.

மீளவும் திரும்பியுள்ள நூற்றுக்கு மேற்பட்டவர்கள் தமது வீடுகளைப் புனரமைக்கும் பணிகளில் முனைப்புடன் ஈடுபட்டுள்ளனர்.

இதேவேளை - திருமலையைச் சேர்ந்த மேலும் பலர் நாடு திரும்ப விரும்பம் தெரிவித்துள்ள போதும், அவர்களை அழைத்து வரும் பணியை அகதிகளுக்கான ஐ.நா. தூதரகம் இடைநிறுத்தியுள்ளது.

(24 ஆம் பக்கம் பார்க்க)

## நாணய நிதியத்தின் அதிகாரிகள் நேற்று யாழ்ப்பாணம் வந்தனர்

யாழ்ப்பாணம்,மே16

யாழ்.மாவட்டத்தில் இடம்பெற்ற மீள் குடியமர்வு மற்றும் அபிவிருத்தி தொடர்பாக சர்வதேச நாணய நிதியத்தின் அதிகாரிகள் நேற்று நேரில் ஆராய்ந்தனர்.

ஐந்து அதிகாரிகள் கொண்ட நிதியத்தின் குழு ஒருநாள் விஜயமாக யாழ்ப்பாணத்துக்கு வந்தது. மத்திய வங்கியின் உயர் மட்ட அதிகாரிகள் மூவர் அவர்களுடன் வந்திருந்தனர். (24 ஆம் பக்கம் பார்க்க)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் அரசாங்கம் பேச்சா? அது மஹிந்த சிந்தனை அடிப்படையிலேயே நடைபெறவேண்டும்!



### அமைச்சர் சம்பிக்க ரணவக்க ஒரு போடு!!

கொழும்பு, மே 16

அரசாங்கம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருடன் பேச்சு நடத்துவதானால் அந்தப் பேச்சு, மஹிந்த சிந்தனையை அடிப்படையாகக் கொண்டதாகவே இருக்க வேண்டும்.

இவ்வாறு அழுத்தம் திருத்தமாகக் கூறியுள்ளார் மின்சக்தி அமைச்சரும், ஜாதிக ஹெல உறுமயவின் கொள்கை வகுப்பாளருமான சம்பிக்க ரணவக்க.

லண்டனிலிருந்து வெளியாகும் இணையத்தளம் ஒன்றுக்கு இவற்றைத் தெரிவித்திருக்கிறார் மின்சக்தி அமைச்சர்.

அவர் மேலும் கூறியிருப்பதாவது:-

தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் அரசாங்கம் பேச்சு (24 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 25ஆவது திருமண வாழ்த்து



16.05.2010

**இ. மனோகரன் - ம. நிர்மலா**

ஆயிரம் பிறைகளை ஆயுளில் கண்டு
ஆனந்தப் பெருக்கில் அன்பினில் திரண்டு
பாயிரம் காணும் பாசப் பறவைகளாய்
பாரினில் வாழ்க பல்லாண்டு

வதுவை நாள் கடந்து வெள்ளிவிழா வந்தும்
புதுமைகள் பலவும் பூக்கட்டும்
மதுநிறை மலராய் நாளும் உம் வாழ்வு
மனதை மணத்தால் மயக்கட்டும்

ஆற்று மணல் எத்தனையுண்டோ
அத்தனை காலம் இருவரும் வாழ்க.
காற்றில் வரும் எந்தன் வாழ்த்து
கடவுளிடம் கேட்கும் உங்களுக்காக....

வாழ்த்துவோர் :
லாவன்சன் - (மகன்),
சிந்துஜா - (மகள்),
முரளிதாஸ் - (மருமகன்).

சுதுமலை தெற்கு,
ஆனைக்கோட்டை.

(98299)

---

**தவறிவிட்டது.**

சண்முகலிங்கம் பிறேமதாஸ் என்பவருடைய NPHO 8494,மோட்டார் வாகனத்தின் காப்புறுதி பத்திரம்,வரிப்பத்திரம் என்பன தவறிவிட்டன.
தொடர்பு: பொற்பதி றோட், கொக்குவில்
தொ.பே.0771698441

---

**வீடு வாடகைக்குத் தேவை**

3 பேர் கொண்ட அரச உத்தியோகத்தர் குடும்பத்திற்கு இணுவில், கோண்டாவில், உரும்பிராய் பகுதிகளில் வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு : 0776510244

---

**THE ROYAL COLLEGE OF JAFFNA**

3 மாதங்களில் சுலபமாக ஆங்கிலத்தில் கதைக்கப் பயில By:ந.விக்னேஸ்வரன்
ஆச்சாரி, 426, கே.கே.எஸ்.வீதி,
யாழ்ப்பாணம். பிளாக் வீதி, சங்கானை.
Tel. 0776751649

---

**யாழ்.- கொழும்பு வான் சேவை**

யாழ். - கொழும்பு AIRPORT மற்றும் விசேட வைபவங்களிற்கு தொடர்பு கொள்ளவும்.
ஒருவருக்கான கட்டணம் 1000/= மட்டும்.
0777199319, 0777199352
0779770027

---

## சாரதி தேவை

ஹைஏஸ் வான் ஒன்றுக்கு மாதாந்த அல்லது நாளாந்த சம்பள அடிப்படையில் 40-55வயதுக்கு இடைப்பட்ட அனுபவமுள்ள சாரதி தேவை.
தொடர்பு:
0776384114
0770690333

---

# Study in Singapore

**With industry attachment Diploma, Advanced Diploma in**

**Tourism & Hospitality Management** *(12 Months)*

Hurry, Admission is open for June intake!

Call: Mr.N.Geethan
Mr.N.Sujeevan
*Jaffna Technical Institute.*
*No. 46, Clock Tower Road,*
*Jaffna.*
*0773484467 / 0777855800*

(சி/567516)

மாபெரும் கருத்தரங்கு வெகுவிரைவில்

குறிப்பு: சிங்கப்பூரில் நடைபெறவுள்ள இக் கற்கை நெறிக்கான பதிவுகளினை இன்றிலிருந்து மேற்கொள்ள முடியும். விண்ணப்பதாரிகள் தொலைபேசி அல்லது மேலேயுள்ள முகவரிக்கு ஒரு கிழமைக்குள் கிடைக்கக் கூடியவாறு சுய விவரத்தினை அனுப்புமாறு மகிழ்வுடன் வேண்டிக்கொள்ளப்படுகின்றனர்.

---

மல்லாகம், நீலியம்பனை

## அருள்மிகு முதலி அம்பாள் தேவஸ்தானம் வருடாந்த அலங்கார உற்சவம்

மேற்படி உற்சவம் நாளை (17.05.2010) திங்கட்கிழமை ஆரம்பமாகி 25.05.2010 அன்று தேர்த்திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். பூஜைகள் பிற்பகல் 3 மணிக்கு நடை பெறும்.

சிவத்திரு. மு.சுப்பிரமணியம்(மணி ஐயா)
ஆலய அர்ச்சகர்.

---

## தேவை

கணக்காளர் (5வருட அனுபவம்), கணக்குப் பதிவாளர், சிட்டை எழுதுநர் முன் அனுபவமுள்ளவரும் யாழ். மாநகரத்திற்குட்பட்டவரும் வேண்டப்படுகின்றனர். இன்று (16.05.2010) மு.ப. 10 மணிக்கு நேரில் வரவும்.

**பேப்பர் ஹவுஸ்,**
யாழ்ப்பாணம்.

---

**வீடு விற்பனைக்கு**

யாழ்.நகரப் பகுதியில் 1½ பரப்புக்காணி வீட்டுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு: 42,கடையிற்சுவாமி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (98292)

---

**வீடு வாடகைக்குத் தேவை**

நான்கு பேர் கொண்ட சிறிய குடும்பம் ஒன்றுக்கு யாழ். இந்துக் கல்லூரிக்கும் யாழ். நகருக்கும் அண்மித்ததாக வீடு வாடகைக்குத் தேவை.
தொடர்பு: 0770279582

---

**வீட்டுடன் காணி விற்பனைக்கு**

யாழ் நகரில் இருந்து 3 km தூரத்தில் யாழ். பல்கலைக்கழக சூழலில் கொக்குவில் கிழக்கு கோயில் வீதியில் 4 பரப்புக் காணியில் தனி வீடு, நன்னீர் தனிக் கிணறு மற்றும் இதர வளங்களுடன் விற்பனைக்குண்டு.
தொடர்பு : 0776641076
0214921315

---

சங்கானை நகரில்

# புதிய வினோ நகைமாடம்



அக்ஷய திருதியை தங்கத் திருநாளினை முன்னிட்டு எம்மிடம் ஒரு பவுண் பெறுமதியான தங்க நகைகளை கொள்வனவு செய்யும் ஒவ்வொரு வாடிக்கையாளருக்கும் பெறுமதிமிக்க தங்க நாணயம் அன்பளிப்பாக வழங்கப்படுவதுடன் அனைத்து வாடிக்கையாளர்களுக்கும் விலைக் கழிவு வழங்கப்படுகிறது.

**புதிய வினோ நகைமாடம்**
பிரதான வீதி,
சங்கானை

இணை நிறுவனம்
**மோபைல் பிளாஷா**
பிரதான வீதி, சங்கானை

---

# கண்ணீர் அஞ்சலி



எமது சக உத்தியோகத்தர்

**வீரசக்தி சிவப்பிரகாசம்**

(தொழில்நுட்ப உதவியாளரும் படவரைஞரும் வீதி அபிவிருத்தி அதிகார சபை, யாழ்ப்பாணம்)

அவர்களின் பிரிவால் துயருற்றிருக்கும் மனைவி, பிள்ளைகள், குடும்ப உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மாகாணப் பணிப்பாளர்
அலுவலகம் வ/கி(வ),
வீதி அபிவிருத்தி அதிகார சபை,
யாழ்ப்பாணம்.
(98338)

மாகாணப் பணிப்பாளர்,
பிரதம பொறியியலாளர்,
சக உத்தியோகத்தர்கள்,
ஊழியர்கள்.

---

## IELTS ஆங்கில வகுப்புகள்

IELTS பதிவுகளை மேற்கொள்வதற்கு British Council இனால் அங்கீகாரம் பெற்ற யாழ் Thames நிறுவனத்தில்:

*IELTS* மற்றும் Better Spoken English வகுப்புகள் தொடர்பான இலவசக் கருத்தரங்கு 24.05.2010 திங்கள் காலை 10 மணிக்கு நடைபெறும். அன்று தொடக்கம் வகுப்புக்கள் தொடர்ந்து நடைபெறும். சிறு குழுக்களாகச் சிறப்புக் கவனம் செலுத்தப்பட்டுக் கற்பிக்கப்படும். Audio, Video விளக்கங்களுடனும் கணினி உதவியுடனும் கற்பிக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு: **Thames International**
No: 644, Hospital Road, (Off Vempadi Junction), Jaffna.
Telephone: 0212224593, 0115737306 Mobile: 0770711281

---

## Niru Business College

Deutsh(டொச் மொழி), ஜேர்மன், சுவிஸ் Deupsche போன்ற நாடுகளுக்கு செல்லவிருக்கும் இலங்கையில் அதி கூடிய மாணவருக்கு மற்றும் ஏனையோருக்கும் இம்மொழி எமது கல்வி நிறுவனத்தினால் கற்பிக்கப்படும்.

மற்றும் Student Visa வசதிகளும் செய்து கொடுக்கப்படும்.

**Niru Business College**
**Study and work in**
**UK**

★ அடிப்படைத் தகைமை G.C.E. O/L 5pass
★ 100% Visa guaranteed
★ No Need Ielts

விரும்பிய பாடநெறிகளை தெரிவு செய்து கொள்ளலாம். செப்ரெம்பர் மாத College அனுமதி பெற்றுத் தரப்படும்.

தொடர்புகளுக்கு:
Niru Business College
Kandy Road, Nunavil Center,
Chavakachcheri.
T.P 0773570511, 0773516592
0217200213

---

# மரண அறிவித்தல்

*தம்பு தம்பிராஜா*



மட்டுவில் தெற்கு, வளர்மதி வீதியை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட தம்பு தம்பிராஜா நேற்று (15.05.2010) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பு-முத்துப்பிள்ளை தம்பதியினரின் மூத்த மகனும், காலஞ்சென்றவர்களான அப்புக்குட்டி-பாறுப்பிள்ளை தம்பதியினரின் மருமகனும், அன்னப்பிள்ளையின் அன்புக் கணவரும் ரவீந்திரன் (நோர்வே), புவனேந்திரன் (டென்மார்க்), றஜனி(சுவிஸ்), நளினி(சுவிஸ்), ஞானேந்திரன்(சுவிஸ்), சுதாகரன் (சுவிஸ்),பிரபாகரன்(சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும், ஜெயசிறி (நோர்வே), சுபத்திரா (டென்மார்க்), கந்தசாமி(சுவிஸ்), இராசேந்திரன்(சுவிஸ்), வக்சலா (சுவிஸ்), வினோ(சுவிஸ்), அமுதா (சுவிஸ்) ஆகியோரின் மாமனாரும்,காலஞ்சென்ற அன்னம்மா மற்றும் சின்னத்துரை (ஓய்வுபெற்ற அதிபர்), அப்புத்துரை(ஓய்வுபெற்ற அதிபர்) ஆகியோரின் சகோதரரும் காலஞ்சென்ற கிருஸ்ணன், தருமலிங்கம், லட்சுமி,புவனேஸ்வரி மற்றும் பொன்னரியம், கண்மணி, சரவணமுத்து (சுவிஸ்), செல்லத்துரை ஆகியோரின் மைத்துனரும் ஜெனித் (நோர்வே), றெனோ, ஜெசி, அஸ்வின் (டென்மார்க்), கவிதாஞ்சன், அக்சனா(சுவிஸ்), அபினாத், அகானா (சுவிஸ்), அனோச், எமில்ட்டன், அஸ்வினி (சுவிஸ்) ஆகியோரின் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2010) ஞாயிற்றுக் கிழமை அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பிற்பகல்2.30 மணியளவில் தகனத்துக்காக சின்னத்தூ மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*வளர்மதி வீதி,*
*மட்டுவில் தெற்கு, சாவகச்சேரி.* (98339)

தகவல்:
குடும்பத்தினர்.

---

# கண்ணீர் அஞ்சலி



எமது அன்புக்கும்மதிப்புக்கும் உரிய நண்பனான

**சங்கரப்பிள்ளை கந்தசாமி**

அவர்களின் மரணச் செய்தி கேட்டுத் துயரடைகின்றோம். அவரின் மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறுவதுடன், அவரது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

கதிர்வேலவன் அரிசி ஆலை,
கைதடி.
(சி/567679)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வன்னியில் ஊழிக் கூத்து முடிந்து ஆண்டு ஒன்றாகிறது விடியவில்லை அப்பகுதி மக்களின் துயர்வானம்...!

**2009 மே 18.** ஒரு பெரும் ஊழிக்கூத்து நிகழ்ந்து முடிந்திருந்தது. எங்கும் சாவின் ஓலம். ஆறாய் பெருகி ஓடியது நிணநீர். பெரியதொரு கரும்பூதமாய் அந்தப் பகுதியெங்கும் வியாபித்தபடி நிலத்தின் மேற்பரப்பில் ஆடி அசைந்து அடங்கிக் கொண்டிருந்தது கந்தகப் புகை. மிக நீண்ட காலத்துக்குப் பிறகு சுடுகலன்கள் அன்றைக்குத்தான் ஒரு முழு ஓய்வை எடுக்க முடிந்திருந்தன. பார்க்குமிடமெல்லாம் மனித அவயவங்கள். யார் செத்தார்கள்? யார் பிழைத்தார்கள் என்பது எதுவுமே தெரியாது. ஒரு குருட்டாப் போக்கில் உயிர் பிழைத்தல் என்பதை மட்டுமே மனதில் கொண்டு பாதுகாப்பான இடங்களுக்கு இத்தனை



அழிவுகளையும் தாக்குப்பிடித்தபடி அதிஷ்டத்தின் துணையால் எஞ்சியிருந்த மக்கள் நகரத்

## நெருக்கீடுகள் அழுத்தங்களைச் சுமந்தவாறே நாள்கள் நகர்கின்றன அவர்களுக்கு

தொடங்கியிருந்தனர். கிட்டத்தட்ட மே 18 வரையான காலப்பகுதிவரை போரின் வெம்மை தாங்க முடியாமல் அரச கட்டுப்பாட்டுப் பகுதிக்குள் வந்த மக்களின் எண்ணிக்கை 3லட்சத்துக்கும் அதிகம். வந்தவர்கள் எல்லோருமே உடனடியாக நலன்புரி நிலையங்கள் என்ற பெயரிடப்பட்ட முகாம்களில் அடைக்கப்பட்டனர். இவ்வாறு நலன்புரி நிலையங்களில் தங்க வைக்கப்படும்போது விடுதலைப் புலிகள் அமைப்பில் இருந்தவர்கள் என இனங்காணப்பட்டவர்கள் தனியே புனர்வாழ்வு முகாம்களுக்கு அனுப்பப்பட்டனர். இவையெல்லாம் நடந்தேறி ஒரு வருடமாகிவிட்டது. ஆனாலும் இன்னமும் வன்னி மக்களின் வாழ்வு வரண்டுபோய்த்தான் கிடக்கிறது.

புலிகளின் கட்டுப்பாட்டிலிருந்து மக்கள் விடுவிக்கப்பட்ட கையோடு அதைச் செய்யப் போகிறோம், இதைச் செய்யப்போகிறோம் என்றெல்லாம் மக்களின் மீள் குடியமர்வு பற்றி ஏராளமான கனவுத் திட்டங்களை ஆட்சியாளர்கள் அறிவித்தபடியே இருந்தார்கள். எல்லாமே வெறும் வாய்ச்சொல் வீரமாக மட்டுமே இருந்ததே தவிர உருப்படியான காரியங்கள் ஆமை வேகத்தில்தான் நடைபெறத் தொடங்கின. எத்தனையோ அறிவிப்புகள், இழுபறிகள் என்பவற்றின் பின்னரே அதுவும் சர்வதேசத்தின் அழுத்தம் முன்னெப்போதும் இல்லாதளவுக்கு அதிகரித்தமையாலேயே மக்களின் மீள் குடியமர்வு நடவடிக்கைகளை அரசு மெல்லென ஆரம்பித்தது. ஆனாலும் உண்மையில் அது சரியான மீள் குடியேற்றம் தானா என்பதும் கேள்விக் குறிதான். ஏனெனில் ஆரம்பத்தில் முகாம்களிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களில் பலர் இன்னமும் தம் சொந்த இடங்களுக்குத் திரும்பிச் செல்ல முடியாதவர்களாய் இன்னமும் தமது நண்பர்கள் மற்றும் உறவுகளின் வீடுகளிலேயே ஒண்டிக்கொண்டிருக்கிறார்கள்.

### ஒரு அரிசி மணி கூடச் சிந்தக்கூடாது என்பதில் கவனமாக இருந்த பழைய பணக்காரன்

யார் யாரோ எல்லாம் வந்து போனார்கள். அவ்வளவு ஏன் இந்த் ஒருவருட காலத்துக்குள் மூன்று தேர்தல்களும் வந்து போய் விட்டன. ஆனாலும் இடம்பெயர்ந்த மக்களின் வானம் மட்டும் விடிவதாகத் தெரிவதில்லை. எங்கும் கும்மிருட்டுத்தான். தட்டுத்தடுமாறியபடியே, நிவாரணத்தை மட்டுமே நம்பிக்கொண்டு வாழ்க்கையை ஓட்டிக் கொண்டிருக்கிறார்கள் அவர்கள். வன்னியில் இருந்தபோது மிகப்பெரும் பணக்காரராக சகல வசதிகளுடனும் இருந்த ஒருவர் பரதேசி போல மழிக்கப்படாத தாடி மீசையுடன் நீண்ட வரிசையில் நிவாரணத்துக்காக காத்திருந்தபோது சந்திக்க நேர்ந்தது. "புலிகளும் அரசாங்கமும் போரும் எங்களுக்குத் தந்த பரிசு இதுதான்". என்று தன் ஆற்றாமையை கொட்டிவிட்டு, ஒரு அரிசி மணி கூட வெளியே சிந்திவிடக் கூடாது என்று வெகு பக்குவமாக நிவாரணச் சாமான்களைத் தூக்கிக் கொண்டு சுடுவெயிலில் வெறுங்காலுடன் நடக்கத் தொடங்கினார் அவர். நின்று சாவகாசமாக கதைக்கக் கூட அவருக்கு நேரமில்லை. நிவாரணப் பொருள்கள் சென்ற பின்னர்தான் அவர் வீட்டில் உலை ஏறும்.

### தாய்ப்பாலை ஊட்ட முடியாத பரிதாப நிலை ...

இன்னொரு சந்தர்ப்பத்தில் தன்னார்வ தொண்டு நிறுவனம் ஒன்றிற்குச் சென்றிருந்தபோது அந்நிறுவனத்தின் வாசலில் நீண்டநேரமாய்த் தவம் கிடந்த பெண்ணொருவரைக் காண நேர்ந்தது. கையிலே வீரிட்டலறியபடி ஒரு கைக் குழந்தை. அந்தக் குழந்தையின் அழுகை ஒலியே அதற்கு பசியெடுக்கிறது என்பதை எல்லோரது காதுகளுக்குள்ளும் ஓங்கி அறைந்தபடி இருந்தது. ஆனாலும் குழந்தைக்கு பால் கொடுப்பதைப் பற்றிய சிந்தனை எதுவுமின்றி ஏக்கம் கலந்த விழிகளோடு தொண்டு நிறுவன அதிகாரிகளின் வருகையை எதிர்பார்த்தபடி இன்னமும் தவமிருக்கத் தொடங்கினாள் அந்தப் பெண். பசியில் அலறும் பிள்ளைக்கு ஒரு மறைவிடத்தில் வைத்து தாய்ப்பாலைக் கொடுத்திருந்தாலாவது குழந்தை அழுகையை நிறுத்தியிருக்கும். ஆனால் அந்தப் பெண்ணால் அது முடியாது. இரண்டு மார்பிலும் யுத்தத்தின் பரிசாய் குண்டுச் சிதறல்கள். எனவே பெற்ற குழந்தைக்குக் கூட - அது எப்படித்தான் உயிரே போகுமளவுக்கு கதறியழுதாலும் - ஒரு சொட்டு தாய்பாலை பருகக் கொடுக்க முடியாத பரிதாபநிலை அந்தப் பெண்ணுக்கு. சரி, பால்மாவையாவது வாங்கி அந்தக் குழந்தையின் பசியைத் தீர்க்கக்கூட அவளிடம் பொருளாதார வசதி இல்லை. யுத்தம் அவசர அவசரமாய் அவளது கணவனையும் தின்றிருந்தது. எனவேதான் குழந்தைக்கான பால்மாவுக்கான செலவையாவது யாராவது தரமாட்டார்களா என்ற நப்பாசையுடன் அந்தப் பெண் தொண்டு நிறுவன வாசலில் தொடர்ந்தும் தவமிருக்கிறாள். குழந்தை இன்னமும் வீரிட்டழுதபடியேதான் இருக்கிறது. அந்தக் குழந்தைக்குப் பாற்கடலைக் கொண்டுவர இப்போது எந்த ஒரு கடவுளும் மனம் இரங்கி பூமிக்கு வரவே இல்லை.

இதைவிட கிளிநொச்சியில் பெரும் பிரயத்தனத்தின் மத்தியில் மீளக் குடியமர அனுமதிக்கப்பட்ட நண்பனை சந்திக்கவெனச் சென்றிருந்தேன். அவனைச் சந்திக்க வருவதாக நீண்ட நாள்களாக வாக்குறுதி கொடுத்தும்



அன்றைக்குத்தான் அதை நிறைவேற்ற முடிந்தது. அவன் இருந்த இடத்தைப் பார்த்தபோது எனக்குத் தூக்கி வாரிப் போட்டது. ஒரு சிறு கூடாரத்துக்குள் இருந்தபடி தன்னுடைய வாழ்வின் இரண்டாம் பாகத்தை அவன் உருவாக்கிக் கொண்டிருந்தான். கூடாரத்துக்குப் பக்கத்தில் பெரும் மலைபோல் குவிந்து கிடக்கின்றன முன்னொருகாலத்தில் அவன் ஆசையாகக் கட்டிய பெரியதொரு வீட்டின் சிதைந்த பாகங்கள். வெட்டவெளியில்தான் சமையல். சுட்டெரித்துக் கொண்டிருந்த வெயிலில் அந்தக் கூடாரத்துக்குள் நெருப்புக் கூட உட்கார்ந்திருக்க முடியாது. அவ்வளவு வெம்மை. ஆனால் நண்பனும் அவனைப் போல மீளக் குடியேறிய சிலரும் அதற்குள் வாழ்க்கையை நடத்துகிறார்கள். புதிய தொழிலொன்றைத் தொடங்க வேண்டுமென்ற அவாவும் மீண்டும் நன்றாக வாழ வேண்டுமென்ற வெறியும் அவனுக்குள் இன்னமும் இருந்து கொண்டிருக்கின்றது. அவனுக்கு உதவி செய்வதற்காக யாழ்ப்பாணம் அழைத்து வந்தேன்.

### இடம்பெயர்ந்தவர்களை நம்பி சல்லிக்காசும் கொடுக்க எந்த நிறுவனமும் தயாரில்லை

மக்களுக்கு ஏதேதோ எல்லாம் செய்யப் போவதாகவும் அவர்களின் வாழ்வினை சுபீட்சப்படுத்தவே வந்தவர்கள் போலவும் சொல்லிக்கொண்டு குடாநாட்டில் புற்றீசல்களாய் முளைத்துவரும் வங்கிகள், நிதி நிறுவனங்கள் என்பவற்றை ஒன்றுகூட தவறவிடாது நண்பனுடன் ஏறி இறங்கினேன். ஆனாலும் எந்தவொரு நிறுவனமோ, வங்கியோ இடம்பெயர்ந்தவர்களை நம்பி ஒரு சல்லிக் காசு கூட கடனாகத்தரத் தயாராய் இல்லை. உழைக்க வேண்டும் என்ற வேகமிருந்தும், மீண்டும் வாழ்வை முன்னேற்ற வேண்டும் என்ற வெறியிருந்தும் போதிய நிதியின்மையால் அந்த நண்பன் வெறுங்கையோடே கிளிநொச்சிக்குத் திரும்ப வேண்டியிருந்தது.

சாதாரண மக்களுக்கென்று இல்லாமல் இடம்பெயர்ந்த அரச உத்தியோகத்தர்களுக்குக்கூட எந்தவொரு வங்கியும் கடன் கொடுப்பதை விரும்பவில்லை. ஏதோவொரு காரணம் சொல்லி அவர்களின் கடன் கோரிக்கைகளைத் தட்டிக் கழிப்பதில் மட்டும் அவை கெட்டித்தனமாய்ச் செயற்படுகின்றன.

இதைவிட இன்னொரு வகையிலும் இடம்பெயர்ந்தோர் உளரீதியாக நெருக்கீடுகளை எதிர்நோக்குகின்றனர். அவர்கள் புதிய தொழில் முயற்சிகளில் இறங்கும்போது ஏற்கனவே குறித்த தொழிலில் ஈடுபட்டிருக்கும் போட்டியாளர்களால் மறைமுகமாக நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடுகிறது. அந்த நெருக்கீடுகளை ஒரு வித தைரியத்தோடு எதிர்கொண்டால் 'நீ வன்னியில இருந்து வந்தவன்தானே. அங்க ஆரோட திரிஞ்சனி எண்டு எல்லாருக்கும் தெரியும். இப்ப அதைச் சொன்னால் என்ன நடக்கும் எண்டு தெரியும்தானே' என்கிற தோரணையில் வெருட்டல்களும் இத்தகைய சக வர்த்தகப் போட்டியாளர்களால் விடுக்கப்படுவதாக புதிதாகத் தொழில்நிலையம் ஒன்றைத் திறந்துள்ள நண்பர் ஒருவர்.

### போர் முடிந்து ஒரு வருடம் பறந்துவிட்டது நெருக்கீடுகள் அழுத்தங்களின் மத்தியில்...

இவையெல்லாவற்றையும் விட அரச அதிகாரிகள் சிலரின் தான்தோன்றித் தனமான செயற்பாடுகளும் மக்களுக்கு கிடைக்க வேண்டிய நிவாரண உதவிகளை தாமதப்படுத்துவதாக மக்களில் பலர் இப்போதும் குறைபட்டுக் கொள்கிறார்கள். ஒருதலைப் பட்சமாக நடந்து கொள்ளும் இத்தகைய அரச அதிகாரிகள் மக்களுக்கான செயற்பாடுகளில் தீவிரமாக இறங்காதிருப்பதோடு அவற்றினை துணிந்து கேட்போரையும் தரக்குறைவான வார்த்தைப் பிரயோகங்களைக் கொண்டு அலட்சியப்படுத்தி விடுகிறார்கள்.

இதுபோன்ற பல்வேறு நெருக்கீடுகளையும் அழுத்தங்களையும் சுமந்தபடிதான் - போர் முடிந்து ஒரு வருடம் கழிந்தபின்னும் - வாழ்ந்து கொண்டிருக்கிறார்கள். தொடர்ந்து பெருகிக் கொண்டேயிருக்கும் அவர்களின் கண்ணீரை நிரந்தரமாகத் துடைக்க ஏதாவது ஆக்கபூர்வமான முயற்சிகளைச் செய்வதே முள்ளிவாய்க்கால் பேரழிவுகளை அவர்கள் தமது ஞாபகக் குப்பையிலிருந்து தூக்கியெறிய வழி சமைக்கும். அதை விடுத்து வன்னி அகதிகள் இன்னமும் உணவுக்கும், உடமைகளுக்கும் ஏங்கித் தவித்துக் கொண்டிருக்கையில் பெரும் பணத்தைக் கொட்டி புலம்பெயர் நாடுகளிலோ வேறெந்த இடத்திலோ முள்ளிவாய்க்கால் பேரழிவின் ஓராண்டுப் பூர்த்தியை தமிழ் மக்கள் அனுஷ்டிப்பதால் எந்தப் பலனும் எவருக்கும் ஏற்பட்டுவிடப் போவதில்லை. அவ்வாறு அநியாயமாகச் செலவழியப் போகும் பணத்தைக் கொண்டு வன்னியிலிருந்து இடம்பெயர்ந்து வாழ வழி தெரியாமல் நிற்கும் ஒரு சிலரின் வாழ்வையாவது வளம்படுத்த முடிந்தால் அதுவே புண்ணியமாய்ப்போகும்.

ஓரணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றியுடன் வாழ்த்தி வரவேற்கின்றோம்



தமிழ் மக்களின் தன்னிகரில்லாத் தலைவர், ஓய்வில்லா மக்கள் சேவையினால் அரசியல் வானில் உன்னத நிலையை அடைந்தவர்

மாண்புமிகு

**கே.என்.டக்ளஸ்தேவானந்தா**

(செயலாளர் நாயகம், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சி )

பாரம்பரிய கைத்தொழில், சிறுகைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர்

அவர்கள்



உயர்திரு. **முருகேசு சந்திரகுமார்** அவர்கள்

நாடாளுமன்ற உறுப்பினர், நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித்தலைவர்



உயர்திரு. **சில்வேஸ்த்திரி அலன்டீன்** அவர்கள்

நாடாளுமன்ற உறுப்பினர் ஆகியோர் மல்லாகம் பழம் பிள்ளையார் ஆலய முன்றிலில் இன்று வலி.வடக்கு வாழ் மக்களால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் வரவேற்பு விழாக் கூட்டத்திற்கு வருகை தரவிருப்பதையொட்டி அவர்களால் கடந்த காலங்களில் மேற்படி ஆலயத்திருப்பணிகளிக்காக வழங்கிய ஆதரவை நன்றியுடன் நினைவு கூர்ந்து வருக வருக என வாழ்த்தி வரவேற்கின்றோம்.

(98322)

**பழம்பதி தேவஸ்தான சபை.**


## சேக்கிழார் குருபூசை

யாழ்ப்பாணம், மே 16

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையின் ஏற்பாட்டில் சேக்கிழார் குருபூசை எதிர்வரும் புதன்கிழமை மு.ப. 9.30 மணியளவில் யாழ். இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை அனுசரணையுடன் நாவலர் ஆச்சிரம மண்டபத்தில் நடைபெறும். ஆர்வலர்களை அழைக்கின்றனர் சைவபரிபாலன சபையினர். (ஓ)

## கும்பாபிஷேகம்

மீசாலை திருநீலகண்ட வெள்ளைமாவடிப் பிள்ளையார் ஆலய மகா கும்பாபிஷேகம் எதிர்வரும் 4 ஆம் திகதி வெள்ளிக்கிழமை அதிகாலை 5.50 இற்கு நடைபெறும்.

கும்பாபிஷேக கிரியைகள் எதிர்வரும் முப்பதாம் திகதி ஆரம்பமாகி அடியாகள் எண்ணெய்க்காப்பு சாத்துதல் இரண்டாம் திகதி புதன்கிழமை மு.ப. 10 மணி தொடக்கம் மறுநாள் மாலை 4 மணி வரை நடைபெறும்.

## திறந்த பல்கலை அறிவிப்பு

யாழ்ப்பாணம், மே 16

இலங்கை திறந்த பல்கலைக்கழக யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தில் 2010ஆம் கல்வியாண்டுக்கான சட்டவியல் கற்கை நெறியின் தெரிவுப் பரீட்சை முடிவுகள் மற்றும் கணனி விஞ்ஞான இளமாணிப்பட்ட கற்கை நெறிக்கான தெரிவுப் பரீட்சை முடிவுகள் வெளியாகியுள்ளன. யாழ். பிராந்திய நிலைய அறிவித்தல் பலகையில் முடிவுகளைப் பார்வையிடலாமென இணைப்பாளர் அறிவித்துள்ளார்.

இலங்கைதிறந்த பல்கலைக் கழகத்தினால் 2010/2011 கல்வியாண்டுக்கான ஆய்வுகூட தொழில் நுட்பக்கற்கைநெறிக்குரிய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பப் படிவங்களை யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்ப முடிவுநாள் எதிர் வரும் 31 ஆம் திகதி.

இலங்கை திறந்த பல்கலைக் கழக யாழ்ப்பாணப் பிராந்திய நிலையத்தில் 2010/2011 ஆம் கல்வியாண்டுக்கான எந்திரவியல் தொழில் நுட்ப கற்கை நெறிக்கான மீள் பதிவுகள் எதிர் வரும் 18, 19 ஆம் திகதிகளில் யாழ். பிராந்திய நிலையத்தில் நடைபெறும்.


30 நாட்களைக் கொண்ட விசேட தபால் மூல ஆங்கிலப் பாடநெறி

ஆங்கிலம் பேசக் கற்போம் ! வெற்றி பெறுவோம்

நீங்கள் இருக்கும் இடத்தில் இருந்து கொண்டே எம்முடன் இணைந்து எளிய நடையில் தமிழ் மூல விளக்கத்துடன் ஆங்கிலம் படிக்கலாம்.

பாடநெறியில் இணையும் எல்லோருக்கும் இவைகள் வழங்கப்படும்

பெயர் /முகவரி என்பவற்றை தெளிவாக குறிப்பிட்டு 0773-123 523 க்கு SMS செய்யுங்கள்.



10 பாடத்தொகுதிகள் / Spoken English Video CD ஒன்று Dialog Sim Card ஒன்று Video cd வழிகாட்டி புத்தகம் / அடையாள அட்டை Diploma in English சான்றிதழ் ஒன்று என்பன எல்லாம் வழங்கப்படும்.

எமது Diploma சான்றிதழ் உள்நாட்டு வெளிநாட்டு வேலை வாய்ப்பை பெற நேர்முகப்பரீட்சைகளுக்கும் இச்சான்றிதழ் தகுதி பெற்றது

மேலதிக விபரங்களுக்கு பெயர், முகவரியுடன் 20/= பெறுமதியான 2 முத்திரை அனுப்பி பெறலாம்.

UNION EDUCATIONAL INSTITUTE

P.O. BOX 143, KANDY, SRI LANKA. Call: 0817 918 981 / 0773 123 523


# மரண அறிவித்தல்கள்

## வேலுப்பிள்ளை செல்லாச்சி



மண்டைதீவு, 4ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இல.16, மடம்வீதி, யாழ்ப்பாணத்தை வதிவிடமாகவும் கொண்ட வேலுப்பிள்ளை செல்லாச்சி நேற்று (15.05.2010) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வேலுப்பிள்ளையின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான மருதம் - சொர்ணம் தம்பதியரின் புத்திரியும் நிர்மலா (கிருபா, ஜேர்மனி) வின் அன்புத் தாயும் விமலதாஸ் (ஜேர்மனி) அவர்களின் அன்பு மாமியும் ஜனு, ஜெயுசன் ஆகியோரின் பேர்த்தியும் வியாளாச்சி, தங்கமேனி, இரா மையா, அமிர்தமணி, காலஞ்சென்றவர்களான கண்மணி, கண்ணகை (நீற்றா), பாலாமணி மற்றும் பூமணி, யோகம் (இந்தியா) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சின்னராசா மற்றும் தேவி, கணபதிப்பிள்ளை, காலஞ்சென்ற தங்கவேல் மற்றும் அந்தோனிப்பிள்ளை (தங்கராசா, இந்தியா) ஆகியோரின் மைத்துனியும் எலிசபெத், நீற்றம்மா (நோர்வே), காலஞ்சென்ற டெல்மோ மற்றும் டெல்மா, டெய்சி, றோசவின், கணேஸ்வரி, கமலேஸ்வரி, கண்ணதாசன் (சுவிஸ்), கலாவதி, அகிலன் (நோர்வே), சைலஜா, செல்வராஜ் (கப்பல்), வில்வராஜ் (இந்தியா), சிவராஜ் (சுவிஸ்), காலஞ்சென்ற அன்புக்கரசு மற்றும் பாஸ்டர் அறிவழகன் (இந்தியா), அன்பழகன் (இந்தியா), அருள்யோதி (இந்தியா), அருள்வேந்தன் (இந்தியா), கிருபாகரன் (இந்தியா), பிரதீபன் (இந்தியா) ஆகியோரின் பெரியதாயும் ரம்ணி, சிறீரயனி, காலஞ்சென்ற ஜாலினி மற்றும் காந்தி ஆகியோரின் அன்பு மாமியும் ஆவார்.

அன்னாரின் அடக்க ஆராதனை இன்று (16.05.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெற்று பூதவுடல் கொட்டடி சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இல.16, மடம் வீதி, யாழ்ப்பாணம்.* (98137)

தகவல்: *ம.தங்கமேனி (சகோதரி).*

## மாணிக்கர் தம்பிப்பிள்ளை



குப்பிளான், கேணியடியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட மாணிக்கர் தம்பிப்பிள்ளை (மணியம்) நேற்று(15.05.2010) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப் படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனை வரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கேணியடி, குப்பிளான்.* (98325)

தகவல்: *இரா. ஜெயபக்குமார் (பெறாமகன்).*

## செல்லையா அருணாசலம்

**(ஓய்வு பெற்ற தபால் அதிபர்)**



இராமலிங்கம் வீதி, கல்வயல், சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட செல்லையா அருணாசலம் கடந்த (14.05.2010) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லையா - தெய்வானைப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான அம்பலவாணர் - மீனாட்சிப்பிள்ளை தம்பதியினரின் அன்பு மருகனும், மகேஸ்வரியின் அன்புக் கணவரும், பொன்னம்மா, காலஞ்சென்ற கனகம்மா மற்றும் மங்கையர்க்கரசி, கதிரவேலு ஆகியோரின் அன்புச் சகோதரனும், விஜயரூபன், கிருபாரூபன், றோகினி, விக்னவிநாயகர் ஆகியோரின் பாசமிகு தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.05.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக சாவகச்சேரி கண்ணாடிப் பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*இராமலிங்கம் வீதி, கல்வயல், சாவகச்சேரி.* (98313)

தகவல்: *அ.கிருபாரூபன் (மகன்).*




ARRUL GLOBAL EXPRESS

INTERNATIONAL COURIER & CARGO SERVICES



- வெளிநாடுகளுக்கான தபால்கள், பொதிகள் மற்றும் ஆவணங்கள் 48 - 72 மணித்தியாலங்களில் ஒப்படைக்ப்படும்.
- 05 Kg, 10Kg க்கு மேற்பட்ட பொதிகளுக்கு 30 % விஷேட சலுகை.
- Flask, Gas Cooker, Iron Box, Search Light, Hot Box, என்பன அன்பளிப்பாக வழங்கப்படும்.

இல 1, பிறவுண் வீதி, நாவலர் வீதி சந்தி, யாழ்ப்பாணம் T.P:- 021 222 6113 Email :- arrulgex@gmail.com


# மரண அறிவித்தல்

## திருமதி சின்னத்தம்பி மனோன்மணி

கல்வத்தை, வதிரி, கரவெட்டியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சின்னத்தம்பி மனோன்மணி அவர்கள் நேற்று (15.05.2010) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - பத்தினிபிள்ளை தம்பதியரின் சிரேஷ்ட புதல்வியும் காலஞ்சென்ற வல்லிபுரம் சின்னத்தம்பியின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சிதம்பரநாதன், சற்குணநாதன், முருகவேள், பசுபதிபிள்ளை, திலகவதி மற்றும் இராஜேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான மனோன்மணி, துரைராசா (முன்னாள் உப வேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்) மற்றும் Dr. கந்தசாமி, வீரா, ரதி, ஜெயராணி ஆகியோரின் அன்பு மைத்துனியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக ஆலங்கட்டை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*கல்வத்தை, வதிரி, கரவெட்டி.* (96610)

தகவல்: *திருமதி து.இராஜேஸ்வரி (சகோதரி).*

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# கடும் உழைப்புக் குடாநாட்டில்..............
# பணமும் பயனும் பிறர் கையில்!

## இதனை மாற்றி அமைக்க உரியவர்கள் கரிசனையோடு செயற்படுவது இனி எப்போது?

கடந்த 30 ஆண்டு கால போர் தமிழர் தாயகத்தில் ஒய்வுக்கு வந்து



ஓராண்டு நிறைவடைகிறது. நீண்ட காலப் போரின் வடுக்களினால் சின்ன பின்னமாகி - சிதறி ஏதிலிகளாக இடத்துக்கிடம் ஓடி ஓடிக் களைத்துப்போன மக்கள் கடந்த ஒரு வருடமாக நிம்மதியாக மூச்சுவிடக்கூடிய ஒரு இடைக் கால அமைதிநிலை நிலவுகிறது.

இந்தச் சுமுகமான சூழ்நிலையை சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு இலங்கை முழுவதிலும் சமூக, பொருளாதார, அபிவிருத்திக் கட்டமைப்புக்களில் மாற்றங்கள் வெகு வேகமாக நிகழ்ந்து வருகின்றன. இலங்கையின் சரிந்து போன பொருளாதாரத்தை தூக்கி நிறுத்துவதற்கு அரசாங்கம் ஒரு புறம் வேகமாகச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறது. மறுபுறத்தில் தனியார் வர்த்தகத் துறையை லாபத்தின் உச்சத்துக்கு கொண்டு செல்லப் பணப் பெருச்சாளிகள் முயன்று கொண்டிருக்கிறார்கள். வர்த்தக நிறுவனங்கள், வங்கிகள், ஹோட்டல்கள், அடுக்குமாடி வீடுகள், கம்பனிகள் என அனைத்தும் புதிது புதிதாய் முளைத்துக் கொண்டிருக்கின்றன.

இந்தச் சமூக, பொருளாதார, அபிவிருத்திக் கட்டமைப்பின் முன்னேற்றங்கள் யாழ்ப்பாணத்தையும் விட்டு வைக்கவில்லை. இலங்கையின் மிக முக்கிய வர்த்தகக் கேந்திர நகரமாக யாழ்ப்பாணம் திடீரென மாறியிருக்கிறது. இந்த வர்த்தக நடவடிக்கைகளின் நோக்கங்கள், சாதக பாதகங்கள் என்ன என்பது பற்றிக் கடந்த ஞாயிறு வெளியான கட்டுரையில் நாம் புட்டுக் காட்டியிருந்தோம். இப்போது யாழ். மக்களுக்கு எழுந்துள்ள மற்றொரு நெருக்கடி - பிரச்சினை குறித்தும் சுட்டிக்காட்ட வேண்டிய தேவை எழுந்துள்ளது.

போருக்கு முன்னர் யாழ்ப்பாணம் விவசாய, கடலுணவு, கைத்தொழில் துறைகளில் கோலோச்சிய ஒரு மாவட்டமாக இருந்தது என்பது அனைவரும் அறிந்தது. போர் ஆரம்பித்ததன் பின்னர் அந்த நிலை படிப்படியாகக் அடிபட்டுப்போய் இப்போது அனைத்தையுமே இழந்த ஒரு மாவட்டமாக இருக்கிறது யாழ்ப்பாணம். தற்போது நிலவும் சுமுகமான நிலையைப் பயன்படுத்தி யாழ்ப்பாணத்தில் உள்ள விவசாயிகள், கடற்றொழிலாளர்கள், கைத்தொழில் துறையினர் ஆகியோரும் தமது உற்பத்திகளைப் பெருக்குவதன் மூலம் மீண்டும் 30 வருடங்களுக்கு முன்னர் தாம் இருந்த நிலையை . எட்டிவிட எண்ணுகிறார் கள். இதற்காக அவர்கள் தமது தொழில்களை விஸ்தரித்து லாபம் ஈட்டி இழந்துபோன தமது பொருளாதாரத்தை மீண்டும் கட்டியெழுப்ப அயராமல் பாடுபட்டு வருகின்றனர். எனினும் அவர்களின் இந்த முயற்சிகளுக்குத் தகுந்த பலாபலன் - வெகுமதி கிடைப்பதில்லை என்ற குற்றச்சாட்டு இப்போது பல்வேறு மட்டங்களிலும் எழுந்துள்ளது.

விவசாயம், கடற்றொழில் துறைகள் யாழ். குடாநாட்டின் பொருளாதார, அபிவிருத்திக் கட்டுமானங்களில் பாரிய செல்வாக்கு செலுத்துகின்றமை அனைவருக்கும் தெரியும். இந்த இரு துறைகளும் யாழ்ப்பாண மக்களின் இரண்டு கண்கள் போன்றவை. இவற்றை வைத்துக் கொண்டுதான் அவர்கள் தமது அன்றாட வாழ்வியலையும், எதிர்கால நடவடிக்கைகளையும் தீர்மானிக்கிறார்கள். அவர்களுடைய வாழ்வில் இந்த இரண்டு பிரதான தொழில் துறைகளும் பின்னிப் பிணைந்துள்ளன. அத்துடன் இந்த இரு துறைகளும் அவர்களுக்கு நன்கு கை தேர்ந்த மூலாதாரங்களாக உள்ளமையால் அவற்றை வைத்துப் பெரும் லாபத்தை ஈட்டக்கூடிய சக்தியும், வலிமையும் அவர்களிடத்தில் உள்ளது.

விவசாயத் துறையை எடுத்துக் கொண்டால் அது யாழ். மக்களின் பொருளாதார அடிநாதமாக விளங்குகின்றது. குடாநாட்டுச் சனத்தொகையில் கணிசமான பங்கினர் விவசாயத் துறையில் விரும்பி ஈடுபடுபவர்களாக உள்ளனர் என்பது தெரிந்த விடயம். அதிலும் குறிப்பாக இயற்கையாகக் கிடைக்கும் வளங்களை வைத்துக் கொண்டு விவசாயத்தில் வித்தை காட்டுவதில் யாழ். விவசாயிகளை மிஞ்சுவதற்கு யாரும் இல்லை என்று தான் சொல்ல வேண்டும். நவீன இயந்திரங்கள், செயற்கைப் பசளைகள், கிருமிநாசினிகள் எனப் புதிது புதிதாக விவசாயச் சந்தைகளில் பொருள்கள் குவிந்து கொண்டிருக்கும் வேகமான உலகத்தில், இப்போதும் மாடு பூட்டி கலப்பைபிடித்து நிலத்தைப் பண்படுத்தி, இலைகுழைகளையும், கால்நடைகளின் எச்சங்களையும் பசளையாக்கி இயற்கை வளங்களின் மூலம் விவசாயத்தில் விந்தை நிகழ்த்தும் அளவுக்குப் பெயர் போனவர்கள் குடா நாட்டு விவசாயிகள்.

இந்த விவசாயிகள் இப்போது தமது பொருளாதாரத்தை பெருக்குவதற்காக விவசாய நடவடிக்கைகளை பெரும் எடுப்பில் ஆரம்பித்திருக்கிறார்கள். குறிப்பாக நெல், வெங்காயம், மரக்கறி வகைகள், புகையிலை, திராட்சை, வாழை ஆகியவற்றை பயிரிடுவதில் அவர்கள் அதிக ஆர்வத்துடன் ஈடுபட்டு வருகின் றனர். யாழ்ப்பாணத்தில் கடந்த பல வருடங்களாகப் பற்றைக்காடுகளாகக் கவனிப் பாரற்றுக் கிடந்த காணிகள் அனைத்தும் வெகு வேகமாக துப்பரவு செய்யப்பட்டு விவசாய நிலங்களாக மாறிவிட்டன. எங்கு பார்த்தாலும் வாழைத் தோட்டங்களும், வெங்காயப் பயிர்களும், நெல்வயல்களும், மரக்கறி வகைகளுமாக காணிகள் பச்சைப்பசேல் என்று காட்சியளிக்கின்றன. யுத்தத்தினால் அனைத்தையும் இழந்துபோன போதிலும் உள்ளதை வைத்துக் கொண்டு விவசாய நடவடிக்கைகளை ஆரம்பிப்பதில் குடாநாட்டு நாட்டு விவசாயிகள் காட்டிவரும் அக் கறை பாராட்டப்பட வேண்டியதும் - தட்டிக்கொடுக்கப்பட வேண்டியதுமாகும். கடந்த காலத்தில் அவர்கள் இழந்து போனவற்றுக்கு எந்தவொரு நட்டஈட்டு கொடுப்பனவும் வழங்கப்படாத நிலையில் அவர்களின் இந்த முயற்சி எதை இழந்தாலும் தமிழன் மீண்டும் எழுவான் - விழமாட்டான் என்பதை பறைசாற்றுவதாக அமையும் என்பது திண்ணம்.

யாழ். விவசாயிகளால் உற்பத்தி செய்யப்படும் வெங்காயம், மரக்கறி வகைகள், வாழைப்பழம், திராட்சை, புகையிலை என்பவற்றுக்கு தென்னிலங்கைச் சந்தைகளில் பெரும் கிராக்கியும், கேள்வியும் இருக்கிறது - இப்போதும் இருந்து வருகின்றது என்பதை யாரும் மறுக்கமாட்டார்கள். காரணம் இந்தப் பயிர்களின் உற்பத்தியில் யாழ்.விவசாயிகள் விண்ணர்களாகவே இருக்கிறார்கள் என்பது தென்னிலங்கைக்கும் தெரியும். வரண்ட பூமியானாலும் மேல்குறிப்பிட்ட பயிர்களை அதிகளவில் உற்பத்தி செய்வதில் யாழ். விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் தென்னிலங்கை வியாபாரிகளின் பார்வை இப்போது யாழ்ப்பாண விவசாயிகள் மீது விழுந்துள்ளது. யாழ்ப்பாண விவசாயிகளின் உற்பத்திகளை தென்னிலங்கைக்கு கொண்டு சென்று விற்பனை செய்வதன் மூலம் கொள்ளை லாபம் ஈட்டும் முயற்சியில் தென்னிலங்கை வியாபாரிகள் ஈடுபட்டுள்ளார்கள். இதற்காக அவர்களின் வாகனங்கள் இப்போது ஏ-9 வீதியூடாக 'விர்' என்று யாழ்ப்பாணம் விரைகின்றன. இங்கு யாழ். விவசாயிகளின் உற்பத்திப் பொருள்களை அள்ளிக்கட்டிக் கொண்டு அவை மீண்டும் தென்னிலங்கைக்குப் பறக்கின்றன. தென்னிலங்கைச் சந்தைகளில் அந்தப் பொருள்களுக்கு படு சூடு. கொண்டு சென்ற ஒரு சில மணித்தியாலங்களிலேயே வைத்த இடம் தெரியாமல் அனைத்தும் விற்றுத் தீர்ந்து விடுகின்றன. வாகனங்கள் மீண்டும் யாழ்ப்பாணம் வருகின்றன. இவ்வாறு ஒரு சங்கிலித் தொடராக வியாபாரம் சக்கைபோடு போடுகிறது. யாழ். விவசாயிகளின் பொருள்கள் தென்னிலங்கைச் சந்தைகளுக்கு வேகமாகப் பறக்கின்றன. இதனால் பெருந்தொகையான லாபத்தை இந்த தென்னிலங்கை வியாபாரிகள் அள்ளிக் கொண்டு செல்கிறார்கள். இப்போது அவர்களின் சட்டைப் பைகளில் லட்சக் கணக்கான ரூபாக்கள். யாழ். விவசாயிகளின் கைகளில் வெறும் நூறு, இருநூறு ரூபாக்கள் தான். இவர்கள் மாடாய் உழைத்தும் என்ன பலன்? கஷ்டப் படாமல் சும்மா இருந்துவிட்டு லட்சக்கணக்கில் அள்ளிச் செல்கிறார்கள் அந்த வியாபாரிகள். பாவம் இந்த யாழ்ப்பாண விவசாயிகள். யுத்தம் நடந்த பொழுது எப்படியிருந்தார்களோ அப்படியே தான் இப்பொழுதும் அவர்கள். எந்த முன்னேற்றமும் அவர்கள் வாழ்வில் இல்லை.

இப்போதுள்ள சுமுகமான சூழ்நிலையில் வாழை, புகையிலை, திராட்சை, வெங்காயம், மரக்கறி வகைகள் என்பவற்றைப் பெரியளவில் பயிரிட்ட அவர்களுக்கு வெறும் ஏமாற்றமே மிஞ்சுகிறது. இந்தப் பயிர்கள் தென்னிலங்கைச் சந்தைகளில் படு சூடாக உள்ள போதும் அதனால் கிடைக்கும் லாபம் எமது கைகளுக்குக் கிட்டவில்லையே என்ற பெரும் அங்கலாய்ப்புடனும் - மனவேதனையுடனும் 'சுமதும் பிள்ளையை அவள் தான் பெற வேண்டும்' என்பதைப் போல மீண்டும் தமது விவசாய நடவடிக்கைகளில் மூழ்கிப்போய் விடுகிறார்கள்.

இதே நிலைமைதான் இப்போது யாழ்ப்பாண மீனவர்களுக்கும் ஏற்பட்டிருக்கிறது. கடந்த கால போரினால் பல லட்சம் பெருமதியான படகுகள், இயந்திரங்கள், வலைகள் என்பவற்றை முற்றாக இழந்தபோதும் தற்போது கடல் வலயத் தடைச்சட்டம் நீக்கப்பட்டதையடுத்து முழுமூச்சுடன் தொழில் இறங்கியுள்ளார்கள் அவர்கள். காற்று, மழை, வெயில் என்று பாராது எஞ்சியுள்ள கட்டுமரங்கள், படகுகளை வைத்துக் கொண்டு கடலில் கஷ்டப்படும் அவர்களுக்கும் உழைப்புக்கேற்ற லாபம் அவர்களின் கைக்கு வந்துசேர்வதில்லை. அவற்றையும் இந்தத் தென்னிலங்கை வியாபாரிகள் வறுகிச் சென்று விடுகிறார்கள். தொழிலுக்குச் சென்ற மீனவர்கள் கரைதிரும்பும் முன்னரே அதிகாலை வேளையிலேயே கரைக்கு வந்து காத்திருக்கும் 'ஐஸ்' வாகனங்கள் மீனவர் கரைதிரும்பி மீன்களை கொட்டியதும் அவற்றை அப்படியே 'லபக்' என்று அள்ளிச் சென்று தென்னிலங்கைச் சந்தைகளில் பெருத்த லாபத்தை சம்பாதிக்கின்றன. என்ன செய்வது? தமக்குள்ளேயே மனம் நொந்துவிட்டு அடுத்த நாள் கடலில் இறங்குகிறார்கள் மீனவர்கள்.

இவ்வாறு எமது விவசாயிகள், கடற்றொழிலாளர்களின் உழைப்பு எமக்குப் பிரயோசனம் தராமல் வேறொருவர் லாபம் ஈட்ட வழிகோலியுள்ளமையை இதுவரை இங்குள்ள அரசியல்வாதிகளோ, அரச அதிகாரிகளோ, அரச சார்பற்ற நிறவனங்களோ சிந்திக்காமல் அல்லது தெரிந்தும் தெரியாதது போன்று மௌனமாக இருக்கின்றமை மிகவும் வேதனையான ஒரு விடயம்.

எனவே தொடர்ந்து வேடிக்கை பார்த்துக்கொண்டிருக்காமல் யாழ்ப்பாணத்தின் உற்பத்திகளை உரிய முறையில் சந்தைப்படுத்தி அதனால் கிடைக்கும் லாபத்தை யாழ்ப்பாண மக்கள் அனுபவிக்கக் கூடிய சந்தை வாய்ப்புக் கட்டமைப்பு ஒன்று நிறுவப்பட வேண்டியதன் அவசியம் இப்போது எழுந்துள்ளது. இந்த விடயத்தில் நாம் அனைவரும் இணைந்து நன்கு சிந்தித்து செயலாற்ற வேண்டியுள்ளது. யாழ்ப்பாண உற்பத்திகளை எமது மக்களே தென்னிலங்கைக்குக் கொண்டு சென்று சந்தைப்படுத்தக்கூடிய ஏற்பாடுகள்



செய்யப்பட வேண்டும். இந்த விடயத்தில் வர்த்தக நுகர்வோர் அமைச்சு, ஏற்றுமதி அபிவிருத்திச் சபை, வர்த்தக முதலீட்டுச் சபை என்பன அதிக அக்கறை காட்டிச் செயற்பட வேண்டும். யாழ்ப்பாணத்தில் உள்ள அரச உயர் அதிகாரிகள் இந்த விடயத்தில் அதிக சிரத்தை எடுக்க வேண்டும். எமது விவசாயிகளும், கடற்றொழிலிளார் களும் தமது உற்பத்திகளை உரிய முறையில் சந்தைப்படுத்தி அதனால் கிடைக்கும் லாபங்களை அவர்கள் அனுபவிக்கக்கூடியவாறு சந்தை வாய்ப் புக்களை ஏற்படுத்திக் கொடுக்க வேண் டிய பொறுப்பும் கடமையும் யாழ்ப்பாணத் தில் இருக்கும் அரசின் உயர் மட்டங் களைச் சார்ந்ததாகும். காலத்தின் தேவை யறிந்து இதனை அவர்கள் விரைவில் துரிதமாகச் செய்ய வேண்டும். செய் வார்களா என்ன? அல்லது தங்களுக்கு மாதச் சம்பளம் தானே என்று இப்பிரதேச உழைப்பாளிகளின் உயர்ச்க்கு துணை போகாத மந்தங்களாகவே இருப்பார்களா.....? ******

-அதிரன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யா/மகாஜனக் கல்லூரி தெல்லிப்பழை பாடசாலை அபிவிருத்திச் சங்கப் பொதுக் கூட்டம்

மேற்படி சங்கப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 28.05.2010 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் துரையப்பாபிள்ளை மண்டபத்தில் நடைபெறவுள்ளது. அப் பொதுக் கூட்டத்தில் கல்லூரி மாணவர்களது பெற்றோர் மற்றும் நலன் விரும்பிகள் அனைவரும் தவறாது கலந்து கொண்டு புதிய நிர்வாக சபையைத் தெரிவுசெய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

செயலாளர். (சி/567687) தலைவர்.


# உடற்பயிற்சிப் போட்டிகள்

யாழ்ப்பாணம், மே 16

தீவக வலயப் பாடசாலைகளிடையேயான வலய மட்ட உடற் பயிற்சிப் போட்டிகள் நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை ஊர்காவற்றுறைபுனித அந்தோனியார் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளன.

இப் போட்டிகள் காலை 8.30 இற்கு ஆரம்பமாகும் எனவும் கோட்டங்கள் ஊடாக விண்ணப்பித்த பாடசாலைகளுக்கு இது குறித்து அறிவிக்கப்பட்டுள்ளது என்றும் ஆகவே பாடசாலை அணிகள் தவறாது உரிய நேரத்திற்கு சமுகம் தரவேண்டும் எனவும் வலயக் கல்விப் பணிப்பாளர் இராதாகிருஸ்ணன் கேட்டுக்கொண்டுள்ளார். (எ-267)

## நாடாளுமன்ற உறுப்பினர்களை கௌரவிக்கும் நிகழ்வு

யாழ்ப்பாணம், மே 16

பரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறு கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, முருகேசு சந்திரகுமார், சில்வேஸ்திரி அலன்ரின் ஆகியோர் நாடாளுமன்ற உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டமையைச் கௌரவிக்கும் முகமாக இன்று ஞாயிற்றுக்கிழமை பி.ப. 4 மணிக்கு வரவேற்பு நிகழ்வு இடம்பெறவுள்ளது.

மு.நாகேந்திர சர்மா தலைமையில் மல்லாகம் பழம்பதி விநாயகர் ஆலய முன்றலில் இந்த நிகழ்வு இடம்பெறும். (50-201-86)

## சட்ட விரோதமாக மணல் ஏற்றி வந்த வாகனங்களின் சாரதிகளுக்கு அபராதம்

யாழ்ப்பாணம், மே 16

அனுமதிப்பத்திரமின்றி சட்ட விரோதமாக மணல் ஏற்றி வந்த 4 வாகனங்களின் சாரதிகளுக்கு சாவகச்சேரி நீதிமன்றில் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதிக்கப்பட்டது.

பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை கடந்த வெள்ளிக்கிழமை விசாரணை செய்த நீதிவான் சாரதிகளுக்குத் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்தார். அபராதத் தொகையைச் செலுத்தத் தவறின் தலா ஒரு மாதம் சாதாரண சிறைத்தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார்.

அத்துடன் வாகனங்களை தலா ஒரு லட்சம் ரூபா வீதம் பிணையில் செல்ல அனுதித்து வாகன உரிமை தொடர்பான விசாரணைகள் ஜுலை ஆறாம் திகதி நடைபெறுமெனவும் நீதிவான் உத்தரவிட்டார். (எ-207)

## வர்த்தகருக்கு அபராதம்

யாழ்ப்பாணம், மே 16

சாவகச்சேரி நகர்ப் பகுதியில் காலாவதியான உணவுப் பொருள்களை விற்பனைக்கு வைத்திருந்த வர்த்தகருக்கு சாவகச்சேரி நீதிமன்றில் ஆயிரம் ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கினை விசாரணை செய்த நீதிவான் வர்த்தகருக்கு ஆயிரம் ரூபா அபாராதம் விதித்தார் .

அத்துடன் அபராதத் தொகை செலுத்தத் தவறின் ஒருமாத சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் கைப்பற்றப்பட்ட உணவுப் பொருள்களை அழித்துவிடுமாறும் உத்தரவிட்டார். (எ-207)


# பதவி வெற்றிடங்கள்

வி.வி.கனகரட்ன அன் கொம்பனி கட்டடங்கள் மற்றும் வீதிகள் நிர்மாணித்தலில் முன்னணி வகிக்கும் நிறுவனம் பின்வருவோரிடமிருந்து விண்ணப்பங்களைக் கோருகின்றது.

★ சிவில் பொறியியலாளர்கள்
யாழ்ப்பாணத்தை இருப்பிடமாகக்கொண்டவர்கள் வீதி மற்றும் கட்டட நிர்மாணத்தில் அனுபவம்

★ தொழில்நுட்பவியலாளர்கள்
யாழ்ப்பாணத்தை இருப்பிடமாகக் கொண்டவர்கள். அலுமினியம் பொருத்தும் வேலைகள், கண்ணாடி வேலைகள் தடுப்பு மற்றும் சீலிங் அமைப்புக்களில் அனுபவம்.
சிங்கள மொழி அறிவு மேலதிக தகுதியாகக் கணிக்கப்படும்.

தகுதியையும் அனுபவத்தையும் அனுசரித்து சம்பளப்பொதி நிர்ணயிக்கப்படும்.
உங்கள் சுயவிவரக் கோவையை உடன் சமர்ப்பிக்கவும்

**மனித வளமுகாமையாளர்**
**V.V.Karunaratne & Company**
579, Bulugaha Junction,
Kandy Road, Kelaniya.
E-mail: hr@vvkarunaratne.lk
T.P: 0773358040, Fax: 5422299



## தரம் 5 மாணவர்களுக்கு ஒரு நற்செய்தி!

இலங்கையில் உள்ள பிரபல -முன்னணி ஆசிரியர்களின் கற்பித்தல் சேவையை வீட்டில் இருந்தவாறே பெற்றுக்கொள்வதற்கு ஓர் அரிய வாய்ப்பு

# புலமைச் சுடர்

எதிர்வரும் 20.05.2010 முதல் வாரந்தோறும் உங்கள் அபிமான சுடர் ஒளி - கல்விச்சுடர் தயாரித்து வெளியிடும்

வியாழன் தோறும் 10 ரூபா விலையில்

## தரம் 5,4 மாணவர்களுக்கான முன்னோடிக் கையேடு

* முழுமையான மாதிரி வினாத்தாள் - **தரம் 05**
* அடிப்படை மாதிரி வினாத்தாள் - **தரம் 04**
* பாடரீதியான வினாத்தொகுப்பு
* இலகுவழிக் கற்றல் குறிப்புக்கள்

இன்னும் பல விடயங்களுடன்

அனைத்துப் பிரபல்ய ஆசிரியர்களினதும் பங்களிப்புடன் ஒருவார கால ஆக்கங்களை உள்ளடக்கித் தயாரிக்கப்பட்ட ஒரேயொரு முன்னோடி கற்றல் கையேடு

உங்கள் பிரதிகளைப் பெற்றுக்கொள்ள இன்றே அருகில் உள்ள உதயன் பத்திரிகை விற்பனை முகவரிடம் முற்பதிவு செய்யுங்கள்

தொடர்புகளுக்கு:
85, ஜயந்த மல்லிமாராச்சி மாவத்தை, கொழும்பு-14.
021-5677222
(விநியோகப் பிரிவு)
011-5738855
071-4273035 (ஆசிரியர்)



# VACANCIES

DEBEER CAR-REFINISHES Sunny Auto HI-BUILD LACQUER


## TECHNICAL ASSISTANTS

- Should have a Sound knowledge in spray paints and related products
- 3 Years experience in painting vehicles
- Age below 30 Yrs
- Preference will be given to those who are capable in **using 2K paints**
- Ability to communicate in **Tamil language is essential**
- Should have a valid Driving Licence
- Willing to work in any part of the Island

**Apply with complete CV and indicating the post on the top left hand corner of the Envelope to reach us within 7 days to the address below.**

General Manager,
C.P.T. CAUSEWAY PAINTS Lanka (Pvt) Ltd
15, Noel Mendis Mawatha,
Moderawila Industrial Estate, Panadura.





# STUDY IN
LONDON | CYPRUS | SINGAPORE



யாழ்ப்பாணத்தில் விசேட UK விசா தொடர்பான கருத்தரங்கும் நேர்முகத்தேர்வும்

22 மே 2010
(சனிக்கிழமை காலை 9 மணி முதல் மாலை 5 மணி வரை)

இடம் :
வீரசிங்கம் மண்டபம் - கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம்
மாணவர்களின் UK விசா சம்மந்தமான சகல சந்தேகங்களுக்கும் விளக்கமளிப்பதுடன் மாணவர்களை நேர்முகத்தேர்வு செய்து விசாக்கள் உறுதிப்படுத்தப்படும்.

9 a.m to 12.30p.m. UK visa information seminar | 1.30p.m to 5p.m. student interview

MILLENNIUM BUSINESS ACADEMY (MBA)
# 286, R. A. De Mel Mawatha, Colombo 03.
(Near the Liberty Plaza, Next to Don Karolis)
Tel: (011) 5748720, 5 748721, 0114 335044
Web: www.millmba.com
E-mail: mbaslt@yahoo.com

HOTLINE
KASTHURI 0773640136
HAKEEM 0722476000
SUMEIRA 0773640130
ABDULLAH 0774074203

Cyprus visa can be arrange within 2 week



நில்சன் (**Nielsen**) என்ற எமது கம்பனியானது உலகிலேயே சந்தை தகவல்களை சேகரிப்பதில் முன்னணியான நிறுவனமாகும். ஐக்கிய அமெரிக்காவை தலைமை இடமாக கொண்டு இயங்கும் நாம் 100க்கும் மேற்பட்ட நாடுகளில் சந்தை பற்றிய ஆய்வு நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றோம்.

இலங்கையிலும் பல்வேறுபட்ட ஆய்வுப் பணிக்காக, **சுயாதீனமான தரவு சேகரிப்பாளர்கள் (Freelance Interviewers)** பின்வரும் பிரதேசங்களில் தேவைப்படுகிறார்கள்.

- யாழ்ப்பாணம்
- வவுனியா
- கிளிநொச்சி
- முல்லைத்தீவு
- மன்னார்
- திருகோணமலை
- மட்டக்களப்பு
- அம்பாறை

தேவையான தகுதி - க.பொ.த உயர்தரம் சித்தி
வயதெல்லை : 18 - 30 வயது வரை

ஆர்வமுடையவர்கள் தங்களது சுய விபர கோவையை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்

nielsen

The Head of Human Resourses,
The Nielsen Company Lanka Pvt Ltd
No:98, D. S. Senanayake Mawatha
Colombo 8.
T.P : 0112688446 (EXT -129), Mb : 0727951608 / 0727592712


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பராய வேறுபாடோ, பால் வேறுபாடோ இன்றி மனச்சோர்வின் தாக்கத்துக்கு எவரும் உள்ளாகலாம்

### முதுமையில் மனச்சோர்வு

"எனது வரண்ட இதயத்தில், எனது ஆண்டவா,
நாள்கள் பலப்பலவாக மழை வராது விட்டது.
அடிவானம் பயங்கர நிர்வாணமாகக் கிடக்கிறது.
மெத்தென்ற முகிலொன்றின் மிக மெலிந்த
போர்வையும் இல்லாது,
குளிர் மழைக்கான தூரத்துச் சாடைக்
குறிப்பொன்றுங் கூட
மங்கலாகவும் தோற்றம் தராது உள்ளது..."

*-தாகூர்.*

பொதுவாக முதுமைப் பராயத்தில் மிக அதிகமாக ஏற்படுகின்ற, ஆனால் கவனிப்புப் பெறத் தவறுகின்ற பிரச்சினையைப் பற்றி இந்தக் கட்டுரை பார்க்க விழைகின்றது.

மனச்சோர்வு என்பது எங்களது சாதாரண வாழ்வனுபவங்களுக்குள் வந்து போகின்ற ஒன்றாக இருக்கின்றது. ஒரு ஏமாற்றம் வரும்போதோ, ஒரு இழப்பு ஏற்படும் பொழுதோ அல்லது என்ன காரணமென்று சரியாகப் புரியாத ஒரு நிலையிலோ நாங்கள் மனச்சோர்வை அனுபவித்திருப்போம். இவ்வேளைகளில் எமது மனம் உற்சாகம் குன்றியிருக்கும். கவலை எங்களை ஆக்கிரமிக்கும். இலகுவில் அழத்தோன்றும். எங்களது வாழ்க்கையில் நடந்த பல தோல்வியான அனுபவங்களை மனம் அசைபோடும். வாழ்க்கையின் நம்பிக்கை ஒளிக்கீற்றுக்குப் பதிலாக, அவநம்பிக்கை இருளாகச் சூழ்ந்திருக்கும். எடுத்ததற்கெல்லாம் அழவேண்டும் போல் இருக்கும். விரக்தியான ஒரு மனநிலை மேலோங்கும். இறப்பு பற்றிய எண்ணங்களும்," இப்பிடி இருக்கிறதை விடச் செத்துப் போனால் நல்லது" போன்ற நினைப்புக்களும் வர ஆரம்பிக்கும். நிம்மதி போய்விடும். நித்திரை குழம்பிவிடும். குறிப்பாக, அதிகாலை வரும் ஆனந்தமான நித்திரை தொலைந்து போய்விடும். பசியிருக்காது. ஒன்றிலுமே விருப்பம் இருக்காது. முன்பு ஆர்வமாக இருந்த விடயங்களில் கூட தற்போது பிடிப்பில்லாமற் போய்விடும். இவற்றுடன் உடம்பின் சக்தியெல்லாம் இழந்துவிட்டதுபோல ஒரு களைப்பு, இயலாமை ஏற்படும். முகம் சிரிப்பை மறந்துவிடும். மொத்தத்தில் மனம் சோர்வு நிலையில் உள்ளபோது நாங்கள் எமது சந்தோஷத்தைத் தொலைத்துவிட்டிருப்போம்.

## தொடர்ந்தும் இயங்கிக் கொண்டிருத்தல் முதுமையின் தாரக மந்திரமாக இருக்கட்டும்

ஒருவர் மனச்சோர்வுக்கு ஆளாகும் போது மேலே குறிப்பிட்டவற்றுள் பல குணம் குறிகளை அவர் கொண்டிருப்பார். ஆனால், பல சந்தர்ப்பங்களில், இங்கு குறிப்பிட்ட மனச்சோர்வுக்கான இயல்புகள் மிகவும் குறுகிய ஒரு நேரத்திற்கு அல்லது சில நாள்களுக்கு இருந்து விட்டு, தன்பாட்டிலேயே மறைந்துவிடும். மனமானது மீண்டும் தனது பழைய நிலைக்கு வந்துவிடும்.அவ்வாறு மறையாது இவை நீண்ட காலத்திற்கு நிலைத்திருந்து ஒருவருடைய வாழ்க்கையின் தரத்தைப் பாதித்து, அவரது நாளாந்தச் செயற்பாடுகளிற் பின்னடைவை ஏற்படுத்துமேயானால், அவ்வேளைகளில் அவை ஒரு நோய்நிலைக்குரிய இயல்புகளாகக் கொள்ளப்படும். இந்நோய் நிலையை மருத்துவ துறையில் மனச்சோர்வு (Depression) என்று அழைப்பர்.

உலகத்தில் மனிதருடைய வாழ்க்கையில் இயலாமையையும், பாதிப்பையும் பெருமளவில் ஏற்படுத்துகின்ற மிக முக்கிய நோய்களுள் ஒன்றாக இந்த மனச்சோர்வு இருக்கிறது. மனச்சோர்வு ஏற்பட்டவர்கள் உற்சாகம் குன்றி, ஆர்வம் இழந்து, பிடிப்பின்றிப் போவதனால், அவர்களுடைய வாழ்க்கையும் ஏனோதானோவென்று ஆகிவிடுகிறது. அவர்களுடைய தொழிற்படும் ஆற்றல் குறைகின்றது. வீட்டிலும், வேலை செய்யும் இடங்களிலும் தாம் ஆற்றவேண்டிய பாகத்தை திறம்படச் செய்ய முடியாமல் இருக்கும். மேலும் இவ்வேளைகளிற் கணிசமானோர் விரக்தி மேலோங்கி, தம்மைத் தாமே அழித்துவிடுவதையும் காணலாம். இந்தக் காரணங்களினால் மனச்சோர்வு எனும் நோய் உலகின் முக்கியமான நோய்களுக்குள் ஒன்றாகக் கொள்ளப்படுகிறது.

மனச்சோர்வு யாருக்கும் ஏற்படலாம். சிறிய பிள்ளைகள் தொடக்கம், முதிய பராயத்தினர் வரை, ஆண்-பெண் வேறுபாடின்றி இந்நோய் நிலைமை ஏற்படலாம். பொதுவாக எமது பிரதேசத்திற் பெண்களிலும், முதியவர்களிலும் இது சற்று அதிகமாக ஏற்படுவதனைக் காணலாம். ஆயினும் பல சந்தர்ப்பங்களில் இந்த நோய் நிலைமையானது சரியாக அடையாளம் காணப்படுவதில்லை. இதனால் நோய்க்குரிய சிகிச்சைகளும் முறையாகச் செய்யமுடியாது போகிறது. இறுதியில் நோய்வாய்ப்பட்டவரின் துன்பமே மிஞ்சுகிறது. குறிப்பாக முதுமைப் பராயத்தில் மனச்சோர்வு நிலையை அடையாளங் காணுவது அதிகளவில் தவறவிடப்படுகிறது. முதுமையில் ஏனைய உடல் நோய்களுக்குக் கொடுக்கப்படும் முக்கியத்துவம், முதியவர்களின் மனநிலைக்குக் கொடுக்கப்படாமற் போவதனாற் பல சந்தர்ப்பங்களில் முதியவர்கள் தங்களுக்குத் ஏற்படுகின்ற மனச் சோர்வினாற் பாதிக்கப்பட்டு அல்லலுறுகிறார்கள்.

மனச்சோர்வுடைய ஒரு முதியவர் எப்படி இருப்பார்? அவருக்கு மனச்சோர்வு ஏற்பட்டு விட்டது என்று எவ்வாறு அடையாளங்காணுவது? இந்தக் கட்டுரையின் ஆரம்பத்திற் குறிப்பிட்ட மனச்சோர்விற்கான பல இயல்புகள் முதியவர்களிலும் ஏற்படலாம். ஆனால், அவற்றை முதுமைப் பராயத்தில் ஏற்படுகின்ற ஏனைய வெளிப்பாடுகளோடு வேறுபடுத்தி அறிந்து கொள்வது கடினமாக இருக்கும். உதாரணமாக: மனச்சோர்வின் போது நித்திரைக் குழப்பங்கள் ஏற்படும்; முதுமையிலும் பொதுவாக நித்திரை குறைந்து, மிக எளிதில் விழிப்பு நிலை ஏற்படும். மனச்சோர்வு உள்ளபோது ஒருவருக்கு உடலின் சக்தி குன்றி, இயலாமை மேலோங்கும்; முதுமையில் இயல்பாகவே உடலில் தளர்வு ஏற்பட்டுவிடும். மனச்சோர்வில் மறதி ஏற்படும்; முதுமையில் ஏற்படும் அறளை நோய் (Dementia) நிலைமையின் போது ஞாபக மறதி என்பதே பிரதானமாக இருக்கும்.மனச்சோர்விற் பலவிதமான உடல் முறைப்பாடுகள் தோன்றும்; முதுமைப் பராயத்திற் பல நோய்களும், பற்பல முறைப்பாடுகளும் பொதுவானவை. மேலோட்டமாகப் பார்க்கின்ற பொழுது, இப்படியாக முதுமையில் ஏற்படுகின்ற மனச்சோர்வுக்கான சில இயல்புகள், அப்பராயத்தில் ஏற்படுகின்ற ஏனைய சாதாரண, அசாதாரண நிலைகளிலிருந்து பிரித்துப் பார்க்கப்பட முடியாதனவாக இருப்பதைக் காணலாம். ஆயினும், சற்று ஆழமாக அவதானிப்போமேயானால், வழமைக்கு மாறான ஏதோவொன்று ஏற்பட்டிருப்பதைக் காணலாம்." வழமையான நித்திரைக் குறைவு; ஆனால், இப்ப ஒரேயடியாய் முழிச்சுக் கொண்டிருப்பார்". "அவவுக்கு வயசு போட்டுது தானே. கொஞ்சக் காலமாய் ஞாபக மறதிதான்; ஆனால் இப்ப ஒரு இரண்டு மூண்டு கிழமையாய் ஒண்டையும் நினைவில் வைக்கிறாவில்லை". அவரோ!, அவர் கொஞ்ச நாளாய் காலமை தொடக்கம் பொழுது படும் வரைக்கும் ஏதோ ஒரு முறைப்பாட்டைச் சொல்லிக் கொண்டிருப்பார். அவருக்கு ஒரு வருத்தமும் இல்லை எண்டுதான் டொக்டர்மார் சொல்லினம்...", ஆக மேலே பார்க்கப்பட்ட மூன்று உதாரணங்களிலும் வழமைக்கு மாறான ஏதோவொன்று நடந்திருக்கின்றது என்பது புலனாகின்றது. அவ்வாறானவற்றை நாங்கள் மனச்சோர்வுக்குரிய சாத்தியப்பாடுகளாகக் கொள்ளலாம்.

இவற்றைவிட ஒருவருடைய மனம் உற்சாகமிழந்து, சோர்வுற்று, விரக்தியுடன் இருப்பதனை அவருடன் சற்று ஆதரவாகக் கதைக்கும்பொழுது புரிந்து கொள்ளலாம். கதைக்கும் பொழுது அவர் இடைக்கிடை அழலாம். அல்லது அவர் அழாதுவிட்டாலும் அவரது கண்கள் மனதின் கவலை நிலையை வெளிக்காட்டும். அவரது முகத்தில் உணர்ச்சிகளின் வெளிப்பாடுகள் குன்றியிருக்கும். அவரது உடல் அசைவுகள் குன்றும். பெருமூச்சு அடிக்கடி ஏற்படும். அவருடன் கதைக்கும்பொழுது, தனது வாழ்வில் துன்பத்தைக் கொடுத்த நிகழ்வுகளைப் பற்றியே அவர் அடிக்கடி மீட்டுக் கொள்வதனை அவதானிக்கலாம்.

எல்லாவற்றையும்விட" தான் செத்துப் போனால் நல்லது" என்று அவர் உண்மையாக எண்ணத் தலைப்படுவார். இவை மனச்சோர்வுக்குரிய முக்கிய இயல்புகள். எனவே, சற்றுப் பொறுமையாகவும், ஆதரவாகவும் அவருடைய வார்த்தைகளுக்கும், உடல் மொழிக்கும் முக்கியத்துவம் கொடுத்து உரையாடும் போது, அவரில் இருக்கிற மனச்சோர்வு வெளித்தெரிய ஆரம்பிக்கும்.

(இதய நோய் நிபுணர் வைத்தியக் கலாநிதி பூ.லக்ஷ்மன் தமது தாயாரின் நினைவாகத் தொகுத்து வெளியிட்ட 'பண் சுமந்த பாடல்' என்ற நூலில் இருந்து இக்கட்டுரை வெளியிடப்படுகிறது)

பொதுவாக, ஒருவருக்கு மனக்குழப்பமான நிலை ஏற்படும்பொழுது, நாங்கள் அதற்கு ஏதோ ஒரு காரணத்தைக் கண்டுபிடிப்போம். ஆனால், முதுமையில் ஏற்படுகின்ற மனச்சோர்வு நிலைக்குப் பல காரணங்களின் சேர்க்கையும், அவற்றுக்கிடையேயான இடைவினைகளும் முக்கிய பங்காற்றுகின்றன. முதுமைப் பராயத்தையும், அப்பராயத்தின் இயல்பாக ஏற்படுகின்ற உடல், உளத் தொழிற்பாடுகளின் பின்னடைவு மற்றும் குறைபாடு போன்றவற்றையும் விளக்கி, அவற்றை ஏற்றுக்கொள்வதில் சிக்கல்களை எதிர்நோக்குவோர் மிக எளிதில் மனச்சோர்வடைந்து விடுகிறார்கள். என்றும் பதினாறாகவோ, முப்பத்திரண்டாகவோ இருப்பது சாத்தியப்படாது என்பதனைச் சிலர் ஏற்றுக்கொள்ளவதில்லை. முதுமையிற் பல காரணங்களால் தனிமை ஏற்பட்டுவிடுகின்றது. குருவிக் குஞ்சுகள் தாம் பறக்கக் கற்றுக் கொண்டதன் பின்பு, தம் பெற்றோரைப் பிரிவதுபோல, தான் பெற்ற பிள்ளைகளும் வளர்ந்து, ஆளாகி, தனித்துவமாய் தத்தமது குடும்பங்களின் தேவைகளுக்காய் பிரிந்து எங்கெங்கோ போய்விடுவதும் [illegible] போகின்றமையும்" முதியவர்களுடைய வாழ்க்கையில் தனிமையான உணர்வைக்கொடுக்கலாம். குறிப்பாக, முதியவர் ஒருவரது வாழ்க்கைத்துணை நிரந்தரமாக அவரை விட்டுப் பிரிகின்றபோது அந்த இறப்பைத் தொடர்ந்து ஏற்படும் தனிமையும், வெற்றிடமும் மிகவும் தாக்கவன்மை கொண்டது. தனிமை ஒருவரை வாட்டுகின்ற பொழுது அவரது மனம் இலகுவிற் சோர்வடைந்து விடுகிறது.

பல முதியவர்கள், தங்களது முதுமையைச் சந்தோஷமாக ஏற்றுக் கொண்டு, தொடர்ந்து இயங்கிக் கொண்டிருப்பார்கள். இவ்வாறு "தொடர்ந்தும் செயற்றிறனோடு இயங்கிக் கொண்டிருத்தல் " (Active ageing) என்பது முதுமைப் பராயத்தை நேர்மறையாகக் கையாள்வதில் மிகவும் முக்கியமானது. மாறாக, 'பென்சன்' எடுத்ததன் பின்பு, சாய்மனை நாற்காலியில் தங்களை முடக்குவது என்பது தற்கொலைக்கு ஒப்பானது.'தொடர்ந்து இயங்கிக் கொண்டிருத்தல்' என்பதே முதுமையின் தாரக மந்திரமாக இருத்தல் வேண்டும். இருந்த போதிலும் முதுமையை அடைந்த சிலர்வேலை செய்வதில்லை. இவர்கள் 'தங்களுக்கு இனி வயது போய் விட்டது' என்று எண்ணிக் கொண்டு ' சும்மாய் இருந்து விடுவார்கள்'. வேறும் சிலருக்கு அவர்களுக்கு ஏற்பட்டிருக் கக்கூடிய ஏதோ ஒரு நோய் நிலைமை காரணமாக



அவர்களது உடல் அசைவுகள், இயக்கங்கள் மட்டுப்படுத்தப்பட்டு, அதனால் அவர்கள் வீட்டிற்குள் முடங்கிப் போய்விடுவார்கள். இவ்வாறானவர்களில் மனச்சோர்வு ஏற்படக்கூடிய சாத்தியக் கூறுகள் அதிகளவில் உள்ளன.

முதுமை என்பது, காலத்துடன் சம்பந்தப்பட்டது. கால ஓட்டத்துடன் வருடங்கள் மாறும். வயது கூடும். அதுமட்டுமல்ல, கால ஓட்டத்துடன் எம்மைச் சுற்றியுள்ள உலகமும் மாறும், உலகப் போக்கும் அதனுடைய பார்வைகளுக்கு மாறும். நாங்கள் எப்பொழுதும் எம்மைச்சுற்றி நடப்பவற்றை அவதானித்துக் கொண்டும், அதனுடன் எங்களையும் இணைத்து; எங்களுக்கேற்ற வகையில் அவற்றோடு இயைபாக்கமடைந்து கொண்டும் இருக்க வேண்டும். இவ்வாறு எங்களைத் தொடர்ச்சியாகத் 'தற்காலத்திலேயே' நிலைநிறுத்திக் கொள்ளும்போது எங்களுக்குத் தேவையற்ற சலிப்புகள், 'பழைய காலந்தான் பொற்காலம்' போன்று நினைப்புகள் வராது தவிர்க்கலாம். எக்காலமும் இனிதானதே. ஆயினும் சிலர் இவ்வாறு கால ஓட்டத்தோடு சேர்ந்து தாமும் ஓடுவதில்லை. இதனால் அவர்களின் அறிவில், அனுபவத்தில் ஒரு தேக்க நிலை ஏற்பட்டுவிடுகிறது. இந்தத் தேக்கமானது பின்பு தேவையற்ற சந்ததி இடைவெளிகளையும், உறவுச் சிக்கல்களையும் நிகழ்காலத்திற்கான எதிர்மனநிலையையும் தோற்றுவிக்கிறது. இவ்வாறான ஒரு மனநிலை பிறருக்குச் சிக்கல்களைக் கொடுப்பதுடன், அது அவருக்குப் பிரச்சினைகளைக் கொடுத்து, நிகழ்கால வாழ்வோடு இயைந்து போக முடியாது, மனச்சோர்வு என்கின்ற நிலைவரைக்கும் அவரை இட்டுச் செல்லலாம். ஆரோக்கியமான வாழ்வு என்பது ஒரு செல்வம், ஒரு கொடுப்பினை என்பதில் ஐயமில்லை. ஆனால், ஆரோக்கியம் என்பது என்ன? அது நோயற்றதொரு வாழ்க்கையா? அப்படியாயின் ஆரோக்கியமாக இருக்கும் எத்தனை முதியவர்களை எமக்குத் தெரியும்? நோய்கள் வரத்தான் செய்யும். அதுவும் முதுமைப் பராயத்திற் பல்வேறு நோய்கள் வந்து சேரலாம். அந்த நோய்களைச் சரியான முறையில் அணுகி, அவற்றுக்குப் பொருத்தமான பரிகாரங்களைத் தேடி, அவற்றைத் திறம்படக் கையாண்டு, முகாமைத்துவம் செய்து, வாழ்வை முன்னோக்கி நகர்த்திச் செல்லலே ஆரோக்கியமான வாழ்வாக அமைய முடியும். சலரோகம் உடைய ஒருவர், தான் ஆரோக்கியமற்றுப் போனேன் என்று எண்ணுவதனைத் தவிர்த்து, தன்னுடைய சலரோக நோயை மருந்துகள் பாவித்து, சரியான உணவுப் பழக்கங்களைக் கடைப்பிடித்து, வாழ்க்கை முறைகளை மாற்றியமைத்து நல்ல கட்டுப்பாட்டில் வைத்திருப்பதனால் தான் இன்னமும் ஆரோக்கியமாகவே இருக் கிறேன் என்று எண்ணுவதே நல்லது. அதுவே சரியானது. ஒருவர் முதுமையடையும் பொழுது, பாரதூரமான ஒரு நோயோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பல நோய்களோ அவருக்கு ஏற்படலாம்.



*(தொடரும்)*

வைத்திய கலாநிதி சா.சிவயோகன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனோதத்துவ வைத்தியம் (GENERAL PSYCHOTHERAPHY)

பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. P. ஆறுமுகம்

## இன்று மீண்டும் யாழில்

ஆரம்ப நிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம், நீரிழிவு நோய்குத் திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய் கோளாறுகள்,வெள்ளை போகுதல்,குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி,பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு ,கல்வியில் நாட்டம் குன்றிப்பயம்,நடுக்கம், நரம்புத்தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றி பெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr. P. ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

Sexuel Disorders (ஆண்மை சக்தி குறைவு-பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்த வித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோதத்துவ ரீதியிலும் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாள்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

பதிவுக் கட்டணம் 250/=

மானிப்பாய் வீதியில் ஜனசக்திக்கும் வைத்தீஸ்வரச் சந்திக்குமிடையில் "செல்வ மாளிகை "இல 15, வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம்.

T.P: 0719315664, 0777569205



# நாரந்தனை சரவணை கர்ணந்தோட்டம் ஸ்ரீசிவசுப்பிரமணிய சுவாமி கோயில் வருடாந்த மகோற்சவம் - 2010

| | |
|---|---|
| கொடியேற்றம்: | 17.05.2010 திங்கட்கிழமை பகல் 11 மணி |
| தேர்: | 26.05.2010 புதன்கிழமை மு.பகல் 10.30 மணி |
| தீர்த்தம்: | 27.05.2010 வியாழக்கிழமை மு.பகல் 10.30 மணி |
| திருக்கல்யாணம்: | 28.05.2010 வெள்ளிக்கிழமை இரவு 7.30 மணி |

மஹோற்சவத்தை முன்னிட்டு சமயச் சொற்பொழிவு-இரவு 6.30-730 மணி

ஆசிரியர் இரா.செல்வவடிவேல் அவர்கள்.

க.சகாதேவன்
பொருளாளர்.


# முதலாம் ஆண்டு நினைவலையில்

பூவுலகில் 01 ★ 11 ★ 1916



புகழுலகில் 16 ★ 05 ★ 2009

## திருமதி தேவசகாயம் எலிசபேத்

பத்து மாதம் சுமந்து பகலிரவாய்க் காத்து
எமை வளர்த்த எம் அன்பின் ஊற்றே!
ஊற்றெடுக்கிறதம்மா கண்ணீர் எம் கண்களில்
ஆழிப் பேரலை வந்ததுபோல் இருந்ததம்மா
உங்கள் பிரிவு, ஆனால் எங்கள் உள்ளங்களை
விட்டு நீங்கள் பிரியவில்லை எங்களோடு
வாழ்ந்துகொண்டு இருக்கிறீர்கள் அது போதும் அம்மா

(98282)

உங்கள் பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

உயரப்புலம்,
ஆனைக்கோட்டை.

# 24 ஆம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 12 ★ 02 ★ 1925



உதிர்வு 10 ★ 06 ★ 1986

## அமரர் தம்பு கதிரவேலு

(இளைப்பாறி அதிபர், யா/கம்பர்மலை அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை)

திதி: 16.05.2010

காலத்தின் நியதி மாறாது எமக்கு மட்டும்
கனத்த உள்ளத்தின் நினைவுகள்....!
ஆண்டுகள் பல கடந்தும்
ஆற்றாமையால் வருந்துகின்றோம் ஐயா!
நீ வாழ்ந்த பூமி நிழலாடும் நின்முகம்
நிஜமாக எம்முடன் இருக்க
போனதென்ன நீண்ட பயணம்
புகுந்து விட்டீர் இறையுலகு...!

(98267)

திருவத்தம்பை,
ஊரிக்காடு, வல்வெட்டித்துறை.

மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

## சேதமடைந்த மதகை புனரமைக்க நடவடிக்கை

காரைநகர், மே 16

காரைநகர் மொந்திபுலம், கல்லூரி வீதியில் கடந்த இருபது வருடங்களாகச் சேதமடைந்திருந்த மதகினைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் காரைநகர் பிரதேசசபைச் செயலாளர் இ.லோகநாதன் தெரிவித்தார்.

இந்த மதகில் பாரிய குழி ஏற்பட்டு மக்கள் போக்குவரத்துச் செய்ய முடியாத நிலை காணப்படுவதாகவும் பொதுமக்கள் அந்த மதகில் அடிக்கடி விபத்துக்குள்ளாவதையும் சுட்டிக்காட்டியதை அடுத்து இந்த மதகினைப் புனரமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறித்தொதுக்கப்பட்ட மாகாண நன்கொடை வேலைத் திட்டத்தின் கீழ்15 இலட்சம் ரூபா செலவில் இந்த மதகு விரைவில் புனரமைக்கப்பட உள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார். (50-250)


# திருமண சேவை

துரிதமான-சுலபமான வாழ்க்கைத் துணைத் தெரிவுக்குச் சுயதெரிவு முறையே! சுயதெரிவுமுறைபற்றிய வரன்முறையைத் தெரிந்திட திங்கள்,புதன்,வெள்ளி மாலையிலோ, சனி, ஞாயிறு நண்பகலிலோ மூத்த-புகழ்பூத்த- சுயதெரிவுமுறை- முன்னோடி- தனிமனித நிறுவுநர்-சர்வதேச சகலருக்குமான திருமண ஆற்றுப்படுத்துநர் குரும்பசிட்டியூர் மாயெழு வேல் அமுதனுடன் தொடர்புகொள்ளுக!

தொலைபேசி: 2360488, 2360694, 4873929



# பஸ் விற்பனைக்குண்டு

HA XXXX இலக்கமுடைய 54 ஆசனங்களைக் கொண்ட Ashok Leydan பஸ் விற்பனைக்குண்டு.

தொடர்பு :0786434935



# வாடகைக்கு

நாவலர் வீதி, ஸ்ரான்லிக் கல்லூரிக்கு அருகிலும் கச்சேரிக்கு அருகிலும் இரண்டு வீடுகள் வாடகைக்கு உண்டு. தனியார் நிறுவனங்களுக்கும், கம்பனி அலுவலகங்களுக்கும், களஞ்சியங்களுக்கும் கல்விச் செயற்பாடுகளுக்கும் உகந்தது.

தொ.பே: 0779334897



# வேலையாள் தேவை

சிறிய டிங்கரிங் வேலை தெரிந்தவர்கள் உடன் தேவை.

தொடர்பு :
இல.284, கஸ்தூரியார்வீதி,
யாழ்ப்பாணம். தொ.பே : 0778285872


# சமய சந்நிதிகளில்

யாழ்ப்பாணம்,மே 16

சுழிபுரம் பறாளாய் சிவசுப்பிமணிய ஆலய வருடாந்த உற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

தேர்த்திருவிழா எதிர்வரும் 26ஆம் திகதி புதன்கிழமை அன்று நடைபெறும்.மறுநாள் வியாழக்கிழமை தீர்த்தத் திருவிழா சுழிபுரம் திருவடிநிலைக் கடற்கரையில் இடம் பெறும். (1)

* * *

யாழ்ப்பாணம்,மே 16

வடமராட்சி, துன்னாலை அல்லையம்பதி சிவசுப்பிரமணியர் ஆலய வருடாந்தப் பெருந்திருவிழா நாளை திங்கட்கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து பத்துத் தினங்கள் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 25ஆம் திகதி செவ்வாய்க்கிழமை முற்பகல் 10 மணிக்குத் தேர்த்திருவிழாவும் மறுநாள் புதன்கிழமை பிற்பகல் 11 மணிக்குத் தீர்த்தத்திருவிழாவும் இடம் பெறும். (201)

* * *

காரைநகர்,மே 16

காரைநகர் மடத்துக்கரை முத்துமாரி அம்மன் ஆலய வருடாந்தப் பொங்கல், வேள்வி உற்சவம் நாளை மறுதினம் செவ்வாய்க் கிழமை காலை 8 மணி தொடக்கம் இடம் பெறவுள்ளது.

கடந்த 9ஆம் திகதி விளக்கு வைக்கும் நிகழ்வுடன் ஆரம்பமாகித் தொடர்ந்து தினமும் விசேட அபிஷேக ஆராதனைகளும் பூஜை வழிபாடுகளும் இடம்பெற்று வருகின்றன. நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை காலை முதல் விசேட அபிஷேக ஆராதனைகளும் [illegible] இடம்பெறும். (201-250)


# திறப்பு விழா

இன்று (16.05.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப. 9.30 மணி முதல் நடைபெறும் சுபவேளையில் இல. 127, கண்டி வீதி, கச்சேரியடி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில்

## Peninsula Super Mall

Super Market Services

என்னும் பல்பொருள் அங்காடி மங்களகரமாகத் திறந்து வைக்கப்படுகின்றது. DSM

சகல பொருள்களையும் ஒரு கூரையின் கீழ் ஒரே நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

No: 127, Kandy Road, Kachcheri, Jaffna.

T.P: 0718797243








வசீகரத் தோற்றத்திற்கு!

# சந்தனாலேப

(குளிர்ச்சி தரும் ஆயுர்வேத மேல்பூச்சு மருந்து)
வெண்சந்தனம், மரமஞ்சள், நுங்குமப்பட்டை, கஸ்தூரி மஞ்சள், செவ்வள்ளி உள்ளிட்ட தேசிய ஆயுர்வேத ஔடதங்களின் கலவை. தேமல், முகப்பரு, கரும்புள்ளி, பாற்தாமரை, கண்ணைச்சுற்றிக் கருவளையம், சருமம் வரட்சியடைதலைத் தடுக்கும், சருமத்தை மிருதுவாக்கி பளபளப்புடன் எழில்மிகு வசீகர முக அழகைத் தரும். உதடு, வாய், பாதவெடிப்பு, சருமம் சுருங்குதல், பிளவு படுதல் போன்ற சரும நோய்களைப் பூரணமாகக் குணப்படுத்தும். சவரம் செய்த பின்னர் முகத்தில் பூசுவதன் மூலம் பிளேட் விசத்தை நீக்கி, சருமத்தை சவரம் செய்வதை இலகுவாக்கும். எடுப்பான கம்பீர தோற்றத்தைத்தரும்.




'சிவா நறுமணப் பூங்கா'
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
(சகல பார்மசிகளிலும் பெற்றுக் கொள்ளலாம்).

யாழ் மாவட்ட ஏக விநியோகஸ்தர்

MANUFACTURED BY: SAN JEEWAKA AYURVEDIC PRODUCTS VEYANGODA, SRI LANKA. AYY PRO NO: REG NO. A/L 250.

(சி/555203)



# ஆயிஷா சல்வார் சொய்ஸ்



யாழ். நகரில் ஓர் புதிய உதயம். இந்தியாவில் இருந்து நேரடியாகத் தருவிக்கப்பட்ட புத்தம் புதிய டிசைன்களில் உங்கள் எண்ணங்களுக்கு ஏற்ப மனதைக் கொள்ளை கொள்ளும் பஞ்சாபி துணிவகைகள், மிகவும் மலிவு விலையில் .கண்ணை கவரும் சீகுயின்ஸ், ஜோஜட்,கொட்டன், பாகிஸ்தான் கொட்டன் இன்னும் பல தெரிவுகளுக்கு நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம் ஆயிஷா சல்வார் சொய்ஸ்

இல: 125,பெரியகடை வீதி,
யாழ்ப்பாணம்
(அம்பிகாபதி அழகு மாடத்திற்கு முன்னால்)
தொ.பே: 0772289966
0772250836
0718813312

(98302)


# ஆறாவது ஆண்டு நினைவஞ்சலி



## அமரர் முத்தையா அருமைத்துரை

(ஓய்வுபெற்ற ஆய்வுகூட தொழில்நுட்பவியலாளர்)

அன்னை மடியில் 07★05★1947

ஆண்டவன் அடியில் 16★05★2004

திதி: 10.06.2010

ஆண்டுகள் ஆறு போனதுவே உமைப்பிரிந்து
ஆனாலும் இன்னும் ஆறவில்லை எம்துயரம்
ஆருயிர்த் தெய்வமே அன்பான அப்பாவே - எங்கள்
ஆண்டவனாய் நின்று ஆறுதலைத் தந்திடுங்கள்.

திருமதி அருமைத்துரை
அத்துளு அம்மன் கோயிலடி,
கரவெட்டி கிழக்கு, கரவெட்டி.
தொ.பே.இல: 2263632

உங்கள் ஆத்ம சாந்திக்காக அனுதினமும்
அத்துளு அம்பாளை வேண்டிப் பிரார்த்திக்கும்:
அன்பு மனைவி, மக்கள்,
மருமக்கள், பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீனாவின் 'முத்துமாலை வியூகம்' இந்தியாவை உடைக்குமா?

- லோகன் பரமசாமி -

இந்து சமுத்திரம் இந்தியர்களுக்கு மட்டும் சொந்தமானது என்ற நிலையை இனிமேலும் ஏற்றுகொள்ள முடியாது என்ற பலமான கருத்துடன் சீன வெளியுறவு கொள்கை சிந்தனையாளர்களும் மிக முக்கியமான பாதுகாப்பு ஆலோசகர்களும் காலாகாலம் தொடர்ச்சியான பரிந்துரைகள் செய்துவந்தனர்.

இதன்பேரில் சீன அரச இயந்திரம் இந்து சமுத்திரப்பிராந்தியத்தில் தனது பொருளாதார இராணுவ இராஜதந்திர செல்வாக்குகளை பயன்படுத்தி பல இராணுவ மற்றும் வர்த்தக விநியோகத் தளங்களை நிர்மாணித்து வருகிறது.

சீனாவின் கடல்வழி வழங்கல் பாதையை பொறுத்தவரையில் மேற்கத்தேய நாடுகளைப்போல பயங்கரவாதமோ அல்லது கடற்கொள்ளையரோ நடைமுறைப் பிரச்சினை அல்ல.

ஆனால், இந்த வழங்கல் பாதையூடே இருக்கக்கூடிய தேசங்கள் தடைக்கற்களாக இருந்து சீனாவின் பொருளாதார வளர்ச்சிக்கு இடையூறு விளைவிப்பதாக அமைந்துவிட கூடாது என்பதை கருத்தில்கொண்டே தாம் இத்தகைய நிலைகளை அமைத்து வருவதாக சீன அதிகாரிகள் கூறிவருகின்றனர்.

அதேவேளை, இந்திய மற்றும் மேலைத்தேய சார்பு ஆய்வாளர்களின் கருத்துப்படி தற்போது பொருளாதார நலன்களை முன்வைத்து அமைக்கப்படும் இத்தளங்கள் பிற்காலத்தில் சீனா நன்கு வளர்ச்சி பெற்றுவிட்ட நிலையில் கடற்படை மற்றும் இராணுவ தளங்களாக மாற்றி அமைக்கப்படலாம் என்கின்றனர்.

சீன அரசு அமைக்கும் இத்தளங்கள் இந்தியாவுக்கும் அதன் பாதுகாப்பு நலன்களுக்கும் அச்சுறுத்தல் விளைவிக்கும் வகையில் பயன்படுத்தப்பட வாய்ப்பு உள்ளது என்றும் சுட்டிக்காட்டுகின்றனர்.

மேலும் இந்தத் தளங்களில் ஏற்கனவே நீண்டதூர சமிஞ்ஞைகளை பரிமாறக்கூடிய தொழில்நுட்ப வசதிகள் பொருத்தப்பட்டுள்ளன. இவை இலகுவாக மேலைத்தேய மற்றும் ஜப்பானிய கப்பல் போக்குவரத்தை கண்காணிக்க கூடிய மையங்களாக பயன்படுத்தப்பட்டு வருவதாகவே மேற்கத்தைய புலனாய்வு




நிறுவனங்களின் அறிக்கைகள் கூறுகின்றன.

சீனா உலகெங்கும் தனது வர்த்தக நடவடிக்கையை மிக வேகமாக வளர்ச்சி அடைய செய்துவருகிறது. இதில் தெற்கு தென்கிழக்காசிய பகுதி சீனாவின் முழுக்கவனத்திற்கும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

இதிலும் தெற்காசியாவில் தனது நேரடி வர்த்தகப் போட்டியாளரான இந்தியாவை குறிவைத்து பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டுவருகிறது.

இதில் ஒன்றுதான் 'முத்து மாலை வியூகம்' இந்த வியூகத்தின் அடிப்படையில் தெற்காசியாவில் உள்நாட்டு பிரச்சினைகளில் தலையிடாது பல்வேறு பொருளாதார வேலைதிட்டங்களில் ஈடுபட்டு வருவதாக சீனா கூறிவருகிறது.

இந்தியாவை சுற்றி எவ்வாறு சீனா தனது 'முத்து மாலை வியூகத்தை' அமைத்து வருகிறது என்பதை வரைபடம் காட்டுகிறது.

இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தொடர்ச்சியான சொந்த கப்பற்போக்குவரத்து துறைமுக வசதிகளுடன் கூடிய நிலைமையானது சீன பொருளாதார முன்னேற்றத்துக்கு பெரும் தாங்கு தளங்களாக இருக்க உள்ளன.

தங்கு தடையற்ற மூலப்பொருள் வழங்கல் இந்த தளங்கள் மூலம் பல பத்தாண்டுகளுக்கு உறுதிசெய்யப்பட்டுவருகிறது.

சீனாவின் கச்சிதமாக திட்டமிடப்பட்ட பல்வேறு துறைகளிலுமான இத்தகைய அதிவேக வளர்ச்சி ஜப்பானிய, இந்திய, அமெரிக்க நாடுகளுக்கு பலத்த எச்சரிக்கை அளிப்பதாக இருக்கிறது.

இந்த வளர்ச்சிப்போக்கு மிக விரைவில் உலகின் பொருளாதாரத்தின் கணிசமான பகுதியை தன்னகத்தே உள்வாங்கும் நிலையை சீனா எட்டிவிடும் என்று அந்த நாடுகள் எண்ணுகின்றன..

அத்தகையதொரு நிலையில்தான் இந்தியா போன்ற ஜனநாயக பண்புகளுடன் கூடிய, உள்நாட்டில் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை கொண்டுள்ள, உலகின்பொருளாதார வளர்ச்சிப் போக்கிற்கேற்ப வளர்ந்து வரும் நாடுகளில் உடைவு ஏற்படும் நிலை உருவாகும் என உலகின் பல்வேறு இராஜதந்திர சிந்தனையாளர்களும் கருதுகின்றனர்.

இன்றைய உலக ஒழுங்கில் பொருளாதார நலன்களே இராணுவ மற்றும் மனிதஉரிமை விவகாரங்களிலும் பார்க்க முன்நிறுத்தப்படுகின்றன.

இந்த நடைமுறைக்கேற்ப தெற்காசியாவில் இந்தியாவை சுற்றி உள்ள ஏறத்தாழ எல்லா அயல் நாடுகளையும் நெருங்கிய இராஜதந்திர பொருளாதார உறவுகளின் ஊடாக சீனா தன்னகத்தே ஈர்த்து வைத்திருக்கிறது.

கடந்த ஐந்து வருடங்களாக தெற்காசிய ஒத்துழைப்பு மாநாடுகளில் சார்க் பார்வையாளர் நிலையில் இருந்த சீனா இந்த ஆண்டு நேபாளம், பாகிஸ்தான், வங்காளதேசம் ஆகிய நாடுகளின் ஒத்துழைப்புடன் உறுப்பினராக இணைய முற்பட்ட நிலை இந்தியாவை தன்னகத்தே உள்வாங்கிவிட எத்தனிப்பதை காட்டுவதாக சுட்டிக்காட்டப்படுகிறது.

எப்படி இருப்பினும் இந்திய மாநிலங்களுக்கும், டில்லிக்கும் அதிகார இழுபறிகளும், டில்லி அதிகாரபீடத்தின் தன்னலப்போக்கு நிலைகளும் தற்போது கவனத்தில் கொள்ளப்பட்டுவருகிறது.

இந்தியாவின் வடபகுதியில் சீனர்கள் நடவடிக்கைகள் குறித்து தொடர்ந்துவரும் கட்டுரைகளில் பார்ப்போம். ✱

நன்றி: 'புதினப்பலகை'

---

# தமிழ் - முஸ்லிம் உறவை பிரிக்கச் சதி முயற்சியா?

நிராஜ் டேவிட்

இலங்கையில் தமிழ் முஸ்லிம் உறவில் விரிசல்களை ஏற்படுத்தும் சதி ஒன்று அங்கு இடம்பெறத் தயாராகிக்கொண்டிருப்பதாக நம்பத்தகுந்த வட்டாரங்களில் இருந்து செய்தி கிடைத்துள்ளது. குறிப்பாகக் கிழக்கைக் குறிவைத்து இந்தச் சதி அரங்கேற இருப்பதாகவும் நம்பப்படுகின்றது. கிழக்கில் ஒரு தமிழ் - முஸ்லிம் இனக்கலவரத்தை ஏற்படுத்தும் நகர்வுகள் இரகசியமாக மேற்கொள்ளப்படுகின்றன எனத் தகவல்கள் கசிந்துள்ளன.

தேர்தல்தான் முடிந்துவிட்டதே, இனி எதற்காக தமிழ் முஸ்லிம் சமூகங்கள் மத்தியில் பிளவை ஏற்படுத்தவேண்டும்? இந்த இரண்டு சமூகங்கள் மத்தியில் பிளவு ஏற்படுவதால், அல்லது தமிழ் - முஸ்லிம் இனக்கலவரம் ஏற்படுவதால் யாருக்கு இலாபம்? - என்று உங்களில் சிலர் கேள்வி எழுப்பலாம்.

ஒரு முக்கியமான அரசியல் நகர்வு ஒன்றை நோக்காகக் கொண்டு இலங்கை அரசு இந்த இரண்டு சமூகங்கள் மத்தியில் பிளவை ஏற்படுத்த விளைகின்றது.

இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வு வழங்குமாறு சர்வதேச சமூகம் வழங்கிவருகின்ற அழுத்தத்தை சமாளிப்பதற்காகவும், தமிழ்நாட்டில் ஆங்காங்கு எழுப்பப்படுகின்ற ஈழத் தமிழருக்குச் சார்பான குரல்களை அடக்குவதற்காகவும், ஈழத் தமிழர் பிரச்சினையில் தலையிடவேண்டும் என்று இந்தியாவிற்கு இருந்துவரும் சங்கடங்களில் இருந்து இந்தியாவின் (கருணாநிதி, மன்மோகன்சிங்) அரசுகளை காப்பாற்றுவதற்காகவும், தமிழ்த் தேசியம், சுயநிர்ணயம், தன்னாட்சி போன்ற ஈழத் தமிழர்களின் அடிப்படைக் கோரிக்கைகளை நிரந்தரமாகவே பலமிழக்கச் செய்வதற்காகவும், ஒரு முக்கிய அரசியல் நகர்வொன்றை வெகு விரைவில் சிங்களத் தரப்பு அரசு செய்ய இருக்கின்றது.

**கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு**

இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையில் தற்காலிகமாக இடம்பெற்ற வடக்கு, கிழக்கு இணைப்பு தற்பொழுது சட்டரீதியாகப் பிரிக்கப்பட்ட நிலையில், வடக்குடன் கிழக்கு இணைந்திருப்பது அவசியமா என்னும் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பொன்றை கிழக்கில் நடத்துவதற்கு இலங்கை அரசு திட்டம் தீட்டி வருகின்றது. இது இலங்கை, இந்திய ஒப்பந்தத்தின் அடிப்படையிலான ஏற்பாடு. வடக்குடன் கிழக்கு மாகாணம் இணைவதா இல்லையா என்னும் தீர்மானத்தை பல்லின சமூகங்கள் இணைந்து வாழும் கிழக்கு மாகாணத்தில் நடக்கவேண்டும் என்று இந்திய - இலங்கை ஒப்பந்தத்தின் 2.3ஆம் சரத்தின் 'ஏ' பிரிவு கூறுகின்றது.

இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் சரத்துக்களில் உள்ள அநேகமான விடயங்களை இரண்டு நாடுகளுமே நடைமுறைப்படுத்திவிட்டன. சிலவற்றை நடைமுறைப்படுத்தியும் வருகின்றன. இந்தக் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பையும் நடத்தி வடக்கு, கிழக்கு இணைப்புத் தொடர்பான இலங்கைக்கு இருக்கும் நெருடல்களுக்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க சிங்கள தேசத்தின் நவீனகால துட்டகைமுனு விரும்புகின்றார்.

அத்தோடு, இந்தக் கருத்துக்கணிப்பை நடத்துவதன் மூலம் பல அனுகூலங்களைத் தமதாக்கிக்கொள்ளமுடியும் என்ற எதிர்பார்ப்பும் மஹிந்த அரசிடம் இருக்கின்றது.

இந்திய - இலங்கை ஒப்பந்தத்தை அமுல்படுத்துவதன் மூலம் இனப்பிரச்சினைக்கான தீர்வைக் காணமுயல்கிறோம் என்று இலங்கை அரசு உலகிற்கு கூறி, தமிழ்மக்களுக்கு நியாயமான தீர்வை முன்வைப்பதில் இருந்து பின்வாங்கலாம். இந்தியாவின் மிக நெருங்கிய கூட்டாளிகளாக மாறியுள்ள மேற்குலகம், இந்தியாவால் மேற்கொள்ளப்பட்ட இந்த ஒப்பந்தம் பற்றி அதற்குப் பின் வாய்திறக்காது.

அதேபோன்று, இந்த கருத்துக்கணிப்பை மேற்கொள்வதன் மூலம் இந்தியாவின் சொற்படிதான் நாம் செய்கின்றோம் என்று கூறி தமிழ்நாட்டில் இருந்து வரும் எதிர்ப்புகளில் இருந்து தப்பித்துக்கொள்ளலாம். அல்லது தமிழ்நாட்டில் இருந்து வரும் எதிர்ப்புகளை இந்தியாவின் நடுவண் அரசை நோக்கித் திருப்பிவிட்டுவிடலாம்.

அடுத்ததாக, இந்தக் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பை மேற்கொள்வதன் ஊடாக, தமிழ் அரசியல் கட்சிகளைத் தேசிய அரசியலில் இருந்து பின்வாங்கச் செய்து பிரதேச அரசியலுக்குள் முடக்கிவிடலாம்.

கருத்துக்கணிப்பில் வடக்கு, கிழக்கு நிரந்தரமாகப் பிரிக்கப்படும் ஒரு சந்தர்ப்பம் உருவானால், அங்குள்ள மக்களின் ஜனநாயக விருப்பம் இது. நாம் என்ன செய்வது என்று கூறி வடக்கு, கிழக்கின் பிரிப்பை நியாயப்படுத்திவிட இந்தியாவின் நடுவண் அரசுக்கும் அது சந்தர்ப்பமாகப் போய்விடும்.

இதுபோன்ற பல சாதகங்களை அடையும் நோக்கோடு கிழக்கில் கருத்துக்கணிப்பொன்றை மேற்கொள்ளும் நகர்வில் இலங்கை அரசு இறங்கியுள்ளது.

(வளரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FREE SEMINAR

Study in leading Universities & Colleges

## UK, AUSTRALIA & NEW ZEALAND


- FREE APPLICATION & VISA PROCESSING
- PERSONALISED COUNSELING SERVICES
- 100% VISA SUCCESS RATE (Conditions Apply)

**ICBT Campus** இன் இலவச உயர்கல்வி கருத்தரங்கும் UK, Australia & New Zealand போன்ற நாடுகளின் பல்கலைக்கழக அனுமதிக்கான ஆலோசனைகளும்.

கா.போ.த. சா/த, உ/த பரீட்சை எழுதிய மாணவர்களுக்கான இலவச உயர்கல்வி வழிகாட்டல் ஆலோசனைக்கருத்தரங்கு இலங்கையின் பிரபல நிறுவனமான ICBT Campus இனால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**காலம் :**
18.05.2010
மாலை 3.00 - 6.00 மணி
செவ்வாய்க்கிழமை

**இடம் :**
ST. JOHN'S College Jaffna



Organized by ICBT CAMPUS
www.icbtcampus.edu.lk

மேலதிக விபரங்களுக்கு :
**0773 427 287**

---

## ஊ.சே. நிதியம் யாழ்ப்பாணத்திலுள்ள

### அதன் உறுப்பினர்களைச் சந்திக்க வருகிறது!

இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சேம நிதியமும் தொழில் திணைக்களமும் ஊ.சே.நிதிய உறுப்பினர்களுக்காக யாழ்ப்பாணத்தில் நடமாடும் சேவையொன்றினை நடத்தவிருக்கின்றது.



உறுப்பினர்களுக்கு பின்வரும் சேவைகள் வழங்கப்படும்:

- ஊ. சே. நிதிய உறுப்பினர் நிலுவைகளைப் பெற்றுக் கொள்ளுதல்.
- ஊ. சே. நிதிய உறுப்பினர்களுக்கான கணக்குகள்/பெயர் மற்றும் தேசிய அடையாள அட்டை இலக்கம் என்பன தொடர்பான எந்தவொரு பிரச்சனைக்கும் தீர்வு காணுதல்.
- ஊ. சே. நிதிய வீடமைப்புக் கடன் தொடர்பான பிரச்சனைகளுக்கு தீர்வு காணுதல்.
- ஊ. சே. நிதிய உறுப்பினர்களுக்கு கிடைக்கத்தக்கதாகவுள்ள ஏனைய நன்மைகள் மற்றும் சேவைகள் பற்றிய விழிப்புணர்வினை அதிகரித்தல்.

நாள் : 2010 மே 19 மற்றும் 20 ஆம் திகதிகள்
காலம் : மு.ப. 9.00 தொடக்கம் பி .ப. 5.00 வரை
இடம் : வீரசிங்கம் மண்டபம் , யாழ்ப்பாணம்

தொழில் ஆணையாளர்
தொழில் திணைக்களம்
தொழில் செயலகம்
கொழும்பு 5

ஊ.சே. நிதிய கண்காணிப்பாளர்
இலங்கை மத்திய வங்கி
இல. 30, சனாதிபதி மாவத்தை
கொழும்பு 1

---

அக்ஷய திருதியை தங்கத் திருநாள் மே 16 தங்கம் வாங்குவதற்குச் சிறந்த நாள் இந்நாளில் தங்கநகைகளை வாங்கி உங்கள் ஐஸ்வரியத்தையும் அதிர்ஷ்டத்தையும் பெருக்கிக்கொள்ளுங்கள். ★ இத்தினத்தில் தங்கம் வாங்கும் உங்களுக்கு விசேட விலைக்கழிவுகளுடன் பரிசில்களும் வழங்கப்படும்.



## மைதிலி நகைமாடம்

Maithely Nagai Madam

Yarl Maithily jewellers

யாழ். மைதிலி ஜூவலர்ஸ்

தங்க நகை வியாபாரி

89 V, Kasthuriyar Road, Jaffna.

Sea Street Colombo -11.

குறிப்பு:- அக்ஷய தினத்தை முன்னிட்டு ஞாயிறு முழுவதும் கடை திறந்திருக்கும்.

---

## ஜுவல் பிளாசா
## Jewel Plaza



91, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
91,Power house, Road Jaffna.

### அக்ஷய திருதியை தங்கத் திருநாள்

இன்று மே 16 ஞாயிறு தங்கம் வாங்குவதற்கு சிறந்த நாள்
இத்தினத்தில் எம்மிடம் தங்கம் வாங்கும் உங்களுக்காக விசேட விலைக்கழிவுகளும் பரிசுப்பொருள்களும் வழங்கப்படும்.

அக்ஷய தினத்தை முன்னிட்டு இன்று 16 ஆம் திகதிவரை ஓடர் செய்யப்படும் தங்க நகைகளுக்கு விசேட விலைக்கழிவும் வழங்கப்படும்.

**ஜுவல் பிளாசா**
91, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.




அக்ஷய தினத்தை முன்னிட்டு ...

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

சிறுகதை

# தொலைவில் தெரியும் ஒற்றை நட்சத்திரம்

**பஸ்** அந்த மதில் வீட்டருகே இருக்கும் ஹோல்றிங் பிளேஸில் நின்றது. ஊருக்கு வந்தாயிற்று. திடீர் பரபரப்புடனும், கைப் பெட்டியுடனும் அவன் அந்த மதிலருகின் குப்பைத் திடலில் இறங்கிக் கொண்டதும் பஸ் அவசரமாக முனகிக் கொண்டு ஓடத் தொடங்கிற்று. பஸ்ஸிற்குள் இருந்த வழுக்கையொன்று கழுத்தை வளைத்து அவனைத் திரும்பிப் பார்த்தது. அவன் அவரைப் பார்த்துச் சிரிக்க முயன்றான். 'அது' தலையைத் திருப்பிக்கொண்டது. 'வயிற்றெரிச்சல் போலிருக்கிறது.'. அவன் தன்னுடைய நீளமான தலைமுடியை ஒரு தடவை தடவிக்கொண்டான். காற்றுக்கு வளைந்து, குழம்பி முகமெல்லாம் விழுந்து கிடந்த மயிரைச் சட்டைப் பொக்கற்றுக்குள் தூங்கிக் கொண்டிருந்த சீப்பு வெளியே வந்து மீண்டும் ஒரு நிலைக்குக் கொண்டுவந்தது.

றோட்டின் மற்றப்பக்கத்தில் இருக்கும் அந்த வளவுக்குப் பின்னால் பரந்து கிடக்கும் அந்த வயல்களுக்கும் அப்பால் தெரியும் குளம் கட்டுடைந்து இப்போது இதோ அருகே வந்து நிற்கின்றது. அதற்குக் கூட 'ஊர் பார்க்கும்' ஆசை வந்துவிட்டதோ? வருஷத்தில் ஒரு தடவை இப்படியொரு ஆசை அதற்கு வருவது வழக்கம்.

முத்த ஈழத்து எழுத்தாளர்களின் சிறுகதை வரிசை: 149

அவனுக்குச் சீட்டியடிக்க வேண்டும் போலிருந்தது. நீர்ப்பரப்புக்கள், மலைகள், பறவைகள், ஏன் இளம் பெண்கள் இந்த இயற்கையழகுகளில் லயித்துவிடும் போது அவனுக்கு சீட்டி தானாகவே வந்து விடுகின்றது. சீட்டியடிப்பது கூடாத பழக்கம் என்று அந்த நாள்களில் அம்மா அவனிடம் ஆயிரம் தடவைகள் சொல்லியிருப்பாள். மாமா மாத்திரம் என்ன? அவருந்தான்.

ஆனால் அவனிடம் அவரைவிட ஆயிரங் கெட்ட குணங்கள் இருப்பதாக பிரமை கொண்டு, பேரிடியைத் தங்கள் தலையில் போட்டு ஆறுமாத காலத்துக்கு முந்திய காலகட்டத்தில் அவர்கள் தவிக்கும்போது சீட்டிச்சமாச்சாரம் ஒரு சின்னச் சமாச்சாரமாகத்தான் போய்விட்டது.

கொழும்பில் முந்தநாள் பார்த்த ஒரு ஹிந்திப்படத்தின் மெட்டுக்கு அவன் சீட்டியடித்துக் கொண்டு நடந்தான். தொலைவில் வெண் மலர்கள் புள்ளி புள்ளிகளாய்த் தெரியும் அந்த அலரி மரங்களுக்கும், மொட்டை மாடிக்கட்டடத்துக்கும் அருகே அவன் போய், மெயின் றோட்டிலிருந்து கிளைவிடும் அந்த செம்மண் தெருவால் நடந்தால் வலது பக்கத்தில் முதலாவதாக வரும் வீடு அவனுடையதுதான்.

ஊரே உறங்கிக் கிடப்பதுபோல் அவனுக்குத் தோன்றிற்று. ஊரின் உறக்கத்துக்கு மழை மூட்டம் காரணமா? அல்லது தன்னுடைய ஆறுமாத பிரிவு காரணமா? என்னும் விசித்திரமான கற்பனை அவனுள் எழுந்ததும் புன்னகைத்தபடி நடந்தான்.

ஓவஸியரின் வீடு எதிரே வருகிறது. 'கேற்றுக்குப் பெயின்ற்' மாற்றி அடித்திருக்கிறார்கள். பச்சை நிறமாக இருந்த 'கேற்' இப்போது நீலநிறம்! இடியப்பக்காரியை அனுப்பி அந்த 'கேற்றைச்' சாத்த வந்த ஓவஸியரின் சின்ன மகள் மைதிலி- அவள்கூடக் கொஞ்சம் வளர்ந்துதான் இருக்கிறாள். றோட்டில் போய்க் கொண்டிருக்கும் அவனைத் திகைத்த படி பார்த்து கேற்றைச் சாத்த மறந்து வளவுக்குள் ஓடுகிறாள். "மழை வருகுது கெதியா வீட்டை போய் சேர் தம்பி!" என்று தன்னுடைய அவசரத்தை அவனுக்குச் சொல்லி விட்டு இடியப்பக்காரி ஓட்டமும், நடையுமாகப் போகிறாள். "வரதன் மாமா போது!!" என்ற மைதிலியின் 'அநௌன்ஸ் மென்ற்' ஓவஸியரின் வளவுக்குள் கேட்கிறது. தான் கடந்து விட்ட ஓவஸியரின் கேற்றை மீண்டும் ஒரு தடவை அவன் திரும்பிப் பார்த்தான். அங்கு ஓவஸியரின் மனைவி இல்லை. ஓவஸியரின் மனைவி கேற்றில் ஏன் நிற்கப் போகிறாள்? அவளுடைய வேலி நிறைய ஒட்டைகள் இருப்பதை ஆறுமாதப் பிரிவால் அவன் மறந்து விட்டானா என்ன?

இதற்கப்பால் அந்தப்பாழ் வளவு! வளவு இப்போதும் பாழாகத்தான் கிடக்கிறது. வேலி ஒன்றுதான் புதிதாக முளைத்து விட்டது. அதற்கடுத்ததாக முருகேசின் சலூன்! அதுதான் அந்தப் பகுதியின் வாசிகசாலை, அளப்பு மண்டபம் எல்லாம். 'இந்த முருகேசுவின் சலூனில் தான் தன்னைச் சம்பந்தப் படுத்தி எவ்வளவு அரட்டைகள் நடந்திருக்கின்றன.' முருகேஸ் இன்னும் சலூன் திறக்கவில்லை. அவர் எட்டு மணிக்குத் திறப்பார், பத்துக்கும் திறப்பார். முதலில் வருபவன் எத்தனை மணிக்குப் படலையைத் தட்டுவான் என்பதைப் பொறுத்த விஷயம் அது! பக்கத்து வளவு வேலியின் ஓரத்தில் நின்று தெருவைத் திருட்டுத் தனமாக எட்டிப் பார்க்கும் செவ்வரத்தம் பூக்களை முருகேசு பறித்துக் கொண்டிருக்கிறார். சாமி வழிபாட்டுக்கு ஆயத்தம் பண்ணுகிறார் போலும், அவனுக்கு விவரந்தெரிந்த நாளில் இருந்து முருகேசு ஒவ்வொரு காலைப் பொழுதிலும் இந்த வேலையைத்தான் செய்கிறார். சாமியின் அருள் கிடைக்கிறதோ இல்லையோ, பூக்கள் மாத்திரம் ஒழுங்காகக் கிடைக்கின்றன.

முருகேசு அவனைப் பார்த்துச் சிரிக்கிறார்.

"எங்கட பிழைப்பில் மண்ணப் போடுகிறதா? என்ன தம்பி"

அவன் சிரித்துவிட்டு மேலே தொடர்கிறான். பரமேஸ்வரனது கடை வருகிறது. பரமேஸ்வரனைக் கடையில் காணவில்லை. பரமேஸ்வரனின் தம்பி கடையில் இருக்கிறான். கடை கூடக் கொஞ்சம் மாறிப்போய்விட்டது. "கடன் கேளாதீர்" அறிவிப்பு பளிச்சென்று தெரிகிறது. கடைக்குப் பக்கத்தில் இருக்கும் அந்த வீட்டின் கேற்றை அவன் ஆவலுடன் பார்த்தபோது அங்கு நின்ற வசந்தா இவனைச் சற்றும் எதிர்பாராமல் கண்டதால் திகைத்து, கண்கள் அகலவிரிந்து, இதழ்கள் விடுபட்டு "வரதன்" என முணுமுணுக்கிறாள். அவன் கள்ளமில்லாமல் சிரிக்கிறான். அவளும் புன்னகையை வலிந்திழுத்துக் கொள்கிறாள். அந்தப் புன்னகை மாறாமலேயே அவன் முன்னேறுகிறான்.

அந்த அலரி மரங்களுக்கு முன்னால் இருக்கும் சந்திரகுமாரின் வீட்டு வானொலிப் பெட்டி அலறுகின்றது. பழுதாய்க் கிடந்த வானொலிப் பெட்டியை இப்போது தான் திருத்தியிருக்கிறார்களோ? ஒலிபரப்பு நிலையம் நடத்துவதாக அவர்களுக்கு ஓர் எண்ணம்.

மெயின் றோட்டை விட்டு விலகி அவன் செல்ல வேண்டிய பாதை இதோ வருகிறது. அந்தப் பாதையில் படகும் விடலாம். மீனும் பிடிக்கலாம். இந்த கிராமசபைக்காரர்களுக்கு இந்தப் பாதையில் மாத்திரம் அப்படி என்ன கோபம்? கிராமசபையிலேயே முழுப்பிழையையும் போட்டுவிட முடியாது. போன வருஷம் 'மூன்று லோட் கிரவல்' கொட்டப்பட்டதென்னவோ உண்மை தான். ஆனால் இந்தத் தெருவின் மாதரசிகள் தங்கள் வீட்டுத் தோட்டங்களுக்காக இரவோடிரவாக இரண்டு லோட் 'கிரவலை'ப் பங்கு போடுவார்கள் என அவர்கள் எதிர்பார்த்தார்களா?



ஈழத்துத் தமிழ் இலக்கியத்துறையில் சிறுகதை, நாவல், கவிதை, விமர்சனம், பத்தியெழுத்து என்ற துறைகளில் எழுதிவரும் உமா வரதராஜனின் முழுப்பெயர் உடையப்பா மாணிக்கம் வரதராஜன் என்பதாகும். கிழக்கு மாகாணம் பாண்டிருப்பைப் பிறப்பிடமாகக் கொண்ட இவரது சிறுகதைகள் அலை, கணையாழி, கீற்று, களம், இந்தியா ருடே போன்ற சஞ்சிகைகளிலும் வீரகேசரி பத்திரிகையிலும் பிரசுரமாகியுள்ளன. இவரது சிறுகதைத்தொகுதி 'உள்மன யாத்திரை' 1989 இல் வெளியானது. 2009 ஆம் ஆண்டில் வெளியான இவரது நாவல் "மூன்றாம் சிலுவை". மட்டக்களப்பு மாவட்டத்தில் 'சிங்கர்' சிறுவனத்தின் பிராந்திய மேலாளராகக் கடமையாற்றும் இவர் 'வியூகம்' சஞ்சிகையையும் வெளியிட்டு வருகிறார்.

1976 ஆண்டில் 'அலை' சஞ்சிகையில் வெளியான இவரது 'தொலைவில் தெரியும் ஒற்றை நட்சத்திரம்' சிறுகதை இங்கு பிரசுரமாகிறது.

அந்தத் தெருவில் நடப்பதாகவும், சுழியோடு வதாகவும் பாவனை பண்ணிக் கொண்டு வீட்டையடைந்ததும் அவனுக்கு இனந்தெரியாத பூரிப்புண்டாயிற்று. கதவைத் தட்டியவுடன் யார் வந்து திறப்பார்கள்? அம்மாவா? மாமாவா?.... மாமாதான் சுறுசுறுப்பான மனிதர். அவர்தான் வந்து திறப்பார். கதவை அவன் தட்டினான். ஓய்; என்ற குரல் கேட்டது. அம்மா வருகிறாள்; ஆறு மாத காலமாக கடிதமூலம் பாசமொழி பரிமாறிக் கொண்ட அம்மா இதோ எதிரே வருகிறாள்! அவனைக் கண்டதும் அம்மாவுக்கு அதிர்ச்சி... ஆச்சரியம்..... "தம்பி! இதென்ன திடீரெண்டு? சுகம் கிகம் இல்லையோ?"

"சீ.... சும்மா வந்த...." அவன் இழுத்து முடிப்பதற்குள் அம்மா அவனை உற்சாகத்துடன் உள்ளே கூட்டிப் போகிறாள். அவன் மண்டபத்தைக் கடந்து போகும்போது தம்பி விஜி பாயைச் சுருட்டிக் கொண்டிருக்கிறான். பக்கத்தில் சின்னத்தம்பி சுரேஷ் ஒப்பாரி வைக்கிறான். அவன் அப்படித் தான். தம்பி விஜி அவனைக் கண்டதும் சந்தோஷத்துடன் கூக்குரலிட்டு இளையவனுக்கு அண்ணனது வரவை அறிவிக்க, சுரேஷ் ஒரு கணம் நிமிர்ந்து, கண்களை அகல விரித்துப் பார்த்து விட்டு மீண்டும் அழுகிறான்.

அவன் தனது அறையைத் திறந்து உள்ளே போகிறான். ஒரு பெருமூச்சு! வெளியே கேட்கும் சுரேஷின் அழுகுரல் அப்படியே மறைந்து போகிறது. அவன் கொணர்ந்த பலகாரங்கள் சுரேஷை அடக்கியிருக்கும். (14ஆம் பக்கம் பார்க்க....)

## உச்சப் பெறுமதி

*வீதி விஸ்தரிப்பு;*
*வேண்டப்பட்ட வேலைதான்!*
*வேண்டாதன கழிவதெனில்*
*பரவாயில்லை எனலாம்*
*கழிவன என்னவோ....*
*வீதியோர மதில்கள்*
*வேலிகள்; அருகில்*
*நிற்கும் பயன்தரு மரங்கள்*
*வீட்டு விறாந்தைகள்*
*கடைகளின் முகப்புகள்*
*கிணறுகள்; மலக்குழிகள்*
*என்பவற்றோடு*
*வருங்காலச் சந்ததிக்கு(ப்)*
*பயன்தர வென்று*
*நட்டு வைத்த பனைமரங்கள்*
*அத்தனையும் வேரோடு புரட்டி*
*ஒரு நூறாண்டு காலம்*
*கடந்தும் நான்கு*
*தலைமுறைகளுக்கு மேலாக*
*நிழல் கொடுத்து*
*மழை கொடுத்து*
*நிஷாப் புயலோடு,*
*பல்வேறு பெயரில்லாச்*
*சூறாவளிகள் தாண்டி*
*நின்ற அரசமரம்,*
*ஆலமரம், வேப்பமரம்*
*எல்லாமும் வேரோடு*
*கிளறி எடுக்கும் போதும்*
*நெஞ்சுக்குள் இலேசாக*
*வலியெடுக்க (ச்)*
*சூழலியலாளர்களும்*
*புவிக்கோளக் காவலரும்*
*ஏதும் சொல்ல முடியாமல்....*
*ஏனெனில்,*
*வட பகுதியில் இது போன்றல்லாமல்*
*மாறுபட்ட வழியிலெல்லாம்*
*மரமழியும் போதும்*
*சொத்தழியும் போதும்*
*இதே போலத் தான்*
*கை கட்டி வாய் பொத்தி*
*மௌனியாகத் தான்!?*
*என்ன செய்வது*
*ஒன்றைப் பெறுவதற்கு*
*மற்றொன்றை இழப்பது*
*நியதியென்றே சொன்னாலும்*
*இழப்பவை ஒன்றல்ல*
*பலவாக இருக்கும் போது*
*பெறுவது நிச்சயமாய் உச்சப்*
*பெறுமதியாய் நமக்கு*
*அமைந்தால்தான் நியாயம்!*

-சின்மயி.

# மாணிக்கமே என் மணியே!

இலக்கியக் காட்சி 41

காக்கைக்கும் தன்குஞ்சு பொன் குஞ்சு' என்பது ஒரு பழமொழி. எந்தத் தாய்க்கும் தன்னுடைய குழந்தையே அழகான குழந்தையாகத் தெரியும். கண்ணனைத் தனது செல்வக் குழந்தையாகப் பாவனை செய்து பாடிய பெரியாழ்வாரும் இத்தகையதொரு மனநிலையில் தான் இருக்கிறார்.

கண்ணனை நீராட வரும்படி அழைக்கும்போது அவனோ வராமல் மாட்டுத் தொழுவப் புழுதியிலே ஓடியாடித் திரிகின்றான். அவன் திருமேனியெங்கும் புழுதி படிந்து கிடக்கிறது. வெண்ணெய் அளைந்து உண்டமையால் அதன் துகள்களும் சேர்ந்து கிடக்கிறது. அந்த வேளையில் அவனுடைய திருக்கோலத்தைப் பார்த்தால் எல்லோரும் நகைப்பார்கள். ஆனால் வளர்ப்புத்தாயான பெரியாழ்வாருக்கோ அந்தக் கோலப்புனைவு உள் மனிதிலே பெருமகிழ்வைத் தந்து நிற்கிறது. ஆனால் அதைக் காண்பவர்கள் தன்னைப் பழித்துரைப்பார்களே என்று கண்ணனிடம் கூறுகிறார். வெட்கம் சிறிதும் இன்றி நீ இப்படித்திரிவதைக் கண்டால், நிச்சயமாக உனது மைத்துனியான நப்பின்னை கண்டால் கைகொட்டிச் சிரிப்பாள் அல்லவா! இதனை நீ உணர வேண்டுமப்பா! அதனால் அவ்வாறு இக்கோலத்தை நப்பின்னை காண்பதற்கு முன்னரே நீராட ஓடி வா அப்பனே என்று பவ்வியமாக அழைக்கிறார்.

**"பூனித் தொழுவினிற் புக்குப்**
**புழுதியளைந்த பொன்மேனி**
**காணப்பெரிதும் உகப்பன்**
**ஆகிலும் கண்டால் பழிப்பர்**
**நாண் இத்தனையும் இலாதாய்**
**நப்பின்னை காணிற் சிரிக்கும்**
**மாணிக்கமே என் மணியே**
**மஞ்சனம் ஆட நீ வாராய்"**

மாடுகள் கட்டப்பட்ட மாட்டுத் தொழுவம். அங்குதான் கண்ணன் மகிழ் வோடு விளை யாடுகிறான். அதனால் வெண்மையான புழுதி யெல்லாம் அவனுடைய வெண்ணெய் படிந்த திரு மேனியின் மேல் போய்ப் படிகிறது. கருமையான மேனியிலே இப்பொழுது புதிய அழகு சேர்ந்துவிட்டது போலிருக்கிறது. இக்காட்சியை கண்ணன் தளர் நடைப் பருவம் பற்றிப்பாடும் போதும் பெரியாழ்வார் மிக அழகாகக் காட்சிப் படுத்திக் காட்டுகிறார்.

**"வெண்புழுதி மேற் பெய்து கொண்டளைந்ததோர்**
**வேழத்தின் கருங்கன்று போல்**
**தென் புழுதி யாடித் திரிவிக் கிரமன்"**

இந்தக் கோலம் தாய்க்கு நினைக்கும் தோறும் மகிழ்வைத் தரும். கண்ணனின் விளையாட்டுத் தோழி, மைத்துனி நப்பின்னை இக்காட்சியைக் கண்டு நிச்சயமாக என்னைப்போல மகிழ்ச்சியடைய மாட்டாள். தன் நட்புத் தோழிருக்கு உன்னைக் காட்டிச் சிரிப்பாள்.

இப்பாடலுடன் கண்ணன் நீராட வந்து விட்டதாகப் பெரியாழ்வார் கற்பனை செய்கிறார். மாணிக்கம், மணி எனக் கண்ணனை விழிக்கிறார். அவர் அவனை நீராட வைப்பதற்குக் கையாண்ட உத்தியும் உலகியல் நடைமுறையின் பாற்பட்டதே. குழந்தையாக இருந்தாலும் தனது விளை[illegible]ரின் முன்னே அவமானப் [illegible]வதற்கு எந்தக் குழந்தையும் விரும்பாது. இத்தகைய குழந்தை உளவியலையும் நன்கு அறிந்திருந்த பெரியாழ்வார் கண்ணனை நீராட அழைப்பதற்கும் அதைப் பயன்படுத்தி உள்ளார்.

ஏனெனில் இப்பத்தில் அடுத்த பாடல் அவர் பாடலில் பயன் கூறும் பாடலாகவும் கண்ணனை நீராட்டியதாகவும் அமைந்துள்ளது. யசோதை கண்ணனை எவ்வாறு நீராட்டினாள் என்பதைப் பாவனை செய்து பாடியதாகக் குறிப்பிடுகிறார்.

**"கார்மலி மேனி நிறத்துக்**
**கண்ண பிரானை யுகந்து**
**வார்மலி கொங்கை யசோதை**
**மஞ்சனம் ஆட்டிய ஆற்றை**
**பார்மலி தொல்புதுவைக் கோன்**
**பட்டர் பிரான் சொன்ன பாடல்**
**சீர்மலி செந்தமிழ் வல்லார்**
**தீவினை யாதும் இலரே"**

பெரியாழ்வாருடைய கண்ணன் மீது ஆராத பக்தியைத் தமிழ்மொழியின் சிறப்பால் எடுத்துரைத்துள்ளார். இதனைச் 'சீர் மலி செந்தமிழ்' என்னும் தொடர் நன்கு விளக்கியுள்ளது. தாயாகப் பாவனை செய்து பாடுவதற்குப் பெரியாழ்வாரது தமிழ்மொழி ஆற்றலும் துணையாக நின்றது. தனது பக்தியுணர்வை எல்லோரும் அறியச் செய்ய அவர் பாடிய பாடல்கள் இன்றுவரை நிலைத்திருப்பதற்கும் தமிழ் மொழியின் வளமே காரணம். அதனால்தான் பக்தியின் மொழி தமிழ் என்ற சிறப்பும் ஏற்பட்டது.



* * * * * *

கலாநிதி
மனோன்மணி சண்முகதாஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# 'பேஸ்புக்'கில் ஓர் ஆச்சரியம்

இந்து மதத்தின் படி இது கலியுகம். ஆனால் இணையத்தளத்தைப் பொறுத்தவரை நடப்பு காலத்தை மின்னஞ்சல் யுகம்,டிவிட்டஸ் யுகம், வலைப்பின்னல் அல்லது பேஸ்புக் யுகம் என்று எப்படி வேண்டுமானாலும் அழைக்கலாம்.


பேஸ்புக் யுகம் என்று சொல்வதற்கான காரணங்களை எளிதாகவே புரிந்து கொள்ளலாம்.

ஒரு காலத்தில் மின்னஞ்சல்முகவரி இருப்பது எப்படி இன்றியமையாததாகக் கருதப்பட்டதோ அதே போல இன்று வலைப்பின்னல் தளமான பேஸ்புக்கில் ஒருவருக்கென சொந்தமாக பக்கம் இருப்பது இயல்பானதாகக் கருதப்படுகிறது.

பேஸ்புக் பக்கம் மூலம் தகவல்களை பகிர்ந்து கொள்வது சுலபமாக இருப்பதோடு நணபர்களைப்பற்றித் தெரிந்து கொள்ள வேண்டும் என்றால் பேஸ்புக்கில் நுழைவதே போதுமானதாக இருக்கிறது.

பேஸ்புக் பக்கத்தின் மூலம் சமயங்களில் ஒருவரது ஜாதகத்தையே தெரிந்து கொண்டுவிட முடியும். யாரையாவது தொடர்பு கொள்ள் வேண்டும் என்றால் இப்போது தொலைபேசி எண்ணையோ ஏன் இமெயில் முகவரியையோ கூட பலரும் தேடுவதில்லை. பேஸ்புக் பக்கம் இருக்கின்றதா என்றே பார்க்கின்றனர்.

இப்படி பேஸ்புக் பக்கம் மூலம் பெல்ஜியம் நாட்டைச் சேர்ந்த மனிதர் ஒருவருக்கு ஆச்சரியமான அனுபவம் நிகழ்ந்துள்ளது. 33 வருடங்களுக்கு முன் அவர் அனுப்பிய செய்திக்கான பதில் பேஸ்புக் மூலம் கிடைத்திருக்கின்றது. அவரே கூட அந்தச் செய்தியை மறந்து விட்ட நிலையில் இத்தனை ஆண்டுகளுக்கு பின் யாரோ ஒரு பெண்மணி பதில் அளித்து வியப்பை ஏற்படுத்தியுள்ளார்.




அந்த ஆச்சரியத்தின் பின்னே இருப்பதும் ஒரு புதிரான சங்கதிதான். போத்தலில் ஒரு செய்தி பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருக்கலாம். புறாகாலில் செய்தியை அனுப்பி வைப்பது முதல் தபால் தந்தி, மின்னஞ்சல் என மனிதகுலம் எத்தனையோ தகவல் தொடர்பு வழிகளைக் கையாண்டு இருக்கின்றது.

இவற்றுக்கு நடுவே கொஞ்சம் விநோதமான தகவல் தொடர்பும் புழக்கத்தில் இருக்கின்றது. இதனை பரவலானது என்றோ பிரபல்மானது என்றோ சொல்ல முடியாது. ஆனால் சுவாரசியமானது. போத்தலில் செய்தியை எழுதி கடலில் வீசி எறிந்து விட்டு எப்போதாவது யாராவது அதனைப் பார்த்து தொடர்பு கொள்கின்றனரா என்று காத்திருப்பது தான் இந்தத் தகவல் தொடர்பு முறை. இந்தச் செய்தி பார்க்கப்படும் என்பதற்கோ பார்க்கப்பட்டாலும் பதில் வரும் என்பதற்கோ எந்த உத்தரவாதமும் இல்லை.

உண்மையில் இந்த நிச்சயமற்ற தன்மையே இதில் உள்ள சுவாரசியம். அந்த வகையில் இது ஒரு புதிர் கலந்த விளையாட்டு. இந்த பழக்கத்தின் ரிஷி மூலம் நதி மூலம் பற்றி தெரியவில்லை. இதனை அடிப்படையாகக் கொண்டு அழகான படங்கள் வந்துள்ளன. ஏறத்தாழ 33 ஆண்டுகளுக்கு முன் ஆலிவர் வான்டேவல்லே என்னும் வாலிபருக்கு இங்கிலாந்தில் சுற்றுலா சென்றிருந்தபோது திடீரென இப்படி போத்தலில் செய்தி அனுப்ப வேண்டும் என தோன்றியிருக்கின்றது.

அப்போது அவருக்கு 14 வயது. படகில் சென்று கொண்டிருந்த அவர் அந்த நேரத்தின் இந்துதலில் ஒரு காகிதத்தை கிழித்து அதில் தன்னைப்பற்றியும் தான் மேற்கொள்ளும் பயணத்தையும் குறிப்பிட்டு ஒரு செய்தி எழுதி அதனை போத்தலில் அடைத்து தண்ணீரில் வீசிவிட்டார். யாராவது அதனைப் பார்த்து கடிதம் எழுதுகின்றனரா பார்க்கலாம் என்பது அவரது எண்ணம். பதில் வந்தால் பயணத்தின் நினைவுச்சின்னமாக வைத்துக் கொள்ள லாம் என்று அவர் நினைத்திருக்கலாம். வராவிட்டாலும் இந்த எதிர்பார்ப்பே ஒரு சுவாரசியம் என நினைத்திருக்கலாம்.

எது எப்படியோ இந்த போத்தல் கடலில் தண்ணீரில் மூழ்கியது 1977 இல். அதன் பிறகு வாலிபர் ஆலிவர் இந்த சம்பவத்தை மறந்தே விட்டார்.

இப்படி ஒரு செய்தி அனுப்பியதை அவர் மீண்டும் நினைத்துப் பார்த்திருக்கக்கூட வாய்ப்பில்லை. ஆனால் இங்கிலாந்தைச் சேர்ந்த ஒரு பெண்மணி அவரது பேஸ்புக் பக்கத்தில் தொடர்பு கொண்டு போத்தல் செய்தியை நினைவு படுத்திய போது அவர் வியந்தே போய் விட்டார். டோர்செட் நகரில் வசிக்கும் லார்னே யீட்ஸ் என்னும் பெண்மணி அந்த போத்தலை சமீபத்தில் கண்டெடுத்திருக்கிறார். உடனே அதற்கு பதில் அளிக்க வேண்டும் என்ற உந்துதல் அவருக்கு ஏற்பட்டுள்ளது.

அதில் இருந்த தபால் முகவரியை பெரிதாக எடுத்துக் கொள்ளாத யீட்ஸ் ஆலிவரின் பெயரை இணையத் தளத்தில் தேடி அவருடைய பேஸ்புக் பக்கத்தைக் கண்டுபிடித்து தொடர்பு கொண்டிருக்கிறார். முதலில் ஆலிவருக்கு எதுவுமே புரியவில்லை. தனக்கும் அதற்கும் தொடர்பில்லை என கூறிவிட்டார். பின்புதான் 14 வயதில் தான் மேற்கொண்ட புதிரான முயற்சி நினைவுக்கு வந்தது. இப்போது இருவரும் 'பேஸ்புக்' [illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓய்வுக் காலத்தில் நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?
இளமையிலேயே உங்கள் ஓய்வுக் காலத்தை
திட்டமிட சிறந்த தருணம் இது!

# ஓய்வுக் கால திட்டமிடல் மாதம்

மே 1 ஆம் திகதி முதல் 31 ஆம் திகதி வரை

செலிங்கோ இன்சூரன்ஸ் பிஎல்சியினால் ஒழுங்குபடுத்தப்பட்டது. (PQ24)

அழையுங்கள்: 011 2 461 461

CRA
செலிங்கோ லை∴ப்
ஓய்வூதியக் கணக்கு

## செலிங்கோ லை∴ப்

செலிங்கோ லை∴ப் டவர், 106, ஹெவ்லொக் வீதி, கொழும்பு 5.
கம்பனி பதிவு இல. PQ24 தொ.இல.: (011) 2 461 461 ஈமெயில்: service@ceylife.lk இணையம்: www.ceylincolife.com






## 100ml ReeBonn Silicone Conditioner உடன் ரூ.80/- பெறுமதியான Herbal Body Lotion இலவசம்!






சிக்கான கூந்தல் மறைந்து போனதே...
செழிப்பான கூந்தல் தானாக வந்ததே...

Win
Return Air Tickets To CHENNAI!

இதோ! யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, அம்பாறை மற்றும் திருகோணமலை வாசிகளுக்கு ஓர் அரிய சந்தர்ப்பம்

எந்தவொரு ReeBonn அழகு சாதன உற்பத்தியின் அட்டைப்பெட்டிகள் அல்லது உறைகளை இணைத்து உங்கள் பெயர், முகவரி மற்றும் தொலைபேசி இலக்கத்தை குறிப்பிட்டு எமக்கு அனுப்பி, சென்னைக்கு 3 நாட்கள் சுற்றுப்பயணம் சென்று வருவதற்கான அரிய வாய்ப்பினை பெற்றுக்கொள்ளுங்கள்.

கூந்தலைப்பற்றி அக்கறைக்கொள்ளும் உங்களுக்கு சருமத்திற்கும் பராமரிப்பு...

ஒன்றுக்கு மேற்பட்ட தடவைகள் உங்கள் விண்ணப்பங்களை அனுப்பி விமான சீட்டினை பெற்றுக்கொள்ளும் வாய்ப்பினை அதிகரித்துக்கொள்ளுங்கள்.

வாரம் ஒன்றுக்கு ஒருவர் என்ற அடிப்படையில் மாதமொன்றுக்கு நான்கு அதிஷ்டசாலிகள் சீட்டிழுப்பின் போது தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

ReeBonn Products are available at all Super Markets, Fancy Shops, Cosmetic Shops, Pharmacies & General Groceries

விண்ணப்படிவங்களை அனுப்பவேண்டிய முகவரி
ReeBonn Cosmetics (Pvt) Ltd, P.O.Box 777, Mabola, Wattala


எங்களது ஏனைய கேசப்பராமரிப்பு உற்பத்திகள்
Shampoo | Conditioner | Black Henna

மேலதிக விபரங்களுக்கு
தொடர்புகொள்ளவும்: 011-5344422, 0773-710171

ReeBonn
Naturally Cosmetics


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொற்சிலம்பம் - போட்டி இல: 115



அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### இடமிருந்து வலம்

1. வடக்குத் தமிழரைக் கட்டுப்படுத்தும் சட்டம்.
5. இரண்டாவது தமிழ் மாதம்.
7. இறுதியானது.
8. மிகுதியாக/ விசாலம்/ மிதமிஞ்சி.
10. ஐம்பத்தியாறு தேசத்தில் ஒன்று.
12. சந்ததி/ தலைமுறைவழி.
13. தமது என்பதைக் குறிக்கும்.
14. முதலைக் கண்ணீர் மாதிரி இந்தப் பெண்ணின் கண்ணீரும்.
15. இது ஓய்வதில்லை.
16. சகோதரன்.
18. நவமணியில் ஒன்று.
20. அதிகார நிலை.
22. உறுதியான தன்மை.
23. கிரௌஞ்சப் பறவை.

### மேலிருந்து கீழ்

1. உடல்.
2. (தலை) முடி/ மயிர்.
3. கவரும் கலை.
4. விளையாட்டுத்திடல்.
5. இறக்க/ சாக.
6. சிங்கம்.
9. காந்தியின் கடைசி வார்த்தை.
11. இளவேனில்.
12. நோவு.
13. சிரசு.
14. தீர்ப்புச் சொல்லுபவர்.
15. தோழன்/ நாயகன்/அன்புகொண்டவன்.
16. ஒரு தானிய வகை.
17. தோல் வாத்தியக் கருவி.
19. ஒரு திசையைக் குறிக்கும் சுருக்கம்.
21. நெய்வோர் கருவி.

★ வாசகர்கள் மத்தியில் குறிப்பாக மாணவ, மாணவியர் மத்தியில் பொது உளச்சார்பு மற்றும் மொழி அறிவை வளர்த்து விடத்தூண்டுவதே இப்போட்டி நடத்தப்படுவதன் முக்கிய குறிக்கோள்.

★ ஒவ்வொரு போட்டியிலும் ஏராளமான வாசகர்கள் ஆர்வத்துடன் கலந்துகொள்வதுடன், அவர்களில் பெரும்பாலானோர் முற்றிலும் சரியான விடைகளை அனுப்பி வருவதால் பரிசுக்கும் பாராட்டுக்கும் உரிய அதிஷ்டசாலிகள் குலுக்கல் முறைமூலம் தேர்ந்தெடுக்கப்படுகின்றனர்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 111இற்கான சரியான விடைகள் வருமாறு:

**இடமிருந்து வலம்**

(1)அமராவதி.(5) பசி. (7)சரி. (8)தடங்கல்(9)சினம். (10) வலு. (11) பாரதம். (13)மான். (14) விசம். (15) தரு. (17) தம்பதி.(19)தலைவி. (20) ரம்பம். (22) அம்புலி. (23) கூன்.

**மேலிருந்து கீழ்**

(1) அசம்பாவிதம். (2)மரி. (3) வதனம். (4) திடம். (5) பகவன். (6) சில்லு. (9) சிதம்பரம். (12) ரசம். (13)மாருதம். (16) கவிஞன். (18) திம்பு. (21) பலி.

★ சொற்சிலம்பம் போட்டி தொடர்பான வாசகர்களது ஆலோசனைகளும் கருத்தில் எடுக்கப்படும்.

★ சொற்சிலம்பம் போட்டி இலக்கம்: 111 இற்கான சரியான விடைகளை எழுதி அனுப்பியவர்களில் குலுக்கல் மூலம் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல் ஐந்து அதிர்ஷ்டசாலிகளது பெயர் விவரங்கள் வருமாறு:

**1 ஆம் பரிசு** — த.தூயனா, இல.40, மாட்டீன் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

**2 ஆம் பரிசு** — சி. லதாங்கி, யா/ துன்னாலை காசிநாதர் வித்தியாலயம், கரவெட்டி.

**3 ஆம் பரிசு** — க.குணசேகரம், ஆய்வுகூட உதவியாளர், ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை

**4 ஆம் பரிசு** — மரிய அருட்செல்வம் நிரோஜினி, தாளையடி வடக்கு, தாளையடி.

**5 ஆம் பரிசு** — பொ.கிரித்திகா, இலங்கை மின்சாரசபை, சுன்னாகம்.

### பாராட்டுப் பெறுவோர்

(1) சி.சிவாகுரன், மயிலிட்டி வடக்கு, காங்கேசன்துறை.

(2) ப.பவதனுஜன், யா/வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயம், தொண்டைமானாறு.

(3) செல்வி கு.பானுஜா, இல. 75/1, பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம்.

பரிசுக்கு உரியோராகத் தேர்ந்தெடுக்கப்படுவோர் ஒரு வாரத்தின் பின்னர் ஞாயிற்றுக்கிழமை தவிர்ந்த அலுவலக நாள்களில் காலை 9.00 மணிமுதல் பிற்பகல் 2.00 மணிவரை தமக்குரிய பணப் பரிசில்களைத் தமது அடையாளத்தைச் சரியான வகையில் உறுதிப்படுத்தி 'உதயன்' அலுவலகத்தில் நேரில் வந்து பெற்றுக்கொள்ளலாம்.

### போட்டி விதிகள்

1. வாசகர் எவரும் சொற்சிலம்பம் போட்டியில் கலந்து கொள்ளலாம்.
2. ஒருவர் எத்தனை கூப்பன்களையும் நிரப்பி அனுப்பலாம்
3. உதயனில் பிரசுரமாகும் கூப்பன்களே போட்டிக்கு ஏற்கப்படும்.
4. போட்டி தொடர்பாக ஆசிரியரின் தீர்ப்பே முடிவானதாகும்.
5. வெற்றி பெறும் முதல் ஐந்து பேர்களுக்கு முறையே ரூபா 300/=, ரூபா 250/=, ரூபா 200/=, ரூபா 150/= ரூபா 100/= பணப் பரிசில்கள் வழங்கப்படும்.

அத்துடன் பாராட்டுப்பெறும் மூன்று அதிஷ்டசாலிகளது பெயர் விவரங்களும் உதயனில் பிரசுரிக்கப்படும்.

6. பூர்த்தி செய்யப்பட்ட கூப்பன்கள்,

**சொற்சிலம்பம் போட்டி இல. 115**
**நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்)லிமிட்டெட், இலக்கம் 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.**

என்னும் முகவரிக்கு எதிர்வரும் புதன்கிழமைக்கு அடுத்து வரும் புதன்கிழமைக்கு முன்னர், 26 .05.2010 ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கத்தக்கதாக தபாலட்டையில் ஒட்டி அனுப்பி வைக்கப்படவேண்டும்.

7. சொற்சிலம்பம் போட்டி இல.113 இல் வெற்றி பெறுவோர்களது விவரம் 30.05.2010 ஞாயிறு உதயனில் பிரசுரிக்கப்படும்.

## தொலைவில் தெரியும்....

11ஆம் பக்கத் தொடர்ச்சி............

அவன் கிணற்றடிக்கு குளிக்கப் போன தும் சமையலறையிலிருந்து அம்மாவின் எச்சரிக்கைக் குரல் கேட்கிறது. ''தம்பி! அங்கால பாசி பிடிச்சிருக்குக் கவனம்!''

பிறகு தேங்காய் துருவும் ஓசையும், அவன் குளிக்கும் போது நீர் இறைபடும் ஓசையும் ஒன்றுடன் ஒன்று கலந்து போகின்றன. ''வேலை எப்படிக் கரைச் சலா? என்று தம்பி கேட்கிறான். தான் கேட் டிருக்க வேண்டிய கேள்விகளை விஜி கேட்டு விட்டான் என்பதற்காக அம்மா ரொம்பப் பெருமிதப்படுகிறாள். அது முகத்தில் தெரி கிறது. அவன் எல்லாவற்றுக்கும் பதில் சொல்லி எழுந்து கொள் கிறான். அவன் அதிகமாக வளர்ந்திருக்கும் அந்த முடி யைப் பற்றி அம்மா கவலைப்படு கிறாள். வெட்டி முழுகச் சொல்கிறாள். அவன் அசட்டுச் சிரிப்பையுதிர்க்கிறான். மாமாவைப் பற்றி அவன் விசாரிக்கிறான். ''அவர் அம்மாட வீட்ட நிற்கிறார். போய்ப் பார்த் திட்டு வா!'' என்று அம்மா சொன்னாள்.

அவன் இனி ஊர்வலம் புறப்படப் போகிறான். மழைக்குப் பயந்து வீட்டுக்குள் ஏறி, சுவரில் தூங்கிக் கொண்டிருந்த சைக்கிளை அவன் உருட்டிக் கொண்டு நடந்தான். 'காதல் வாகனம்' என்று ஒரு காலத்தில் செல்லப்பெயர் வாங்கியிருந்த அந்த சைக்கிளின் 'மட்காட்கள்' இப்போது ஆடுகின்றன. 'அவனைப் போலவே தம்பி யும் மூன்று பேரை வைத்து சைக்கிள் ஓடியிருப்பானோ? சைக்கிளை உருட்டிக் கொண்டு அவன் ரோட்டுக்குப் போகும் போது வழியில் குறுக்கிட்ட 'எவக்கிறீன் இலைகளிலிருந்த நீர்த்துளிகள் தலையில் விழுந்து முகத்தில் வடிகின்றன.

சைக்கிள் சிறிய ஏரிக்கு ஒப்பான அந்த வீதியில் நீரைக் கிழித்து இரு பக்கமாக்கிக் கொண்டு ஓடுவது அழகாக இருக்கிறது. மெயின் றோட்... சந்திரகுமாரின் வீடு... அதைக் கடந்ததும் அவனுடைய கண்கள் ஆவலுடன் அந்தக் கேற்றை நோக்குகின் றன. அங்கு வசந்தா இல்லை. அவளுடைய கடைசித் தங்கைச்சி ஆனந்தி நிற்கிறாள். அவள் அவனை ரொம்ப விசித்திரமாகப் பார்க்கிறாள். அவன் தன் கண்களை வேண்டுமென்றே அகல விரித்து வேடிக்கை காட்டினான்.

சைக்கிள் அந்த இடத்தைக் கடந்து இன்னுங் கொஞ்சத் தூரம் போய் ஒரு ஒழுங்கையில் திரும்புகின்றது. சைக் கிளைச் சாத்தி விட்டு வளவுக்குள் போன தும் ''தம்பி வந்திருக்கு! தம்பி வந்திருக்கு'' என்ற குரல்கள் இங்கு எதிரொலிக் கின்றன. மாமா வருகிறார்.

''ஆ! வாடாப்பாஎப்பிடி? உள்ளுக்குள்ள வா''. அவன் அவரைத் தொடர்ந்து போகிறான். அவன் தலைமுடியைப் பார்த்து அவருக்கு நமுட்டுப் புன்னகையொன்று வருகிறது. ''கொழும்பு ஸ்ரைல்லா?'' என்று கேட் கிறார். அம்மம்மா அவனருகே வரு கிறாள். பிரிவின் துயர்களைச் சொல்லி அழுகிறாள். அவன் நம்பவில்லை. இவன் இந்த ஆறுமாத காலத்துக்கு பிரிவின் துயரில் அழுந்தி எவருக்காகவும் ஏங்கவில்லையே! இவர்களா அப்படி ஏங்கிப் போனார்கள்? ஒரு வேளை ஏங்கியிருக்கலாம். அநியாயமாக அவன் மனதில் ரொம்பக் காயங்களை உண்டு பண்ணிவிட்டோம் என்று. அன்ரிமார் வந்து சுகம் விசாரித்தனர். சீதா அன்ரி யின் சின்ன மகன் பிரதீஷ் அவனிடம் வர மறுக்கிறான். அவனுடைய தோற்றத் தைக் கண்டு வரப் பயப்படுவதாகச் சின்ன அன்ரி காரணங்காட்டினாள். பிரதீஷ் பரவாயில்லை. ஆறுமாத காலத்திற்கு முதல் 'இவர்களெல்லாருமே அவனை நெருங்கப் பயப்பட்டவர்கள் அல்லவா? மறுபடியும் ஏதோ நினைவு களில் அவன் சிக்கி அவற்றில் ஆழ்ந்து புதைந்து போகிறான். இடையில் மரவள்ளிக்கிழங்கு வந்ததும், கோப்பி தந்ததும், வாயில் போட்டதும்.... ஏதோ கனவுகள் போல! அவன் எழுந்து கொள் கிறான். அவன் எழுவதைக் கண்டதும் மறுநாள் மதியச் சாப்பாட்டுக்கு வரும்படி அழைப்புத் தருகிறாள் அம்மம்மா. மாமாவும் அதை வலியுறுத்திச் சொல்ல அவன் சரியென்று ஒப்புதல் அளிக்கிறான். சைக்கிள் மீண்டும் மெயின் றோட்டில் ஓடுகின்றது. 'வரதன்!' என்று யாரோ கத்தும் குரல். சைக்கிளில் ஓடிக்கொண்டே அவன் திரும்பிப் பார்த்தான். சுகுமார் சைக்கிளில் வந்து கொண்டிருந்தான்.

அனைவரும் கேட்கும் அதே கேள்விகளைத் தான் சுகுமாரும் கேட்கிறான். 'எப்போது வந்தாய்? எப்போது போவாய்?' இடையில் ஒரு தடவை சினிமா நடிகனொருவனின் பெயரைச் சொல்லி அவனுடைய 'ஹெயர் ஸ்ரைலைப்' ப் போலிருப்பதாக அவனது முடியைப் புகழ்ந்தான். அதில் உண்மையும் இருக்கலாம், பொய்யும் இருக்கலாம். அவனுக்கு அதில் அக்கறை யில்லை. அந்த நாள்களில் இந்த வெறு மயக்கத்தில் விழுந்து சுகுமாருடன் சேர்ந்து உடையார் றோட், வன்னி றோட், வி.வி.றோட் எனப் பல றோட்டுக்களின் தரிசனத்தில் இறங்கி, இறுதியில் களைத்து தாக சாந்தி செய்வதற்காக பாலூஜி கிறீம் ஹவுஸில் புகுந்த நாள்களுமுண்டு. அவை வசந்தகரமான நாள்கள். அந்த நாள்களின் நினைவுகள் அவன் மனதில் பசுமையாக நிறைந்து வாழ்கின்றன. நண்பர்கள் தராத நிறைவை அந்த நினைவுகள்தான் தருகின்றன.

சுகுமாரால் அவனுடன் ஒட்டிப்பேச முடியவில்லை. அவனால் மனச்சாட்சியைக் கொன்றுவிட்டு எப்படிப் பேச முடியும்? பள்ளிக் கூடத்தில ஜெயாவுக்கு சுகுமார் கடிதங் கொடுத்து அசட்டுத்தனமாக அந்த அரக்கி மிஸ் - அற்புதநாதன் ரீச்சரிடம் மாட்டி, வீட்டுக்குப் போகப்பயந்து, நஞ்சு குடிக்கப் போவதாக அவனிடங் கூறிஅழ, நண்பனுக்காக அன்று முழுவதும் அலைந்து, பயந்து வீட்டில் கொண்டுபோய் அவனைச் சேர்த்ததும் அந்த சுகுமார் கடைசியாக என்ன செய்தான்? 'வரதன் தான் தன்னைக் கெடுத்தவன். காதற்கடிதம் எழுதப் பழக்கியவன்' என்ற மாபெரும் 'உண்மை யைக்' கூறி வீட்டில் நல்ல பெயர் வாங்கி நட்புக்குச் சமாதி எழுப்பி வைத்தான். அதையறிந்த போது அவனுக்கு முதலில் அதிர்ச்சியாக இருந்தது. பிறகு ஆச்சரியமாக இருந்தது.

''வாறன் மச்சான்''! என்று சொல்லிச் சுகுமார் ஒரு பாதையில் பிரிந்து போகிறான். அவன் தனியனாக அந்த நீண்ட வீதியில் போய்க் கொண்டிருக்கிறான்.

பள்ளிப் பையன்கள், கொன்வென்ற் மாணவிகள் பாடசாலை கலைந்து எதிரே வருகிறார்கள். அவனைப் பார்க்கும் போது அந்தப் பையன்களின் கண்களில் வியப்பின் தேக்கம் 'ஹிப்பி'! என்று ஒரு சிறுவன் கத்திவிட்டு ஓடுகிறான். மாணவிகளில் சிலர் கலகலவென்று சிரிக்கிறார்கள். அந்தப் சிரிப்புகளில் எவ்வளவு இனிமையுண்டோ அவ்வளவு பொய்யுமிருக்கலாம். அவன் பெருமூச்சு விட்டு இறந்த காலத்தை அழைக்கிறான்.

இளமைப் பருவத்தில் காதல் எழுவது குற்றமென்றால், காதல் பணக்கார ஜாதிக்கே உரியதென்றால் சம அந்தஸ்து இல்லாத பெண்ணுக்குக் காதல் விலக்கென்றால் வசந்தாவை அவன் விரும்பியதும், அவர்கள் கடிதங்கள் எழுதிக் கொண்டதும் பிழைகள்தான். வசந்தா அவனுக்கு எழுதிய ஒரு கடிதத்தைப் பிடித்து, அதைப் பள்ளிக்கு அனுப்பி அவளைப் பள்ளியிலிருந்து விரட்டிய அம்மாவின் செய்கை, அவனுடைய காது கேட்க அவளது வீட்டாருக்கு ஏசிய ஏச்சு.... அவளைச் சுடப் போகிறேன் என்று துவக்கைத் தூக்கி நின்ற மாமாவின் தாண்டவக் கோலம்.... ''நீ ரௌடியா? நான் பெத்த புள்ளல்ல'' என்ற அம்மாவின் பிரகடனம். ''கீழ்ச்சாதிகளோட உறவு வைச்ச நாயே!'' என்ற மாமாவின் வார்த்தைகள் மீளமுடியாத பள்ளத்துக்குள்ளே அவன் விழுந்து கிடப்பதாகக் கற்பனை பண்ணிக் கொண்டு மலைமேல் நிற்கும் பிரமையில் ஏளனச் சிரிப்புக்களை உதிர்த்துக் கொட்டும் சொந்தக்காரர்கள்... தங்கள் பிள்ளைகளைக் கெடுத்தவன், கடிதம் எழுதப் பழக்கியவன் என்று சுகுமார் போன்ற 'சில்லறைவாலுகளின்' குடும்பத்தாருடைய குற்றச் சாட்டுக்கள்.... அப்போதெல்லாம் கூட இந்த விஷயத்தில் தீவிரமாகவே இருந்த அவன், கடைசியில் எப்படிக் கோழையாகிப் போனான்? அந்த வசந்தா - அது தான் அமராவதிக்கு அடுத்தவள் என்று அவன் நினைத்தவள், அவனது குடும்பத்தைப் பழிவாங்குவதாக எண்ணிக் கொண்டு, அவன் முகத்தில் துப்பும் பெருமிதத்தில் ஒரு நாள் அவனைப் பார்த்த போது காறித் துப்பிவிட்டுப் போனாள்.

ஓ! உலகமே எவ்வளவு பொல்லாதது. எவ்வளவு அவசரமாக முடிவுகளுக்கு வந்து விடுகிறது. அவன் விரக்திக் கடலில் ஆழ்ந்து போனான்.

சுற்றியிருக்கும் அனைவருமே பொய்; பொய்; எல்லோருமே போலிகள்! எல்லாமே வேஷங்கள்! அவன் அந்த ஊரை விட்டே ஒரு நாள் புறப்பட்டுப் போனான். ஊருக்கும், அவனுக்கும் ஆறுமாத இடைவெளி!

அவன் மீண்டும் நினைத்துப் பார்த்தான். ஊர் தன்னைப் பற்றிக் கற்பனை பண்ணி குற்றஞ்சாட்டிய அத்தனை விஷயங்களையும் இப்போது மறந்து வரவேற்கிறதா? ரௌடித்தனங்கள் எல்லாம் நீங்கிய 'புதுமகன்' இவன் என அம்மா நினைக்கிறாளா. ஆறு மாதப் பிரிவால் இவன் 'மேல் சாதி' யாகி விட்டான் என மாமா ஏற்றுக் கொள்கிறாரா? அவனுக்குச் சிரிப்பு வந்தது.

'எல்லாம் பொய்! எல்லாமே பொய்!' 'ஆறுமாதப் பிரிவுக்கு அனைவருமே தரும் போலி மரியாதை இது. அவ்வளவுதான். வேஷங்களில் மயங்காமல், அசிங்கங்களைக் காணாமல் மீண்டும் தொலைதூரம் போய்விட வேண்டும். போலிகளின் அரவணைப்பில் சிக்கிக் கிடப்பதை விட தனியாகத் தொலைவில் இருப்பதில் எவ்வளவு சந்தோஷம்...!'

அவன் இந்தத் தீர்மானத்தை எடுத்துக் கொண்டு சீட்டியடித்தபடி வேகமாகச் சைக்கிளைச் செலுத்துகிறான். அவனுடைய அப்போதைய சீட்டிக்குக் காரணம் எதிரே ஆயிரம் அபிநயங்களுடன் வரும் சிங்கப்பூர் நைலெக்ஸ் ஒன்று! ★★★★★★★★★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எலும்புகள் தேய்ந்து போனால் சேர்க்கை எலும்புகள் தயார்

எலும்புத் தேய்மானம் என்பது எல்லா வயதினருக்கும் ஏற்படும் பாதிப்பாக இருந்து வருகிறது. எலும்புகள் தேய்ந்து விட்டால் உடல் இயக்கம் பெரிதும் பாதிக்கப்படும். இத்தகைய பாதிப்புகளுக்கு சிகிச்சை அளிக்க எலும்புகள் தானமாகக் கிடைப்பது அரிது.

இதுவரையில் டைட்டானியம் என்ற உலோகம் மூலம் எலும்பு மாதிரிகள் செய்யப்பட்டு பாதிக்கப்பட்டவர்களுக்கு பொருத்தப்பட்டு வந்தது. இது மிகவும் விலை உயர்ந்தது. மேலும் இவற்றில் சில குறைபாடுகளும் உண்டு.

இந்த நிலையில் உலோகங்களைப் பயன்படுத்தாமல், செயற்கையாகவே எலும்புகளைத் தயாரித்துப் பயன்படுத்த முடியும் என்று விஞ்ஞானிகள் நிரூபித்துள்ளனர். ஸ்டெம் செல் மூலம் எலும்புகளை வளர்த்து எடுக்கும் முறையில் கொலம்பியா பல்கலைக்கழக ஆய்வாளர்கள் வெற்றி கண்டுள்ளனர். ஆய்வகத்தில் சோதனைக்குழாயில் ஸ்டெம் செல் மூலம் தாடை எலும்பை அவர்கள் வளர்த்துள்ளனர். இந்த முறையில் எந்த வடிவிலான எலும்பையும் வளர்க்க முடியும் என்று அவர்கள் கூறுகிறார்கள். எதிர்காலத்தில் எலும்பு தேய்மான சிகிச்சையில் இந்த முறை புதிய மறுமலர்ச்சியை ஏற்படுத்தும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. ★★★★★★


வெகுவிரைவில் யாழ்ப்பாணத்தில்

Vibromix (Pvt) Ltd.
வைப்ரோமிக்ஸ் பிரைவேட் லிமிடட்.

உயர்தர கட்டட இயந்திர உபகரணங்களுக்கு

1 ம் குறுக்குத் தெரு சந்தி, பிரதான வீதி, யாழ்ப்பாணம் (நீதி மன்றத்திற்கு அருகாமையில்)



- CONCRETE MIXER
- CONCRETE VIBRATOR
- CONCRETE CUTTER
- PLATE COMPACTER
- POWER TROWEL
- SUBMERSIBLE PUMP
- TAMPING RAMMER
- CABLE HOIST



தொடர்புகளுக்கு
077-7588168
031-2222846

தலைமை அலுவலகம் : 615, கொழும்பு வீதி, குரன, நீர்கொழும்பு


## பழங்கள் தரும் நன்மைகள்

நாம் உட்கொள்ளும் பழம் ருசியாக இருந்தால் மட்டும் போதாது அதில் நம் உடலுக்குத் தேவையான பலவிதமான அத்தியாவசிய சத்துக்களும் நிறைந்திருக்க வேண்டும்.

பழங்களில் செல் அழிவைத் தடுக்கும் ஆன்டி ஒட்சிசன் பொருள்கள் ஏராளமாக நிறைந்துள்ளன. உதாரணமாகப் பிற உணவுகளில் குறைந்தளவே காணப்படும் அல்லது அரிதாகக் காணப்படும் விற்றமின் பி6, விற்றமின் கே, அயோடின், செலினியம், ஆர்ஜினின் போன்ற பொருள்கள் உணவுப் பாதையைச் சீர்செய்து, இரத்த செல்களை ஒழுங்குசெய்து, தைரொய்ட் போன்ற நாளமில்லா சுரப்பிகள் சீராக இயங்கவும், நுண்ணிய இரத்தக்குழாய்களில் அடைப்பின்றி இரத்த ஓட்டம் செல்லவும் பயன்படுகின்றன. இவை குறைபாடாக நமக்குக் கிடைப்பதால் பலவித பற்றாக்குறை நோய்கள் உண்டாகின்றன.



ஆகவே நாம் இது போன்ற சிறப்பான சத்துகள் நிறைந்த பழங்களை அடிக்கடி உட்கொண்டால் பலவிதமான நோய்கள் நம்மை அணுகாமல் எமது உடலைக் காத்துகொள்ளலாம்.

பெரோஜிரியா அனானாசா என்ற தாவரவியல் பெயர் கொண்ட ரோசேசியே குடும்பத்தைச் சார்ந்த ஸ்டோபெரி பழங்களில் விற்றமின் சி, தையமின், ரிபோபேளே வின், நியாசின், பேன்டோதெனிக் அமிலம், போலிக் அமிலம், சையனோகோபாலமின், விற்றமின் ஏ, டோக்கோ பெரால், விற்றமின் கே போன்ற விற்றமின்களும், செம்பு, மங்னிஸ், அயோடின், பொஸ் பரஸ், மக்னீசியம், கல்சியம், இரும்பு, துத்த நாகம், செலினியம் போன்ற தனிமங்களும், பல்வேறு வகையான அமினோ அமிலங்களும், அத்தியாவசிய கொழுப்பு அமிலங்களும் ஏராளமாக நிறைந்து உள்ளன. கோடை காலத்தில் அடிக்கடி இந்த பழச் சாற்றை குடித்து வந்தால் தோல் வறட்சி நீங்குவதுடன், உடலுக்கு ஆரோக்கியத்தைத் தருகிறது. ★★★★


முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கிள்களுக்காக
லீசிங் பெறுவதற்கு இலகுவான இடம்...

எசட்லைன் லீசிங்



முச்சக்கரவண்டிக்கான
குறைந்தபட்ச காப்புறுதி
தவணைப்பணத்துடன்
கூடிய
குறைந்தபட்ச முன்பணம்
ரூ.58,950/-*
மட்டுமே

எசட்லைன் லீசிங் இன் சிறப்பம்சங்களாவன,

- முச்சக்கரவண்டிகளுக்கு 5 வருடங்கள் வரையான மாதாந்தக் கொடுப்பனவு
- குறைவான / இலகுவான பத்திரங்கள்
- குறைந்த வட்டிவீதம்
- உங்களின் வசதிக்கேற்ப அமைக்கப்பட்ட லீசிங் திட்டங்கள்
- ஒரே நாளில் லீசிங் *
- மொத்தமாக மோட்டார் சைக்கிள்களை கொள்வனவு (Group Sale) செய்யும் போது விஷேட லீசிங்
- நாடளாவிய கிளை வலையமைப்பு
- குறுகிய காலத்தினுள் உங்களுக்கான காப்புறுதி மீட்புத்தொகையை பெற்றுக்கொள்ளக்கூடிய தன்மை.*

எசட்லைன்
லீசிங் கம்பனி லிமிட்டட்.

உங்கள் முன்னேற்றத்திற்காகவே
அர்ப்பணிக்கப்பட்ட கடன் வசதி

சயுறு செவன, 46/12, நவம் மாவத்தை, கொழும்பு - 02.

தொ.பே: 011 4700100 பெக்ஸ்: 011 4700198

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| பத்தரமுல்லை | -077 7250707 | பிலியந்தலை | -077 7264224 | கண்டி | -077 3688290 | மாத்தறை | -077 3688301 | குருணாகல் | -077 3688282 |
| குளியாபிட்டி | -077 7229742 | மஹறவை | -077 3688297 | சிலாபம் | -077 3100924 | தம்புள்ளை | -077 3688280 | அம்பிலிபிடிய | -077 3688289 |
| காலி | -077 3544616 | புத்தளம் | -077 3056315 | அனுராதபுரம் | -077 7593383 | பதுளை | -077 3404412 | நீர்கொழும்பு | -077 3544619 |
| இரத்தினபுரி | -077 7236293 | மதுகம | -077 3688292 | மொனராகலை | -077 3106182 | பலங்கொடை | -077 3203604 | மட்டக்களப்பு | -077 3544624 |
| யக்கலை | -077 7236297 | பொலன்னறுவை | -077 3544618 | திஸ்ஸமஹாராமை | -077 3106195 | அவிசாவலை | -077 3444679 | களுத்தறை | -077 3688302 |
| நுவரெலியா | -077 3688281 | அம்பாறை | -077 3613694 | அம்பலந்தொட்டை | -077 [illegible] | தெஹிஹுத்தகண்டிய | -077 3497672 | திருக்கோணமலை | -077 7236301 |
| வவுனியா | -077 3609897 | தபுத்தேகமை | -077 3203601 | கேகாலை | -077 7236294 | நீர்கொழும்பு | -077 7445460 | | |
| யாழ்ப்பாணம் | -077 3670403 | எம்பிலிபிட்டிய | -077 3688289 | | | | | | |

*நிபந்தனைகள் உண்டு

tradlanka


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஓராண்டு நினைவஞ்சலி



### திருமதி திலகவதி திருநாவுக்கரசு

தோற்றம்
13*07*1943

மறைவு
27*05*2009

திதி - திருதியை

அன்போடு எமை அணைத்து அன்பும் பாசமும் ஊட்டி
எமை வாழ வைத்த அன்புத் தெய்வமே
நீங்கள் கரம் ஏந்திய மழலைகள் உங்கள் கரம் தேடித் தவிக்கின்றன
உமை வளர்த்த உறவுகள் வாய்விட்டு அலறுகின்றன
நீங்கள் எமைப் பிரிந்து ஓராண்டு சென்றாலும் ஆறாது எம் துயரம்

உன்பிரிவால் தவிக்கும்:
கணவர், பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்,
மைத்துனன், உறவினர்கள்

ஆறுமுகம் வீதி,
கந்தரோடை,
சுன்னாகம்.
(சி/567603)

---

Affiliated with JOBSNET
Ministry of Labour Relation and Manpower

19 வருட அனுபவம்

ஆறு மாத கால டிப்ளோமா
Course Length - Six Month
May 2010 to Oct 2010
தமிழ் மொழி மூலம்

- தபால் மூலம் -

~ Dip. in Psychology - உளவியல் டிப்ளோமா
~ Dip. In Office Administration - காரியாலய நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Human Resources Management - மனிதவள முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Civil Engineering - சிவில் எஞ்ஜினியரிங் டிப்ளோமா
~ Dip. in Business Management - வியாபார முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Banking Management - வங்கி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Sales & Marketing Management
விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல் முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Health & Hospital Management
சுகாதாரம் மற்றும் வைத்தியசாலை முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Nursing Administration - தாதியர் நிர்வாக டிப்ளோமா
~ Dip. in Educational Management - கல்வி முகாமைத்துவ டிப்ளோமா
~ Dip. in Montessori - மொண்டிசூரி டிப்ளோமா

கற்கை முடிவில் பரீட்சை நடைபெறும் பிராந்திய நிலையங்கள்

கல்முனை, மட்டக்களப்பு. திருகோணமலை, புத்தளம், வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், கண்டி, கொழும்பு, ஹட்டன், வேருவளை மற்றும் நுவரேலியா.

மேலதிக விபரங்கள் மற்றும் விண்ணப்பப்படிவம் பெற உங்களது பெயர்,முகவரி, தெரிவுசெய்த கற்கைநெறி என்பனவற்றை கீழ் உள்ள கையடக்க தொலைபேசிக்கு SMS செய்து பெற்றுக்கொள்ளலாம்.
Mobile: 0777 140 844 / 071 803 48 48

விண்ணப்பம் அனுப்ப வேண்டிய முகவரி:

Country Co-ordinator
MARUTHUR . A. HASSEN
(B.Sc. Psychology, M.Sc. Psychology)

ALL INDIA INSTITUTE OF MANAGEMENT STUDIES
24, 1st Floor, Supermarket Complex, Main Street, Sainthamaruthu-07.
Web: www.aiimas.com, www.iimat.com, www.aicomas,org
Tel: 067 2222917, 067 3671749, 067 3679688, 071 803 4848

விண்ணப்ப முடிவுத் திகதி : 28.05.2010

---

## வீட்டுப் பணிப்பெண் தேவை

சம்பளம் 7000 + உணவு
தொடர்புகளுக்கு -
021 226 4391

---

விற்பனைக்கு

நல்ல நிலையில்
உள்ள 62.3000 1992
**Model Toyato Hiace Van**
உடனடி விற்பனைக்கு உண்டு.
**4 Door, D/Ac, Full Seat, Alloy Wheels**
தொடர்பு 0777421774

---

## விற்பனைக்கு

சைவ/அசைவ Hotel ஒன்று நடாத்துவதற்கு தேவையான சகல தளபாடங்கள், பாத்திரங்கள் மிகக் குறைந்த விலையில் உடன் விற்பனைக்கு உண்டு. நேரில் வந்து பார்வையிடலாம்.

தொடர்பு:
2505103, 0771629806

---

## விற்பனைக்கு

கொக்குவில் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் 3½ பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்பு: 071-3055865

---

## காணி விற்பனைக்கு

இருபாலை சந்திக்கும், அம்மன் கோவிலடிக்கும் இடையில் பருத்தித்துறை றோட்டில் 11 பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்புகளுக்கு
011-2362578

---

## தேவை

Computer Technicion உடன் தேவை
National Computer Systems
No. 226, Manipay Road, Jaffna.
021 222 1648, 0772222083

---

## காணி, வீடு தேவை

ஒன்று அல்லது இரண்டு பரப்பு வீடு அல்லது வீட்டு நிலம் நீராவியடி, கந்தர்மடம், நல்லூர், திருநெல்வேலி, கொக்குவில் பகுதிகளில் விலைக்குத் தேவை. இடைத் தரகர் ஏற்றுக் கொள்ளப்படமாட்டார். 15 .06.2010இற்கு முன்னர் தொடர்பு கொள்ளவும்.

விளம்பர இல. 4020,
மே/பா உதயன்
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
(98300)

---

## பண்டத்தரிப்பு பரிஷ் ப.நோ.கூ.சங்கம்
(மட்டுப்படுத்தப்பட்டது)

THREE WHEELER VAN No.NPHH - 1859 BAJAJ

### விற்பனைக்கான கேள்வி கோரல்

மேற்படி சங்கத்தின் NPHH-1859 இலக்க அலுமினிய (Body) உடற்கோப்பு அமைத்த பஜாஜ் ஓட்டோ வாகனம் விற் பனைக்கான கேள்விகள் பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவரினால் கோரப்படுகின்றது.

இவ் வாகனத்தைக் கொள்வனவு செய்ய விரும்புபவர்கள் மீளளிப்பு அற்ற வைப்புப் பணமாக ரூபா 1000 உம், மீளளிக்கக் கூடியதான வைப்புப் பணமாக ரூபா 10 000உம் செலுத்தி கேள்வி விண்ணப்பப் படிவத்தை சங்க தலைமை அலுவலகத்தில் பெற்று தபால் உறையின் இடது பக்க மேல் மூலையில் " வாகன கொள்வனவுக்கான கேள்வி" எனக் குறிப்பிட்டு தலைவர், பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், பண்டத்தரிப்பு என்ற விலாசத்திற்கு 24.05.2010 ஆம் திகதி 10 மணிக்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு நேரடியாகவோ அல்லது பதிவுத் தபால் மூலமோ சீல் (Seal) இடப்பட்ட கடித உறையில் தங்களது கேள்வித் தொகையை சமர்ப்பிக்குமாறு கோரப்படுகின்றீர்கள். கேள்வி விண்ணப்பப் படிவங்களை சங்க தலைமை அலுவலகத்துடன் தொடர்பு கொண்டு 17.05.2010 முதல் பெற்றுக் கொள்ள முடியும். மேற்படி வாகனத்தை சங்க அலுவலக வேலை நேரத்தில் பார்வையிடலாம்.

கேள்விகள் 29.05.2010 ஆம் திகதி முற்பகல் 10.30 மணிக்குத் திறக்கப்படும். இதில் கேள்வித் தொகை சமர்ப்பித்தவர் அல்லது அவரின் அனுமதி பெற்ற பிரதிநிதி சமுகமளித்திருக்க முடியும். வாகனத்தை கொள்வனவு செய்பவர் கேள்வித்தொகை முழுவதையும் செலுத்தி அறிவித்தல் வழங்கப்பட்ட திகதியில் இருந்து ஒருவாரத்தினுள் வாகனத்தை கைமாற்றிக் கொள்ளல் வேண்டும்.


சங்கப் பணிப்பாளர் சபையின் முடிவே இறுதியானது.

தலைவர்,
பண்டத்தரிப்பு பரிஷ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம்,
பண்டத்தரிப்பு.
(சி/567677)

---

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும் அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம்
13 * 08 * 1932



மறைவு
18 * 04 * 2010

### அமரர் சிவசம்பு பாலசுப்பிரமணியம்

கடந்த 18.04.2010 அன்று அமரத்துவம் அடைந்த எமது குடும்பத் தலைவர் அமரர் சிவசம்பு பாலசுப்பிரமணியம் அவர்களின் மறைவுச் செய்திகேட்டு நேரில் வந்தும் தொலைபேசி மூலம் அனுதாபம் தெரிவித்தும் இறுதிச் சடங்கில் அஞ்சலி செலுத்தி ஒத்துழைத்து உதவிய உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம். நாளை மறுதினம் (18.05.2010) செவ்வாய்க்கிழமை காலை 7 மணியளவில் திருநாவலூர் தெணியம்மன் ஆலய முன்றலில் உள்ள மடத்தில் அந்தியேட்டிக் கிரியைகள் நடைபெறும். அந்நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து எமது இல்லத்தில் நடைபெறும் சபிண்டீகரணக் கிரியைகளிலும் மதிய போசனத்திலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

இதனைத் தனிப் பட்ட அழைப்பாக ஏற்று வருகை தருமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஐயனார் வீதி,
பருத்தித்துறை.
(சி/567626)

தகவல்:
குடும்பத்தினர்.

---

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

அன்னை மடியில்
07 * 07 * 1943



போரின் பிடியில்
16 * 05 * 2009

### இராயப்பு அகஸ்ரீன்

எங்கள் குடும்பத்தின் பாசமலராய்
எங்கள் குடும்பத்தின் அணையா விளக்காய்
எம்மைப் பாசமுடனும் நேசமுடனும் வளர்த்து
எமக்கு நல்வழிகாட்டிய அன்புத் தெய்வமே!
நீர் எம்மைவிட்டுப் பிரிந்து ஓராண்டு சென்றாலும்
உமது நினைவு எம்மைவிட்டுப் பிரியாது
உம் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

புலோப்பளை கிழக்கு,
பளை.

மனைவி, பிள்ளைகள்,
மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்
(92242)

---

# IELTS

We Provide
* A Placement test which determines to which level of English you belong
* Updated course modules
* Materials approved by British Council which are quite new including Cambridge 7
* 40 Practice test
* Free IELTS pack & Mock Exams




JAI Ho....
கடந்த April 2010 இல் நடைபெற்ற IELTS பரீட்சைகளில் எமது கல்லூரியில் படித்துப் பரீட்சை எழுதிய மாணவர்களில் ஒருவர் Band - 8 இருவர் 7.5 நால்வர் 6.5 எடுத்து சாதனைபுரிந்துள்ளார்கள் என்பதனை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றோம்.

வகுப்புக்கள் 22.05.2010 இல் ஆரம்பம்

**IELTS Registration Centre For British Council**

நீங்கள் எங்கு IELTS படித்திருந்தாலும் எமது நிலையத்தில் வந்து பதிவு செய்து பரீட்சை எடுக்கமுடியும்.

| Course Schedule | Mon-Wed-Fri | Saturday & Sunday |
|---|---|---|
| Duration | 10 weeks | 10 weeks |
| Time | 3.30 p.m | 8.00 a.m.11.00a.m. |
| Commencement | 24 th May | 22 nd May |

BRITISH COLLEGE OF ENGLISH
143, Adiyapatham Road, Thirunelvely.
T.P:0213216027 - 0778803887

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அறுபதுகளில் இலங்கையைவிடப் பின்தங்கிய தென்கிழக்காசிய நாடுகள் மூன்றின் துரித வளர்ச்சி

*வளர்ச்சியடைந்த, வேகமாக வளர்ந்து வரும் நாடுகள் கடந்து வந்த பாதைகள் ஏனைய நாடுகளுக்குப் பாடங்களாக அமைகின்றன, அவர்கள் வளர்ந்த வழிமுறைகள், சந்தித்த சவால்கள், அடைந்த சாதனைகள் எமது எதிர்காலத்தை திட்டமிடப் பெரும் உதவியாக அமையும.*

*அதனடிப்படையில் கடந்த மார்ச் மாதம் "நல்லாட்சி" என்ற தலைப்பில் ஓர் சர்வதேச பயிற்சிப்பட்டறையும், கல்விச் சுற்றுலாவும் வடமாகாண சுகாதார அமைச்சினால் சிங்கப்பூர், மலேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இப் பயிற்சியில் வடமாகாண சபையின் உயரதிகாரிகளும், வடமாகாண சுகாதார அமைச்சின் உயரதிகாரிகளும், வடமாகாணத்தின் ஐந்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்களும் கலந்து கொண்டனர். இப் பயிற்சியில் பங்கு பற்றிய அங்கத்தவர்களில் ஒருவர் என்ற ரீதியில் இந் நாடுகளில் படித்த பல பாடங்களையும் பெற்றுக் கொண்ட பல பயனுள்ள அனுபவங்களையும் இப் பயணக்கட்டுரை மூலம் பகிர்ந்து கொள்கிறார் கட்டுரையாளர்.*

இம் மூன்று நாடுகளும் 1950 - 1960 களில் எமது நாட்டைவிடப் பின்தங்கிய நிலையிலிருந்தவை. ஆனால், அவை மூன்றும் மிகவும் துரிதமாக வளர்ச்சியடைந்து எமது நாட்டைவிட எவ்வளவோ தூரம் முன்னேறி விட்டன. அவை தற்போதுள்ள நிலையை நாம் அடைய இன்னும் 30 முதல் 50 ஆண்டுகள தேவைப்படலாம். நாம் அந்த நிலைக்கு வரும்போது அவர்கள் எம்மைவிட இன்னும் 50 ஆண்டுகள் முன்னோக்கிச் சென்றுவிடுவார்கள். இந்நாடுகளின் வெற்றியின் இரகசியம் என்ன? அவர்களின் அசுர வளர்ச்சியின் பின்னணி என்ன? நான் அறிந்துவந்தவற்றை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

*சிங்கப்பூரின் வானளாவிய கட்டடங்கள்*



சிங்கப்பூர்

சிங்கப்பூர் என்ற நவீன தேசத்தை கட்டியெழுப்பிய சிற்பியாக முன்னாள் பிரதமர் லி குவான் யூ அவர்கள் மக்களால் பெரிதும் மதிக்கப்படுகின்றார். அவரது மகன் தற்போது பிரதமராகப் பணிபுரிந்து வருகின்றார். தற்போது சிங்கப்பூரின் ஜனாதிபதியாகத் தமிழரான நாதன் என்பவர் பதவி வகிக்கின்றார்.

சிங்கப்பூர் ஓர் சுதந்திர நாடாக 1965ஆம் ஆண்டு தான் உதயமானது. அதுவரை மலேசியாவின் ஒரு பகுதியாகவே இருந்து வந்தது. 1965 ஆம் ஆண்டு மலேசியாவினால் தமது அரச கட்டமைப்பிலிருந்து வெளியேற்றப்பட்டது. அப்போது சிங்கப்பூர் மிகப் பின்தங்கிய சேரிகள் நிறைந்த ஓர் பிரதேசமாக இருந்தது. நிலப்பரப்பு - 692 சதுர கி. மீ. தான். நீளம் 42 கி.மீ. அகலம் 23 கி.மீ. எமது யாழ்ப்பாண மாவட்டத்தை விட சிறியது (யாழ்ப்பாணம் - 1,025 சதுர கி.மீ) சிங்கப்பூரின் நிலப்பரப்பு யாழ்ப்பாண மாவட்ட நிலப்பரப்பின் மூன்றில் இரண்டு பகுதியாகும்.

நிலவளம்

நல்ல தண்ணீர் இல்லை. குடிநீர் மலேசியாவிலிருந்தே கொண்டுவரப்படுகிறது. விவசாயம் செய்ய போதிய நிலவளம் இல்லை. கனிய வளங்கள் ஏதுமில்லை. மனிதவளம் மட்டுமே அவர்களிடம் இருந்தது. அத்துடன் ஓர் துறைமுகமும் இருந்தது.

இத்தகைய ஓர் சூழ்நிலையில் தான் சிங்கப்பூர் என்ற நாடு உதயமாகி, தனது கன்னிப் பயணத்தை ஆரம்பித்தது. அத்தேசம் உதயமானபோது அப்போது நாடடில் தலைவராகப் பொறுப்பேற்ற லீ குவான் யூ அவாகள் வானொலியில் நாட்டு மக்களுக்கு உரையாற்றியபோது செய்வதறியாது வார்த்தைகள் வராது வாய் விட்டு அழுதாராம். எந்த ஒரு வளமும் இல்லாத இந்த நாட்டை எவ்வாறு கொண்டு நடாத்தப் போகிறோமென்று தெரியாது திகைத்து நின்றாராம்.

அப்போது "சிலோன்" என்று அழைக்கப்பட்ட இலங்கை சிங்கப்பூரைவிட முன்னேறியிருந்தது. எனவே லீ குவான் யூ அவர்கள் கொழும்புக்கு வந்து எமது நாட்டின் அனுபவங்களை அறிந்து சென்று சிலோன் போல சிங்கப்பூரை மாற்றுவோம் என உறுதி எடுத்தார்.

இன்று சிங்கப்பூர் எமது நாட்டை விடப் பல வருடங்கள் முன்னணியில் உள்ளது. உலகில் உள்ள வளர்ச்சியடைந்த நாடுகளுடன் ஒப்பிடக்கூடிய நிலையில் அசுர வளர்ச்சியடைந்துள்ளது. சிங்கப்பூர் தனது துறைமுகத்தை உலகின் இரண்டாவது மிகப் பெரிய துறைமுகமாக கட்டியெழுப்பியுள்ளது உலகின் தலை சிறநத சுற்றுலாத் தலங்களில் ஒன்றாக காட்சியளிக்கிறது.

சிங்கப்பூரின் சனத்தொகை 3.87 மில்லியன்கள
சராசரி ஆயுள்காலம் - 81.6 வருடங்கள்

இங்கு ஆங்கிலம், சீனம், மலே, தமிழ் ஆகிய நான்கு மொழிகளும் அரச மொழிகளாக வழக்கத்திலுள்ளன. இங்கு நாட்டின் பொருளாதாரத்திற்கு முக்கிய பங்களிப்பாகச் சுற்றுலாத்துறையும், துறைமுகமும் விளங்குகின்றன. சிங்கபபூருககுச் செல்வதற்கு முன்கூட்டியே விசா பெற்றுக் கொள்ளத் தேவையில்லை. சிங்கப்பூருக்குள் நுழையும்போது தேவைகேற்ப குறிப்பிட்டதொரு காலத்திற்கு விசா வழங்கப்படுகிறது.

சுற்றுலாத்துறை

இலகுவான, தளர்வான விசா நடைமுறை மூலம் ஏராளமான உல்லாசப்பயணிகள் இங்கு வந்து குவிகின்றனர். அவர்களை கவரும் விதத்திலும், அவர்களது' தேவைகளைப் பூர்த்திசெய்யும் விதமாகவும் திட்டமிட்டு சிங்கப்பூரை அபிவிருத்தி செய்துள்ளனர்.

சிங்கப்பூர் முழுவதும் உல்லாசப் பயணிகளுக்கான நட்சத்திர விடுதிகள், கேளிக்கை நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. உல்லாசப் பயணிகளைக் கவரும் விதத்தில் மிருகக்காட்சிசாலை, பூங்காக்கள் மற்றும் பல்வேறு கண்கவர் அருட்காட்சியகங்கள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் சிங்கப்பூரை ஓர் சிறந்த கொள்வனவு நிலையமாகவும் (Shopping Center), சந்தைப்படுத்தல் நிலையமாகவும் (Marketing Centre) மாற்றியுள்ளனர். இது மேலும் இங்கு ஏராளமானோர் வந்து செல்வதை ஊக்குவிக்கின்றது. எனவே சுற்றுலாத்துறை இந்நாட்டில் அந்நிய செலாவணியின் அடித்தளமாகவும், பொருளாதாரத்தின் முதுகெலும்பாகவும் அமைகின்றது.

சிங்கப்பூருடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது எமது நாட்டில சுற்றுலாப்பயணிகளைக் கவரக்கூடிய பல இயற்கைத் தலங்கள் உள்ளன. எமது நாட்டில் சுற்றுலாத் துறையைத் திட்டமிட்ட முறையில். மேம்படுத்தினால். பொருளாதார ரீதியில் சிறந்த பலனை அடையலாம். உல்லாசப் பயணிகளைத் திருப்திப்படுத்தும் சர்வதேச தரத்திலான தங்கு விடுதிகள் அமைக்கப்படவேண்டும். இயற்கை சுற்றுலா மையங்கள் சுற்றுலாப் பயணிகளுக்கான வசதிகளுடனும், வளங்களுடனும் மேம்படுத்தப்பட வேண்டும். எமது சேவை வழங்கல்களை சர்வதேச தரத்திறகு முன்னேற்ற வேண்டும் இது சம்பந்தமான பயிற்சிகள் இங்கு ஆரம்பிக்கப்பட வேண்டும். ( உ+ ம் Hotel Management)

துறைமுகம்

சிங்கப்பூர் ஆசிய கண்டத்தின் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலையத்தில் அமைந்திருப்பதால் உலகின் இரண்டாவது பாரிய கொள்கலன்களைக் கையாளும் துறைமுகமாக வளர்ச்சியடைந்துள்ளது. ஐரோப்பாவிலிருந்தும் அமெரிக்காவிலிருந்தும் வரும் கப்பல்கள் ஆசியாவிலுள்ள ஏனைய துறைமுகங்களுக்குக் கொள்கலன்களை விநியோகிக்கும் ஓர் இடைத்தங்கல் (Transit) துறைமுகமாகவும் இது விளங்குகின்றது. மேலும் புதிய கப்பல்களைக் கட்டும் நிலையமாகவும் கப்பல்களைத் திருத்தும், எரிபொருள்கள் நிரப்பும் வசதிகளையும் கொண்டுள்ளது. இவற்றின் மூலம் ஏராளமான அந்நியச் செலாவணி கிடைக்கின்றது. இது நாட்டின் பொருளாதாரத்திற்கு வலுச்சேர்க்கும் ஓர் முக்கிய துறையாக விளங்குகின்றது.

எமது நாடு ஆசியாவின் ஓர் கேந்திர முக்கியத்துவமான இடத்தில் அமைந்துள்ளது. இங்கும் பல இயற்கையான, செயற்கையான துறைமுகங்கள் உள்ளன. இவற்றைத் திட்டமிட்ட முறையில் அபிவிருத்தி செய்தால் எமது நாட்டின் பொருளாதாரத்திற்கு வலுச்சேர்க்க முடியும்.

## நாம் அவற்றின் நிலையை அடைவோமா? அப்போது அவை ஐம்பது ஆண்டுகள் முன்னுக்கு...!

திட்டமிடல்

இந் நாட்டின் வெற்றியின் பின்னணியில் உள்ள மிக முக்கியான இரகசியம் மிகச் சிறந்த துல்லியமான திட்டமிடல், எதிர்காலத்தைப் பற்றிய தெளிவான தூரநோக்கு தங்களிடம் உள்ள இயற்கை வளங்கள் மிகச் சொற்பமானவை. மட்டுப்படுத்தப்பட்டவை என்பதைத் தெளிவாக மனதில் வைத்துக்கொண்டு எதிர்காலத்தைத் திட்டமிடுகிறார்கள். இருக்கின்ற சொற்ப வளங்களைக் கொண்டு அதி உச்சப் பயனபாட்டின் மூலம் அதிகூடிய பலனகளை அடையத் திட்டமிடுகிறார்கள்.



வைத்திய கலாநிதி
ஆ.கேதீஸ்வரன்
பிராந்திய சுகாதார சேவைகள்
பணிப்பாளர்,யாழ்ப்பாணம்.

நிலவளம்

இங்கு நிலப்பரப்பு மிகவும் மட்டுப்படுத்தபட்டது. எனவே ஒவ்வொரு அங்குல நிலத்தையும் சரியான முறையில் திட்டமிட்டே பயன்படுத்துகின்றனர். இங்கு பெரும்பாலான காணிகள் அரச காணிகளாகவே காணப்படுகின்றன. தனியார் காணிகள் மிகக்குறைவு. மிகவும் விலை உயர்ந்தவை.

10,20,30 ஆண்டுகளுக்குப் பின்னர் சிங்கப்பூரின் நிலப் பயன்பாடு எப்படி அமைய வேண்டுமென்பதை இப்போதே திட்டமிடுகிறார்கள் இங்கு நிலவளம் மட்டுப்படுத்தப்பட்டதால் தற்போது கடலுக்குள் மண்ணை நிரப்பி அதன்மேல் கட்டடங்களைக் கட்டிவருகின்றனர். திட்டமிடும் போது 10,20,30 வருடங்களுக்குப் பின் இருக்கப்போகும் மக்கள் தொகையை நேராக? [illegible] அவர்களின் தேவைகளைப் பூர்த்திசெய்யக் கூடியவாறு இப்போதிருந்தே திட்டமிடுகின்றனர்.

சிங்கப்பூரில் (Urban Authority Gallery) நகர அதிகார அருங்காட்சியகத்தில் தற்போதுள்ள நாட்டின் மாதிரி (Model) காட்சிக்காக வைக்கப்பட்டுள்ளது எதிர்காலத்தில் எப்படி சிங்கப்பூர் அபிவிருத்தி செய்யப்படும் என்பதையும் மாதிரியாக இங்கு காணலாம்.

சிங்கப்பூருடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது எமது நாட்டில் போதிய நிலவளம் உள்ளது. இந்த நில்வளத்தின் அருமையை நாம் உணர்ந்திருக்கிறோமா? அதனைத் திட்டமிட்டமுறையில் நாம் பயன்படுத்துகிறோமா? என்பவை கேள்விக்குறியே. எமது நகரப்புறங்களில் நிலத்தின் அருமையைத் தற்போது உணரத்தொடங்கியுள்ளோம். ஆனால் வெளியே நிலவளம் பற்றிய விழிப்புணர்வு குறைவாகவே உள்ளது.

ஒரு நகரமாக இருக்கலாம், கிராமாக இருக்கலாம், நிறுவனமாக இருக்கலாம் நம்மிடம் உள்ள நிலவளத்தை தூர நோக்குடன் திட்டமிட்டுப் பயன்படுத்த வேண்டும். 20, 30,50 வருடங்களுக்குப் பின்னர் வரப்போகும் சனத்தொகையின் தேவையைப் பூர்த்தி செய்யக்கூடியவாறு திட்டமிட வேண்டும்.

ஒரு வைத்தியசாலையை எடுத்துக்கொள்வோம் அதன் வளாகத்தில் உள்ள நிலப்பரப்பில் எதிர்காலத்தில் அமைக்கப்படவேண்டிய கட்டடங்களைத் தூரநோககுடன் திட்டமிட வேண்டும். அக்கட்டடங்களுக்கான நில வரைபடம் (Layout plan) வரையப்படவேண்டும் வைத்தியசாலை கட்டடங்களுக்கான Masterplan வரையப்பட வேண்டும். அதன் பிரகாரமே எதிகாலத்தில் கட்டடங்கள் அமைக்கப்பட வேண்டும். நிலவளம் மட்டுப்படுத்தப்பட்டிருப்பின் மாடிக்கட்டடங்கள் அமைப்பது பற்றி சிந்திக்க வேண்டும்.

**பயணக் கட்டுரை 1**

கட்டடங்கள் அமைக்கப்படும்போது மாற்றுவலுவுடையோர் இக்கட்டடங்களை சுயமாகப் பயன்படுத்தக் கூடியவாறு அமைக்கப்பட வேண்டும். இன்று உலகளாவிய ரீதியில் அதற்கு மிக முக்கியத்துவம் கொடுக்கப்படுகிறது. ஆனாலும் எமது பகுதிகளில் கட்டப்படும் பெரும்பாலான கட்டடங்களில் இக்குறை உள்ளது. எனவே நாம் இதில் கூடிய கவனம் செலுத்தவேண்டும். எமது நகரங்களை எதிர்காலத்தில் கட்டியெழுப்புவது பற்றிய தெளிவான திட்டங்கள் எம்மிடம் இருக்க வேண்டும். அவற்றின் அடிப்படையிலேயே அவை அபிவிருத்தி செய்யப்பட வேண்டும். ஆட்சிகள், அதிகாரிகள் மாறலாம். ஆனால் நீண்டகாலத் திட்டங்கள் நிலையானவையாக இருக்கவேண்டும்.

நீர்வளம்

சிங்கப்பூர், நீர் வளம் மிகவும் மட்டுபடுத்தப்பட்ட ஓர நாடு. இங்கு குடிநீர் வளம் இல்லை. மலேசியாவிலிருந்து குடிநீர் இறக்குமதி செய்யப்படுகிறது. எனினும் சிஙகப்பூர் நீர் வளத்திற்காக எந்த ஒரு நாட்டிலும் தங்கியிருக்ககூடாது, தனது சொந்தக் காலில் நிற்கவேண்டும் என்ற தூர நோக்குடன் திட்டமிட்டு பல திட்டங்களைத் தற்போது நடைமுறைப்படுத்தி வருகின்றனர்.

*சிங்கப்பூரின் நெடுஞ்சாலை ஒன்று*



மழைநீர்: சேமிப்பு, கடல் நீரிலிருந்து உப்பை நீக்கி குடிநீராக்கல், கழிவு நீரைச் சுத்திகரித்து சுத்திகரிக்கும் தேவைகளுக்காக மீளப்பயன்பாட்டுக்கு உட்படுத்தல், மட்டுப்படுத்தப்பட்ட நிலத்தடி நீரைச் சுத்திகரித்து சிக்கனமாக குடிநீராக மாற்றல் போன்ற பல திட்டங்களை நடைமுறைப்படுத்தி வருகின்றனர். தற்போது மழை நீரைக் கடலில் சேரவிடாது சேமித்து வைக்கும் பல நீர்த்தேக்கங்கள் அமைக்கப்பட்டுவருகின்றன. இன்னும் சில வருடங்களில் சிங்கப்பூர் தனது நீர்த் தேவையைப் பூரணமாகப் பூர்த்தி செய்யும் என எதிர்பார்க்கின்றனர்.

சிஙகப்பூரில் நில வளமும் நீர வளமும் மட்டுப்படுத்தபபட்டதால் விவசாயச் செயற்பாடுகள் மிகவும் குறைவு. மரக்கறிகள், பழங்கள் யாவும் இறக்குமதி செய்யப்படுகின்றன.

சிங்கப்பூருடன் ஒப்பிடும்போது எமது பிரதேசத்தில் ஓரளவு நீர்வளம் உள்ளது. ஆனாலுல் அதனைத் தூர நோக்குடன் சிக்கனமாக பாவிக்கிறோமா என்பது கேள்விக்குறியே. எமது நிலத்தடி நீர் வளம் மட்டுப்படுத்தப்பட்டது. அதனை அளவுக்கதிகமாகப் பாவித்தால் ஒரு காலத்தில் எமது பிரதேசம் பாலைவனமாக மாறக்கூடிய அபாயமுள்ளது.

எமது பிரதேசத்தில் முன்பு காணபட்ட பல குளங்கள் மழைநீரைத் தேக்கி வைத்து நிலத்தடி நீரை வளம் செய்தன. ஆனால் இன்று அவற்றில் பல குளங்கள் தூர்ந்து விட்டன. அவற்றை நாம் மீளப் புனரமைக்க வேண்டும். எமது கடல்நீர் ஏரிகளுடாக கடலில் கலக்கும் மழைநீரை இயன்றளவு மட்டுப்படுத்த வேண்டும். ஒவ்வொரு நிறுவனங்களிலும், வீடுகளிலும் மழைநீர் சேமிப்பு திட்டம் அறிமுகப்படுத்தப்பட வேண்டும். மழைநீர் சேமிப்பின் முக்கியத்துவம் பற்றிய விழிப்புணர்வு மக்கள் மத்தியல் ஏற்படுத்தப்படவேண்டும். குடிநீர் தேவைக்காக முழுக்க முழுக்க நிலத்தடி நீரில் தங்கியிராது நீர்த்தேக்கங்களிலிருந்து நீரைச் சுத்திகரித்து வழங்கும் நீர் வழங்கல் திட்டங்கள் ஆரம்பிக்கப்படவேண்டும். ·(தொடரும்.....)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## மணமகன் தேவை

27 வயதுடைய யாழ். இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த ரோகினி நட்சத்திரம் 74 கிரகபாவமுடைய ஆசிரியைக்கு உள்நாட்டில் அல்லது வெளிநாட்டில் தகுந்த மணமகனைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர்.

தொடர்புகளுக்கு :0789403241 (92232)

## மரண அறிவித்தல்கள்

### விஸ்வலிங்கம் அரியநாயகம்

(முன்னாள் அதிபர், செங்குந்தா இந்துக்கல்லூரி)



சுன்னாகம், வரியப்புலத்தைப் பிறப்பிடமாகவும், நீராவியடியை வசிப்பிடமாகவும் கொண்ட அரியநாயகம் 11.05.2010 செவ்வாய்க்கிழமை அவுஸ்திரேலியாவில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விஸ்வலிங்கம்-லஷ்மிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சின்னத்துரை - இராசம்மா தம்பதியினரின் அருமை மருமகனும், கமலேஸ்வரியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற லிங்கநாயகம் மற்றும் கௌரி (அவுஸ்திரேலியா), தர்மினி (அவுஸ்திரேலியா), லிங்கேஸ்வரன்(U.K.) ஆகியோரின் அருமைத் தந்தையும், சுசீலா, இரவீந்திரன் (அவுஸ்திரேலியா), குகாநந்தன் (அவுஸ்திரேலியா), காயத்திரி(U.K.) ஆகியோரின் அருமை மாமனாரும், பூரணம்பிள்ளை, சின்னம்மா ஆகியோரின் அருமைச் சகோதரனும், வெங்கடேசன், குமரன், குரு, சாம்பவி, சாதனா, கிருஷ்ணா ஆகியோரின் அருமைப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 13.05.2010 வியாழக்கிழமை அவுஸ்திரேலியாவில் நடைபெற்றன.

இல 198, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம். (98093)

தகவல்:
வாசுகி சபாரத்தினம்(கொழும்பு).
அவுஸ்திரேலியா தொடர்புக்கு:
(0061892563210)

### விநாசித்தம்பி கணேசபிள்ளை



கோண்டாவில் மேற்கைப் பிறப்பிடமாகவும், கொக்குவில் மேற்கு மஞ்சவனப்பதி வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட வி.கணேசபிள்ளை (13.05.2010) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி - தங்கரெத்தினம் தம்பதிகளின் சிரேஷ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான சுந்தரம்பிள்ளை - விசாலாட்சி தம்பதிகளின் அருமை மருமகனும், குணவதியின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற நாகரட்ணம் மற்றும் இராசலிங்கம் (கனடா), தர்மலிங்கம் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரரும், தட்சணாமூர்த்தி (கொழும்பு), இராசலட்சுமி ஆகியோரின் மைத்துனரும், சீதாஜெயலட்சுமி (லண்டன்), ஜெகதீஸ்வரானந்தம் (லண்டன்), ஜெயகலாவாணி(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும்,கருணாகரன்(லண்டன்), மணிவண்ணன்(கனடா), பகீரதி (லண்டன்) ஆகியோரின் மாமனாரும், பிரகாஷ், சுமுகன், விஸ்மயா, பிரணயன் ஆகியோரின் பாசமிகு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (16.05.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

மஞ்சவனப்பதி வீதி,
கொக்குவில் மேற்கு.
தொ.பே. 0213214489.

தகவல்,
மனைவி,பிள்ளைகள்,
க.ஜெகதீஸ்வரானந்தம்(மகன்)

### குட்டித்தம்பி பாலசுப்பிரமணியம்



(ஓய்வுபெற்ற பல்கலைக்கழக ஊழியர்)

மலேசியாவைப் பிறப்பிடமாகவும், பிறவுண் வீதி, நீராவியடியை வசிப்பிடமாகவும் கொண்ட குட்டித்தம்பி பாலசுப்பிரமணியம் 14.05.2010 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான குட்டித்தம்பி-அம்மாக்கண்ணு தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான மாணிக் கவாசகர்-கண்மணி தம்பதியினரின் அன்பு மருமகனும், விஜயராணியின் அன்புக் கணவரும், இராகுலனின்(ஆய்வுகூட உதவியாளர், யாழ். பல்கலைக்கழகம்) பாசமிகு தந்தையும், கனகசபை (மலேசியா), இராஜமணி, விசுவலிங்கம்(சுவிஸ்) ஆகியோரின் சகோதரனும்,தனபாலசிங்கம், மாலினி, காலஞ்சென்றவர்களான அழகரெட்ணம், மீனலோசனா ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2010) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இல.44,பிறவுண்வீதி,
நீராவியடி, யாழ்ப்பாணம். (சி/567651)

தகவல்
குடும்பத்தினர்.

### மின்னிணைப்பை வழங்குமாறு பொதுமக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், மே 16

மந்துவில் ஸ்ரீ பாரதி வித்தியாலயத்திலிருந்து ஆரம்பமாகி மீசாலை வடக்கு, தட்டான்குளம் பிள்ளையார் கோயில் ஊடாகப் புத்தூர்ச் சந்திக்குச் செல்லும் வீதியில் சுமார் இரண்டு கிலோ மீற்றர் தூரம் மின்னிணைப்பு வழங்கப்படவில்லை என மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

இந்த வீதியை அண்டிய பகுதியில் உள்ள சுமார் 50 இற்கும்மேற்பட்ட குடும்பங்கள் தமது பகுதிக்கு மின் விநியோகம் வழங்கக் கோரி உரிய அதிகாரிகளுக்குப் பலதடவைகள் முறையிட்டும் உரிய பயன் கிடைக்கவில்லையெனத் தெரிவிக்கப்படுகின்றது. (எ-207)

### அன்னதான மண்டபம் திறப்பு

கைதடி,மே 16

கைதடி கரவிடை அருள்மிகு அண்ணமார் ஆலயத்தில் அப் பிரதேச மக்களால் அன்னதான மண்டபம் ஒன்று அண்மையில் அமைக்கப்பட்டு திறந்துவைக்கப்பட்டுள்ளது.

ஆலயப் பரிபாலனசபைத் தலைவர் இ.முருகனால் திறந்து வைக்கப்பட்ட இந் நிகழ்வில் பெருந்திரளான பக்தர்கள் கலந்து கொண்டனர்

(க-288)

### கூட்டம்


கைதடி,மே 16

கைதடி குமரநகர் சமூக நிலையத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 7 மணிக்கு சனசமூக நிலைய முன்றலில் நடைபெற இருப்பதாக சனசமூக நிலைய நிர்வாகிகளால் அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கூட்டத்தில் இவ்வாண்டுக்கான நிர்வாகத் தெரிவு உள்ளிட்ட பல விடயங்கள் பற்றிக் கலந்துரையாட இருப்பதனால் அங்கத்தவர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறும் நிர்வாகிகளால் கேட்கப்பட்டுள்ளது.

(க-288)


## பத்திரிகைத்துறையில் ஆர்வம் உள்ளோருக்கான இலவசப் பயிற்சிப் பட்டறை



* நீங்களும் பத்திரிகையாளராக விரும்புகிறீர்களா?
* ஊடகத்துறை பற்றி அறிந்துகொள்ள வேண்டும் என்ற ஆர்வம் இருக்கிறதா?

உங்களுக்கான ஐந்து நாள் இலவச பயிற்சிப் பட்டறைக்கு இன்றே விண்ணப்பியுங்கள்!

காலம்-ஜூன் 2ஆம் திகதி முதல் 6ஆம திகதி வரை.

**விடயங்கள்:**

* செய்தி அறிதல்
* செய்தி மூலங்கள்
* புலனாய்வுச் செய்தியிடல்
* செய்தித் தலைப்புகள்
* கட்டுரை எழுதுதல்
* செய்திக் கட்டுரைகள்
* பக்க வடிவமைப்பு
* இணையத்தளச் செய்திகள்
* ஊடகத்துறையில் தொழில்நுட்பம்
* பத்திரிகைத்துறையின் சவால்கள்
* பத்திரிகையாளர்களின் பொறுப்புகளும் கடமைகளும்

பயிற்சிப்பட்டறை முடிவில் சான்றிதழும் வழங்கப்படும்.

அனுமதிக்கு சுய விவரங்களை தொடர்புக்கான தொலைபேசி இலக்கத்துடன் அனுப்பவேண்டிய முகவரி:
(விண்ணப்பங்களை mediatechnic@gmail.comஎன்ற மின்னஞ்சல் முகவரிக்கும் அனுப்பி வைக்கலாம்).
'பத்திரிகையாளர்களுக்கான பயிற்சிப்பட்டறை'
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.



நாம் இப்போது
சுன்னாகத்தில்...
We are now at Chunnakam



நேஷன் லங்கா பினான்ஸ் பி.எல்.சி.
Nation Lanka Finance PlC


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெண்ணின் பெருமை





சைவசமயத்தையும் தமிழ் மொழியையும் வளர்த்த பெருமை அறுபத்து மூன்று நாயன்மார்களுக்கு உண்டு. இவர்களில் அறுபத்து இரண்டுபேர் ஆண்கள். இவர்களுக்குக் கிடைக்காத பெருமை ஒரேயொரு பெண் நாயனாரான காரைக்கால் அம்மையாருக்குக் கிடைத்தது.

சிவபெருமானின் திருக் கோயில்களில் அமைக்கப்படும் அறுபத்து மூவர் சந்நிதிகளில் மற்றைய அறுபத்து இரண்டு பேரினது விக்கிரகங்களும் நின்று கொண்டே சிவபெருமானைத் துதிக்கும் போது ஒரேயொரு பெண்மணியான காரைக்கால் அம்மையார் விக்கிரகமோ உட்கார்ந்த நிலையில் காணப்படும்.

ஆண்டவனின் முன்னிலையில் உட்கார்ந்த நிலையில் துதிக்கும் பேறு காரைக்கால் அம்மையாருக்கு எவ்வாறு கிட்டியது.

ஆண்டவனின் சந்நிதானத்தில் உட்காரும் உரிமையை காரைக்கால் அம்மையார் எவ்வாறு பெற்றார்?

உண்மையில் காரைக்கால் அம்மையார் சிவபெருமானின் தாய் எனச் சுட்டப்பட்டவர். தமது பிள்ளையின் வீட்டில் தாய் உட்காராமல் வேறு யார் தான் உட்கார இயலும். எண்ணிக்கை அடிப்படையில் ஆண் நாயன்மார்களே அதிகமான போதிலும் தரத்தின் அடிப்படையில் ஒரேயொரு பெண் நாயனாரான காரைக்கால் அம்மையார் சிறப்புறத் திகழ்ந்தார்.

அந்த வகையில் பதினொரு ஆழ்வார்களுக்கு ஒரு ஆண்டாள் சமம் என்றும் 62 நாயன்மார்களுக்கு ஒரேயொரு காரைக்கால் அம்மையார் சமம் என்றும் கொள்ள இயலுமல்லவா?★★★

-போ.இதயராஜ், கொக்குவில்.

# அன்னாசி



அன்னாசி, அனானஸ் கோமோசஸ் என்ற இனத்தைச் சேர்ந்தது. தென் அமெரிக்காவிலிருந்து ஸ்பெயின் நாட்டவர்கள் முதன்முதலில் இதனை ஐரோப்பாவுக்குக் கொண்டு வந்ததாக வரலாற்றில் குறிப்பிடப்பட்டுள்ளது. பின்னர் 16 ஆம் நூற்றாண்டில் ஐரோப்பாவிலிருந்து இந்தியா, இலங்கை உட்பட்ட ஆசிய நாடுகளுக்கு அன்னாசி கொண்டு வரப்பட்டு பயிரிடப்பட்டது. உலகளாவிய ரீதியில் அன்னாசி உற்பத்தியில் முக்கால் பங்கு ஹவாய் நாட்டில் பயிரிடப்படுகிறது. அன்னாசியைத் துண்டங்களாக்கி ரின்களில் அடைத்துப் பிறநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வர்த்தகம் இன்று அன்னாசியை அபிரிமிதமாக உற்பத்திசெய்யும் சில நாடுகளில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அன்னாசிப் பழம் ஏறக்குறைய ஒரு மாதம்வரை பழுதடையாமல் இருக்கும் தன்மை வாய்ந்தது.

அன்னாசிச் செடியில் கிளைகள் இல்லை. அடிப்பாகம் தடித்துக் குறுகியிருக்கும். கத்தாழையைப் போன்று நீண்ட இலைகள் நெருக்கமாக இருக்கும். வரட்சியிலும் அதிகநாள் வாழக்கூடிய செடிவகை இது. செடி ஏறக்குறைய மூன்று அடி உயரம் இருக்கும். தண்டின் நடுவில் பூந்தண்டும், சுற்றிலும் காம்பில்லாத பல பூக்களும் இருக்கும். இவை யாவும் ஒன்று சேர்ந்து சதைப்பற்றுள்ளனவாகக் கூட்டுக் கனியாகிறது. பல சிறு கனிகள் சேர்ந்த கூட்டுக் கனியே அன்னாசியாகும். பழம் பழுத்தவுடன் தரைக்கீழ்த் தண்டிலிருந்து தோன்றும் குருத்துக்களை எடுத்து நட்டால் புதிய செடியாக வளரும்.

நமது தென்பகுதியில் குறிப்பிட்ட சில பிரதேசங்களில் அன்னாசி பெரிய அளவில் பயிரிடப்படுகிறது.

யாழ்.குடாநாட்டிலும் அன்னாசிச் செய்கையை ஊக்குவிக்க விவசாயத்திணைக்களம் பரிச்சார்த்த முயற்சிகளை மேற்கொண்டு வருகிறது.

★★★★★★★★★★★★

-எஸ்.ஜெயசசி, யாழ்ப்பாணம்.

# வாழ்க்கையின் தத்துவம் இதுதான்





நாம் எமது வாழ்நாளில் சில வேளைகளில் பெரியவர்களை மதிக்கவும் அவர்களுக்கு மதிப்புக் கொடுக்கவும் தவறிவிடுகின்றோம்.

உலகின் மாபெரும் வீரன் என்று அனைவராலும் பேசப்பட்டவர் மகா அலெக்சாண்டர்.

ஒருநாள் தன் மந்திரியுடன் வீதியில் வந்துகொண்டிருந்த போது, தனக்கு சிறு வயதில் கல்வி கற்பித்த தன் ஆசானைக் கண்டார். உடனே ஓடோடிச் சென்று அவரின் காலில் விழுந்து வணங்கி அவர் ஆசீர்வாதத்தைப் பெற்றுக்கொண்டார். இதனைப் பார்த்துக்கொண்டிருந்த அவரது மந்திரிக்கு ஒரே குழப்பமாக இருந்தது.

அவர் மெதுவாக மன்னனை அணுகி 'அரசே இந்த உலகமே உங்கள் காலடியில் தலைவணங்கி நிற்கிறது. அப்படியிருக்க இந்தக் கிழவன் காலில் நீங்கள் போய் விழலாமா?' என வெறுப்புடன் கேட்டான்.

எதுவுமே பேசாத அலெக்சாண்டர் அரண்மனைக்குச் சென்றதும் மந்திரியை அழைத்து இரண்டு தட்டுக்களைக் கொடுத்தார். அதில் ஒரு தட்டில் ஒரு ஆட்டுத் தலையும், மற்றைய தட்டில் ஒரு மனிதத் தலையும் இருந்தன.

'மந்திரியாரே இதில் உள்ள இரண்டு தலைகளையும் எங்காவது விலைக்கு விற்றுவிட்டு வாரும்' என்றார் அலெக்சாண்டர்.

மந்திரி அந்த இரு தலைகளையும் தூக்கிக் கொண்டு அந்த நாட்டுத் தெருக்களில் கூவியபடியே தன் வியாபாரத்தைத் தொடங்கினான்.

சிறு கணப்பொழுதுகளில் மந்திரியால் ஆட்டுத்தலையை விற்றுவிட முடிந்தது.

மனிதத் தலையைத் தட்டில் காவிக்கொண்டு கூவிக் கூவி அந்த நாட்டின் அனைத்து வீதிகளிலும் அலைந்தான். யாரும் அந்த மனிதத் தலையை ஏறெடுத்துக்கூடப் பார்க்கவில்லை.

பொழுதும் சாய்ந்தது, சோர்ந்து களைத்த மந்திரி அரண்மனையை நோக்கி நடந்தான். அரசன் முன்னே அந்த மனிதத் தலையை வைத்தான்.

"அரசே! ஆட்டுத் தலையை மக்கள் போட்டி போட்டு வாங்கிக் கொண்டார்கள். மனிதத் தலையை யாரும் திரும்பிக் கூடப் பார்க்கவில்லை" என்றான்.

"மந்திரியாரே, மனிதன் உயிருடன் இருக்கும் வரைதான் அவன் தலைக்கு மதிப்பும், மரியாதையும் கிட்டும். அவன் இறந்துவிட்டால் பின்னர் மதிப்பே கிடையாது. எனவே ஒரு பெரிய கல்விமான் காலடியில் நான் தலை தாழ்த்தி வணங்கியமை தவறாகுமா? எனக் கேட்டார் அலெக்சாண்டர்.

அப்போது தான் மந்திரிக்கு வாழ்வின் முக்கிய தத்துவங்களில் ஒன்று புரிந்தது.

இது போன்று நாமும் வாழப் பழகிக் கொண்டால் முதியோர் இல்லங்களில் அல்லல்படும் முதியவர் தொகை கணிசமாகக் குறைய வாய்ப்பு உண்டல்லவா?★★★★★★★

-தூட்ஷா, நல்லூர்.

# பாரசூட் - அது ஆகாயக்குடை



கிறிஸ்து பிறப்பதற்கு 2250 ஆண்டுகளுக்கு முன்னர் சீன தேசத்தில் 'ஷன்' என்ற பெயருடைய மன்னன் ஒருவன் இருந்தான்.

பறவைகளைப் போல் ஆகாயத்தில் பறந்து பார்க்க வேண்டும் என்ற ஆசை அவனுக்கு ஏற்பட்டது.

ஒரு தடவை அரண்மனையின் உயரமான கோபுரத்தின்மீது ஏறி ஜமக்காளங்களைக் கொண்டு தயாரிக்கப்பட்ட குடை போன்ற சாதனத்தைப் பயன்படுத்திக் கொண்டு கீழே குதித்து விட்டான்.

குடைபோன்ற அந்தச் சாதனம் சிறுகாயம் கூட ஏற்படா வண்ணம் அவனைத் தரையில் கொண்டு வந்து சேர்த்து விட்டதாம்.


ஷான் மன்னனுடைய அந்தக் குடையை முன்மாதிரியாகக் கொண்டுதான் விமானத்திலிருந்து கீழே குதிக்கப்பயன்படுத்தப்படும் 'பாராசூட்' எனப்படும் சாதனம் முதன் முதலாகத் தயாரிக்கப்பட்டதாம்.★ - ஸ்ராலின், யாழ்ப்பாணம்.

# "ஓசி" என்ற சொல் புழக்கத்துக்கு வந்த விதம் இதுதான்

இலவசமாகக் கிடைக்கும் எதனையும் 'ஓசி'யில் கிடைத்தது எனக் கூறுவது எம் மத்தியில் வழக்கத்தில் இருந்து வருகிறது. கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆட்சியில் இந்தியா இருந்தபோது அவர்கள் அனுப்பும் தபால்களில் 'கம்பனியின் சேவையில்' என்ற கருத்தில் On Company Service என்ற தொடரைப் பயன்படுத்தி வந்தனர். அந்த நடைமுறைச் சுருக்கமாக O.C.S. என அழைக்கப்பட்டது. குறிப்பிட்ட கடிதத்துக்கான கட்டணமாக முத்திரைகள் ஒட்டாமல் O.C.S. என்ற முத்திரை குத்திய தபால்கள் நிர்வாகத் தரப்பினரால் அனுப்பப்பட்டு வந்தன. நாளடைவில் இலவசமாகக் கிடைக்கும் எதற்கும் 'ஓசி' எனக் குறிப்பிடும் வழக்கம் நிலைபெற்றவிட்டது.★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இதயம் நெகிழும் கண்ணீர் காணிக்கை



கைதடி எரிபொருள் நிரப்பு நிலைய முகாமையாளரும் எமது குடும்ப நண்பருமாகிய

**சங்கரப்பிள்ளை கந்தசாமி**

அவர்களின் இழப்பால் ஆறாத் துயரில் மூழ்கியுள்ள அன்னாரின் குடும்பத் தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆன்மா நித்திய ஈடேற்றம்பெற எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

செல்வராஜா குடும்பத்தினர், கென்ஸ்மன் வீதி,சாவகச்சேரி.

வாணி ரெக்ஸ், யாழ்ப்பாணம்.

(4/567683)

## Royal English Language Center





- Diploma in English
- Spoken English
- Kids Programme

- வயதெல்லை இல்லை
- தவணை முறைக் கட்டணம்
- அரசதுறையினருக்கு விசேட கட்டணக் கழிவு
- இடம் பெயர்ந்த மாணவர்களுக்கு மேலும் கட்டணக் கழிவு
- அனைவருக்கும் ஏற்றவகையில் நேரத்தினைத் தெரிவு செய்யலாம்.
- சிறுவர்கள் மீது விசேட கவனம் செலுத்தப்படும்.
- மாதாந்தம் பெற்றோர் சந்திப்பு.
- பயிற்சி புத்தகம், Audio CD இலவசம்.
- அனுபவம் வாய்ந்தவர்களால் கற்பிக்கப்படுகின்றது.

**முதல் 50 அனுமதிகளுக்கும் விசேட கட்டணக் கழிவும் இலவச கருத்தரங்குகளும்.**

**மிகக் குறுகிய காலத்தில் ஆங்கில மொழியை தாய் மொழி போலப் பேசுவதற்கும், எழுதுவதற்கும் 100% நவீன முறையில் சிறப்புப் பயிற்சி வழங்கப்படுகின்றது.**

>>>> Quick way to learn English language >>>>

பதிவுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

சர்வதேச தர சான்றிதழ்கள் வழங்கப்படும்.

0217901860
royaljaffna @ hotmail.com
0771188143

நெல்லியடிச் சந்தி, பருத்தித்துறை வீதி, (மாதா சிலை எதிராக) கரவெட்டி.

(98315)

## உடனடி வேலை வாய்ப்பு

பின்வரும் நாடுகளுக்கு உடனடியாக பயணம் மேற்கொள்வதற்கு தொழிலாளர்கள் தேவை. சவுதி அரேபியா, மாலைதீவு, கட்டார், லிபியா, அபுதாபி.

- எலக்ரீசியன்ஸ்
- பிளம்பர்
- வெல்டர்
- மேசன்
- தச்சுத்தொழிலாளர்கள்
- பொறியியலாளர்கள்
- கனரக வாகன ஓட்டுனர்கள்

★ பணிப் பெண்களுக்கு மட்டும் பயண ஒழுங்கு இலவசம்

விபரங்களுக்கு: **PRICOUS LANKA**
பொன்னாலை வீதி, மானிப்பாய்.
(மானிப்பாய் பல.நோ.கூ.சங்கம் அருகில்)
தொ.பே. 0775253191, 0774330821

(98319)

## கலைமகள் அழகுநிலா

### அழகுக்கலைப் பயிற்சி நிலையம்

ஆறு நாள்கள் பயிற்சி இடம்பெற்று சான்றிதழ் வழங்கப்படும். இப்பயிற்சியின் மூலம் ஓர் அழகுநிலையம் நடத்தும் திறமையைப் பெற்றுக் கொள்ளலாம். பயிலவிரும்பும் மாணவர்கள் அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும்.

பயிற்சிகள்

- Facial (7வகை)
- Waxing
- Threading
- Pimple Treatment
- Hair Straiting
- Hair Perming (2 வகை)
- Hair Colouring
- Hair Dye
- Hair Cut
- Hot oil massage
- Bleaching
- Pedeicure manicure
- கறுப்புக்கள் இயற்கை முறை அகற்றப்படும்.
- Bridal makeup (4 வகை)

அனுமதிக் கட்டணம் 2000/-
பயிற்சிக்கு முதல்நாள் அனுமதியைப் பெற்றுக்கொள்ளவும்
பயிற்சிக் கட்டணம் நேரில்
பயிற்சி ஆரம்பம் 19.05.2010
பயிற்சி நேரம் -காலை 9 மணி - பி.ப. 3 மணி வரை
இவற்றில் ஏதுவது ஒன்றை இலவசமாக செய்துகொள்ளலாம்
தொடர்புகள் : 077 3719071, 021 4908151



**கலைமகள் அழகுநிலா**
390, பிரதான வீதி, பஸ்ரியன் சந்தி, யாழ்ப்பாணம்.

## குத்தகைக்கு

யாழ்.மானிப்பாய் வீதியில் மானிப்பாயில் 5 படுக்கையறைகள், 3 குளியலறைகள், தாராளமான வாகன தரிப்பிட வசதிகள் கொண்ட வீடு, அரச சார்பற்ற நிறுவனம், வெளிநாட்டு கல்வி நிறுவனம், தனியார் கம்பனி, கம்பனி விடுதி, வங்கி, வங்கி விடுதி, மற்றும் விருந்தினர் விடுதி என்பவற்றிற்கு உகந்தது.

**0729580400**

(98306)

## காணி விற்பனைக்கு

கொக்குவில் பொற்பதி றோட், உடையார் ஒழுங்கையில் 3 பரப்புக் காணி உடன் விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு : 0777203137
தரகர் தேவையில்லை. (98297)

## காணி விற்பனைக்கு

நீர்வேலி வடக்கு, வாய்க்காற்றரவைப் பிள்ளையார் கோயிலுக்கு பின்புறமாக - அண்மையில் 2½ பரப்புக் காணி கிணற்றுடனும், நீர்வேலி கிழக்கில் 8 பரப்புக் காணியும் விற்பனைக்கு உண்டு

தொடர்பு: 0776679585

## காணி விற்பனைக்கு

சங்குவேலி மத்தியில் வீட்டுக் கட்டடத்துடனும் கிணற்றுடனுமான 2 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு -
021-2223578
0773963284 (Vavuniya)

## தவறிவிட்டது

ஏப்ரல் 30 ஆம் திகதி மாலை 6.30 மணியளவில் கருகருக்கும் கொடிகாமத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் 2 பொதிகள் (இரண்டு கறுப்பு மஞ்சள் ரவலிங் பை), மடுமாதா கோயிலுக்குச் சென்ற பஸ்ஸிலிருந்து அடையாள அட்டை என்பன தவறிவிட்டன. கண்டெடுத்தவர்கள் பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும்.

98, மவுண்காமல் வீதியாழ்ப்பாணம். T.P-0213205123

## கட்டாயக்கல்வி தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு

கோப்பாய், மே 16

கட்டாயக்கல்வி தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு புன்னாலைக் கட்டுவன் மத்திய மகா வித்தியாலயத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்குப் பாடசாலை அதிபர் இ.ஜெயக்குமார் தலைமையில் நடைபெறவுள்ளது.

வலிகாமம் கல்விவலய கட்டாயக்கல்வி அலகினால் மேற்கொள்ளப்படும் இக்கருத்தரங்கில் குறுந்திரைப்படக்காட்சி, விழிப்புணர்வை ஏற்படுத்தும் கூத்து நிகழ்வுகள் மற்றும் கலந்துரையாடல் நடைபெறவுள்ளன.

பெற்றோர்கள் மற்றும் சமூக ஆர்வலர்களை கலந்துகொள்ளுமாறு பாடசாலை அதிபர் கேட்டுள்ளார். (50-72)

## பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்தில் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,மே16

வடக்குக் கிழக்கு உள்ளூர் சேவைகள் மேம்பாட்டுத்திட்டம் 2010தொடர்பான கலந்துரையாடல் ஒன்று இன்று முற்பகல் 10மணிக்குப் பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகத்தில் நடைபெறவுள்ளது.

எனவே இக்கலந்துரையாடலில் கலந்துகொள்ளும் சனசமூக நிலையங்கள் தமது சேவைகள் தொடர்பான மும்மொழிவுகளை சமர்ப்பிக்க முடியும்.

அதேவேளை இந்நிகழ்வில் யுனிசெப் நிறுவனத்தினால் வழங்கப்பட்ட பொருள்கள் விரைவில் வழங்கப்படவுள்ளன. அத்துடன் கூட்டுப் பசளையாக்கற் தொட்டிகளை வழங்குவது தொடர்பாகவும் ஆராயப்படவுள்ளன. மற்றும் 2வயதுக்குக் குறைவான பிள்ளைகளுக்கு 'கொமட்' வழங்கப் படவுள்ளதால் இப் பிள்ளைகளது அத் தாட்சி அட்டை எடுத்து வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஓ-16)

## Study in UK

2010 **September** நுழைவுக்கு விண்ணப்பிக்க முடியும் எமது அனைத்துப் பணிகளும் இலவசம். **O/L, A/L** படித்த எவரும் விண்ணப்பிக்கலாம். நம்பிக்கைக்குரிய பல்கலைக் கழகங்கள் மற்றும் கல்லூரிகள். குறைந்த நியாயமான கட்டணங்கள். அனுவம் வாய்ந்த எமது ஆலோசகர்களால் விசா வழிகாட்டல். பல்கலைக்கழகங்கள் மற்றும் கல்லூரிகளின் அனுமதிகள் இலவசம்.

மேலதிக தகவல்களுக்குத் தொடர்பு கொள்ளவும்:

**Thames International**
No: 644, Hospital Road, (Off Vempadi Junction), Jaffna.
Telephone: 0212224593, 0115737306, Mobile: 0770711281

## 12 ஆம் நாள் நினைவஞ்சலி



| தோற்றம் | மறைவு |
|---|---|
| 01 | 06 |
| 01 | 05 |
| 1942 | 2010 |

**அமரர் கலாபூஷணம் தம்பு சற்குருநாதன்**

சாரங்கா இசைக்குழுவின் பாடகி கவிக்குயில் பா.சந்திரஜோதியின் பாசமிகு தந்தையாகிய கலைத்தாய் பெற்றெடுத்த கலாபூஷணமும் வயலின் இசையில் வல்லவனும் இயல், இசை, நாடக முத்தமிழ் வித்தகனும் கலைத்தாயின் தவப்புதல்வனுமாகிய தம்பு சற்குருநாதன் அவர்களின் ஆத்மா இசையில் கலந்து ஸ்வரமாக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

நின்பிரிவின் துயரில்:
அரியாலை, யாழ்ப்பாணம். சாரங்கா இசைக்குழுவினர்.

(98314)

கொழும்பைத் தலைமையாகக் கொண்டியங்கும் மின்சார, இலத்திரனியல் பொருள்களை இறக்குமதி செய்யும் நிறுவனமொன்றுக்கு

**பின்வரும் வெற்றிடங்களுக்கு**

## பணியாளர்கள் தேவை

**1.முகாமையாளர்**

முன் அனுபவமுள்ள ஆங்கிலம், சிங்களம் தெரிந்தவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

**2. விற்பனைப் பிரதிநிதிகள்**

ஆங்கிலம், சிங்களம் தெரிந்த மின்சார இலத்திரனியல் பொருள்களில் அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

சுயவிபரக்கோவையுடன் 19.05.2010 புதன்கிழமை முற்பகல் 10 மணிமுதல் 12 மணிவரை நேரில் வரவும்.

**KOOL AIR (PVT) LTD**
68, கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
0212225575
Jaffna@koolairgroup.com

(98303)

## Marketing Executive உடன் தேவை

எமது நிறுவனத்தில் முழுநேரப் பணியாளராக இணையக் கூடிய **Marketing Executive** ஒருவர் உடன் தேவை. ஆங்கிலம் சரளமாக எழுத, வாசிக்க, பேசத் தெரிந்த மாணவ மன்றங்கள், கல்வி சார் நிறுவனங்கள் மற்றும் உயர்கல்வி பீடங்களுடன் தொடர்பைப் பேணக்கூடியவர் தொலைபேசியிலோ நேரிலோ தொடர்புகொள்ளவும்.

**Thames International**
No: 644, Hospital Road, (Off Vempadi Junction), Jaffna.
Telephone: 0212224593, 0115737306, Mobile: 0770711281

## பணிப்பெண்கள் உடன் தேவை

## மலேசியா நாட்டிற்கு

### தமிழ் வீட்டிற்கு தமிழ் பேசும் பணிப் பெண்கள் தேவை

| | |
|---|---|
| மாதாந்த சம்பளம் | RM 650 |
| இலங்கைப் பெறுமதிக்கு | Rs.21,700 |

பாஸ்போட் உள்ளவர்கள் மற்றும் பாஸ்போட் இல்லாதவர்கள் (உரிய ஆவணங்கள் கொடுத்தால் இலவசமாக பாஸ்போட் செய்து தரலாம்)

- மெடிக்கல் (Medical) - இலவசம்
- இன்சூரன்ஸ் (Insurance) - இலவசம்
- விமான டிக்கட் (Air Ticket) - இலவசம்
- தங்குமிட வசதி (Accomodation) - இலவசம்
- உணவு (Food) - இலவசம்

முற்றிலும் இலவசம்

மற்றும் சவுதிஅரேபியா, குவைத், டுபாய், கத்தார் ஆகிய நாடுகளுக்கும் இலவசமாக அனுப்பிவைக்கப்படும்.

Labour Licence No. 2422

**Amal Sulthan Travels & Recruitment**
540, 1/1, 1/2, (1st Floor), Maradana Road, Maradana, Colombo - 10
Tel: 077-3179592

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உதயன்
தொலைபேசி 222 3837, 222 9933 தொலைநகல்.: 222 9944

## பழி ஓரிடம், பாவமோ மக்களுக்கு!

நாடாளுமன்றத்தின் நிலையியல் விதிகளின் பிரகாரம், குறிப்பிட்ட வருடத்திற்குரிய வரவு - செலவுத் திட்டத்தை முந்திய ஆண்டிலேயே - அனேகமாக நவம்பர் மாதத்திலேயே நிதி அமைச்சர்கள் சமர்ப்பிப்பது வழக்கம். ஜனாதிபதியே நிதி அமைச்சராகவும் பணியாற்றுவதால், இந்த ஆண்டின் ஐந்து மாதங்கள் மறைந்தோடிப் போகும் காலத்திலும் 2011ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் இன்னும் சமர்ப்பிக்கப்படவில்லை!

அது அனேகமாக இந்த ஆண்டின் இறுதியிலேயே அடுத்த வருடத்துக்கான 'பட்ஜெட்' சமர்ப்பிக்கப்படும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் கெஹலிய ரம்புக்வெல கோடிகாட்டியிருக்கின்றார். அதற்கு முன்னராகக் கடந்த வருடத்தில், இந்த வருடம் ஏப்ரல் மாதம் வரையான - நான்கு மாதகால செலவுகளுக்கான இடைக் காலக் கணக்கறிக்கையை ஜனாதிபதி சமர்ப்பித்திருந்தார்.

ஜனாதிபதியே நிதி அமைச்சராகப் பணிபுரிவதால் அவ்வாறு செய்வதற்கான வாய்ப்பு இலகுவாகியிருந்தது. 'இருக்கும் இடத்தில் இருந்துகொண்டால் எல்லாம் சௌக்கியமே' என்பது போல, ஜனாதிபதியால் தங்கு தடையின்றி அதனைச் செய்யமுடிந்தது. நிறைவேற்று ஜனாதிபதி முறையின் ஒவ்வாத பக்கங்களில் இதுவும் ஒன்று!

இதன் தொடர்ச்சியாக எதிர்வரும் ஜூலை மாதத்தில் நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலமே நிறைவேற்றப்படும் என்ற அரசாங்கத் தரப்பின் முடிவையும் ஜனாதிபதியின் முடிவையும் - அமைச்சர் ரம்புக்வெல கடந்த வியாழக்கிழமை நடத்திய செய்தியாள் மாநாட்டில் தெரிவித்தார்.

அதற்கடுத்த ஆறுமாதங்களுக்கும், அதாவது அடுத்த வருடம் டிசெம்பர் வரைக்கும் மற்றுமொரு கணக்கறிக்கை - நிதி ஒதுக்கீட்டுச் சட்டமூலம் கொண்டுவரப்படும் என்பதில் எவரும் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை!

நாட்டின் அரசியல் வரலாற்றில் இந்த வருடம்தான் (அடுத்த வருடத்துக்கான்) வரவு - செலவுத் திட்டம் இல்லாமல் கழியப்போகிறது. வரவு - செலவுத் திட்டம் இல்லாததால் பொருள்களின் விலைகள் எகிறுமே அன்றிக் குறையப்போவதில்லை!

அது மட்டுமன்று, இந்த வருடத்தில் மக்களுக்கு எந்த வகையிலும், எந்தவிதத்திலும் வாழ்க்கைச் செலவு மற்றும் முக்கிய பிரச்சினைகளுக்குத் தீர்வு கிடைக்கப்போவதில்லை. அரசாங்கம் தனது இயலாமையால் மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்துவதற்கான எந்தவிதமான, ஆக்கபூர்வமான உருப்படியான நடவடிக்கைகளும் எடுக்கமுடியாது தடக்குப்படும் - தடுமாறும் என்பது பொருளியல் நிபுணர்களின் எதிர்வுகூறல்.

இந்த விவகாரத்தில், அதாவது நிதி விவகாரத்தில் தான் நினைத்தவாறு செலவுசெய்து தான் விரும்பும் கணக்கு வழக்கைக் காட்டிச் ''சுத்துமாத்துச்'' செய்யக் கூடிய வாய்ப்பும் வசதியும் கூட உண்டு என்று பரவலாகச் சந்தேகம் எழுப்பப்படுகிறது.

இத்தகைய ஒரு சூழ்நிலையில், சர்வதேச நாணய நிதியம் தொடர்ந்து கடன் வழங்குவதற்கு நிபந்தனை வேறு விதித்திருக்கிறது. அது அரசுக்குப் பேரிடியாக - பெரும் அடியாக மாறலாம் - என்றும் பொருளியல் நிபுணர்கள் எச்சரித்திருக்கிறார்கள்!

சர்வதேச நாணய நிதியம் தான் வழங்குவதற்கு வரையறுத்துள்ள 2.6 பில்லியன் டொலர் கடனை வழங்குவதற்கு நிபந்தனை விதிக்கவுள்ளதாக அறிவித்துள்ளது. மூன்றாவது தொகுதி கடனை வழங்குவது குறித்து ஆராய்வதற்காக நாணய நிதியத்தின் தூதுக்குழு ஒன்று கொழும்பு வந்திருக்கிறது. 2009 ஆம் ஆண்டின் வரவு - செலவுத்திட்டத்தின் துண்டு விழும் தொகையின் இலக்கு எட்டப்படாததால், அதாவது குறையாததால், பெப்ரவரியில் வழங்க ஒப்புக்கொண்ட மூன்றாவது தொகுதிக் கடனை வழங்கமுடியாது என்று சர்வதேச நாணயக் குழு தெரிவித்திருக்கிறது!

முன்னர் அறிவிக்கப்பட்ட நிதி உதவியைப் பெறுவதற்கு துண்டு விழும் தொகையைக் குறைப்பதற்கான பரந்தளவு திட்டம் ஒன்றைச் சமர்ப்பிக்கவேண்டும் என்றும் வற்புறுத்தியுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் அந்த நிபந்தனையை நிறைவேற்றுவதில் தாமதம் காட்டினால் வெளிநாட்டு முதலீடுகள் பாதிப்புறும் என்று பொருளியல் நிபுணர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள். நாணய நிதியத்தின் கடன் கிடைக்காவிடில் வட்டி வீதம் அதிகரிக்கும். நிதி வலுவுக்கு உள்ளூர் சந்தையில் மட்டுமே தங்கியிருக்க நேரிடும்!

அரசாங்கம் நிதி மறுசீரமைப்பு தொடர்பாக உறுதியான நடவடிக்கைகளை எடுக்கும் வரைக்கும் நாணய நிதியம் ஏற்கனவே வழங்க ஒப்புக்கொண்ட கடன் தொகையை வழங்காது என்பது அனேகமாக முடிவான காரியம்.

அந்தோ பரிதாபமான நிலை! அரசாங்கம் இந்நாட்டு மக்களுக்கு ஒன்றைக் கூறி இன்னொன்றை நடைமுறைப்படுத்தி தகிடுதத்தம் புரிந்து வருகிறது என்பது இப்போது தானாகவே வெளிப்படுகிறது!

அவ்வாறு சர்வதேச நிதி நிறுவனங்களுக்கு ''வாலா'' காட்ட முடியாது. எது எப்படியோ, அரசு விடும் தவறுகளுக்கு தண்டனை பெறுவோர் பாவம் பொதுமக்களே! இந்த இலட்சணத்தில் நாடும் மக்களும் மேன்மேலும் குட்டிச்சுவராகப் போகிறார்கள்! கழுதை தேய்ந்து கட்டெறும்பாகிவிடும் ஆபத்து மக்களை மிக நெருங்கி வருகிறது! பழி ஓர் இடமும் பாவம் வேறு ஓர் இடமுமாக நாட்டு மக்களின் நிலைமை மேலும் சீரழியப்போகிறது! இன்னும் ஆறு வருடங்களுக்கு மக்களின் நிலைமைகள் என்னென்ன ஆகப்போகின்றனவோ...?

# போதனா வைத்தியசாலைக்கு வரும் நோயாளிகள் தங்க நகைகள் அணிவதைத் தவிர்த்துக் கொள்ளவும்

### வீண் சிரமங்களைத் தவிர்க்க இது உதவும் என்கிறார் பணிப்பாளர்

யாழ்ப்பாணம், மே 16

யாழ். போதனா வைத்தியசாலைக்கு வருகைதரும் நோயாளர்கள் பெறுமதியான தங்க ஆபரணங்கள் அணிந்து வருவதையோ அல்லது பெறுமதியான பொருள்களை எடுத்துவருவதையோ தவிர்த்துக் கொள்ளுமாறு யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் டாக்டர் எஸ். ஸ்ரீபவானந்தராஜா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு :-

யாழ். போதனா வைத்தியசாலைக்குத் தினமும் தலா மூவாயிரம் பேருக்கு மேல் வந்து செல்கிறார்கள். அதே நேரம் எமது பணியாளர்கள் சுமார் ஆயிரம் பேர் வரை கடமை புரிகின்றார்கள்.

இதனால் சனநெரிசலான சூழல் நிலவிவருவதால், இங்குவரும் நோயாளர்கள் தமது உடைமைகளில் கவனம் செலுத்த வேண்டியது அவசியமாகும்.

இனம் தெரியாத புதிய நபர்களை நம்பி உங்களது பொருள்களைக் கையளிப்பதில் மிகக் கவனம் தேவை.

எக்ஸ்றே சிகிச்சை, சத்திர சிகிச்சை முதலானவற்றிற்கு வரும் நோயாளிகள் நகைகள் அணியக்கூடாது என்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அத்துடன் வைத்தியசாலை விடுதிகளில் தங்கிச் சிகிச்சைபெறும் நோயாளரை முக்கியமானவர்கள் தவிர்ந்த உறவினர்கள் பார்வையிட வருவதையும் தவிர்த்துக் கொள்ள வேண்டும். இதன்மூலம் சனநெருக்கடியைத் தவிர்த்து சுகாதாரத்தைப் பேண உதவியாக இருக்கும் - என்றார். (50-16)

# காரைநகர் பிரதேசத்தில் உலக வங்கியின் நிதியுதவியுடன் 200 மில்லியன் ரூபா செலவில் அபிவிருத்திப் பணிகள்

யாழ்ப்பாணம்,மே16

வடக்கு - கிழக்கு உள்ளூர் சேவை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் உலக வங்கியின் நிதி உதவியுடன் காரைநகர் பிரதேசத்தில் இருநூறு மில்லியன் ரூபா செலவில் பல்வேறு அபிவிருத்திப் பணிகள் இடம்பெற உள்ளதாகக் காரைநகர் பிரதேச சபைச் செயலாளர் இரா.லோகநாதன் தெரிவித்தார்.

இந்த அபிவிருத்தி வேலைத்திட்டத்திற்கான ஆரம்ப கட்டப் பணிகள் கடந்த 12ஆம் திகதி புதன்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும், அன்றைய தினம் காரைநகர் பிரதேசத்தை இரு பெரும் பிரிவுகளாகப் பிரித்து பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்களின் அபிப்பிராயம் பெறப்பட்டது - என்றும் அவர் கூறினார்.

அதன் அடிப்படையில் நான்கு கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கி வடக்கு செயலணியும், ஐந்து கிராம சேவையாளர் பிரிவுகளை உள்ளடக்கி தெற்குச் செயலணியாகவும் இரு செயலணிகள் அமைக்கப்பட்டதுடன் ஏழு பேர் கொண்ட திட்டமிடல் செயலணியும் அமைக்கப்பட்டுள்ளதாகவும்,

மேற்படி திட்டத்தின் ஊடாக எதிர்வரும் நான்கு ஆண்டுகளுக்குள் பின்வரும் அடிப்படையில் அபிவிருத்திப் புணிகளை மேற்கொள்ள உள்ளதாகவும் செயலாளர் மேலும் தெரிவித்தார்.

✱ கிராமிய வீதிகள், பாலங்கள், மதகுகள், கால்வாய்கள் போன்றவற்றின் மூலமாக போக்குவரத்து இணைப்புக்களை ஏற்படுத்தி கிராமங்களை இணைத்தல்.

✱ வாராந்த சந்தைகள், கடைகள், பொதுச்சந்தைகள், களஞ்சிய வசதிகள் போன்றவற்றை ஏற்படுத்தல்.

✱ கிராமிய மின் வசதிகள், நூலகங்கள், சனசமூக நிலையங்கள், முன்பள்ளிகள், சுடலைகள், பொதுப்பூங்கா, வாகனத் தரிப்பிட வசதிகளை ஏற்படுத்தல்.

✱ கிணறுகள், குழாய்க்கிணறுகள், தண்ணீர்த் தாங்கிகள் போன்றவற்றின் மூலம் குடிதண்ணீர் வசதிகளை ஏற்படுத்தல், பொது மலசல கூடங்கள், சல கூடங்கள், கழிவு நீர் அகற்றும் வசதிகளை ஏற்படுத்தல்.

✱ ஆயுள்வேத வைத்தியசாலைகள், தாய்சேய் நிலையங்களை அமைத்து மக்களுக்கான ஆரோக்கியமான வசதிகளை ஏற்படுத்தல், குடிதண்ணீர் பெறக் கூடிய இடங்களைப் பாதுகாத்தல, குடிதண்ணீர் வழங்கும் திட்டங்களை உருவாக்குதல்.

✱ விளையாட்டு மைதானங்கள், பூங்காக்கள், சிறுவர் விளையாட்டு மைதானம் உள்ளிட்ட பல்வேறு சமூக மேம்பாட்டுத் திட்டங்கள் நான்கு ஆண்டுத் திட்டங்களாக மேற்கொள்ளப்பட உள்ளன.

எனவே, பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புக்கள் தங்கள் ஆலோசனைகளையும், பங்களிப்புக்களையும் வழங்கி இத்திட்டத்தினைச் சிறப்பாக முன்னெடுக்க உதவுமாறு பிரதேசசபைச் செயலாளர் மேலும் தெரிவித்துள்ளார். (50-250)

## அக்ஷய திருதியை நாள் இன்றாகும்

யாழ்ப்பாணம்,மே16

அக்ஷய திருதியை நாள் இன்றாகும். சித்திரை மாதம் வளர்பிறையில் வரும் திருதியை நாள் அக்ஷய திருதியை. இந்நாளில் எந்தப் பொருளை வாங்கினாலும் சிறப்பு என்று சொல்லப்படுகிறது.

தானதர்மம், புதுக்கணக்கு ஆரம்பித்தல், வித்தியாரம்பம், தங்கம், வெள்ளி வாங்குதல் போன்ற நன்மை பயக்கும் எல்லாக் காரியங்களையும் செய்து பயனடைய முடியும். இந்நாளில் -

விஷேடமாக தங்கம் வாங்கப் பொருத்தமான நாள். சித்திரை மாத அக்ஷயத் திருதியை என்பது இந்து மதத்தவரின் அசையாத நம்பிக்கை.

விடுமுறை நாளான இன்று சகல நகைக்கடைகளும் திறந்து வியாபாரம் இடம்பெறவுள்ளது.

## யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரிக்கு மேலும் ஒரு தொகுதி மாணவர்கள்

### திங்களன்று பதிவுகள்

யாழ்ப்பாணம்,மே16

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் 2010ஆம் கல்வி ஆண்டுக்கு மேலும் ஒரு தொகுதி மாணவர்கள் ஆங்கிலப் பாடநெறிக்கு இணைத்துக் கொள்ளப்படவுள்ளனர்.

இம்மாணவர்களை நாளை திங்கட்கிழமை காலை 9 மணிக்கு யாழ். தேசிய கல்வியியற் கல்லூரிக்குச் சமுகமளித்துப் பதிவுகளை மேற்கொள்ளுமாறு பீடாதிபதி எஸ்.கே. யோகநாதன் அறிவித்துள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட மாணவர்களின் விவரம் வருமாறு :-

எஸ்.சோமகாந்தி (மீசாலை மேற்கு), ஜே.சி. ஜெயேந்திரா (கொழும்பு-2), பி. சிந்துஜா (கந்தர்மடம்), எம். மயூரா (அச்சுவேலி தெற்கு), ஜி.பசுபதி (மணற்புலம், அளவெட்டி), கிறிஸ்ரின் பானுமதி (இளவாலை) -

கே. பரமானந்தம் (உரும்பிராய் மேற்கு), ரி.தர்சிகன் (வட்டக்கச்சி), ரி.சற்குணசிங்கம் (சுன்னாகம்), ஏ.பிரதீபா (மட்டக்களப்பு), என். ஹேசினி (மட்டக்களப்பு), ஈ. எட்வின் சங்கீத் (மட்டக்களப்பு), பி.கே. தயாராஜா (மட்டக்களப்பு).

(50-6)

# மணல் விநியோகத்தில் ஏகபோகம் தொடர்கிறது; அதிகாரிகள் வாய்மூடி மௌனம் சாதிப்பது ஏன்?

மக்கள் நலனைக் கருத்தில் கொண்டு, நீண்ட காலமாக அவர்கள் பேச நினைத்த மணல் விநியோகத்தில் 'மகேஸ்வரி நிதியம்' எனும் தனியார் அமைப்பு கொண்டுள்ள ஏகபோகத்தையும் அதனால் மக்கள் எதிர்கொள்ளும் நெருக்கடிகளையும் உரிய தருணத்தில் வெளிப்படுத்திய 'உதயன்' பத்திரிகையின் துணிச்சல் பாராட்டுக்குரியது. ஆயினும் தமது குட்டு வெளிப்பட்டுவிட்டதைப் பொறுத்துக்கொள்ள முடியாத மகேஸ்வரி நிதியம் தனிப்பட்ட வசைபாடி சளாப்பலான பதிலை வெளியிட்டிருந்தது. அத்தகைய ஒன்றுக்கொன்று சம்பந்தமில்லாத மகேஸ்வரி நிதியத்தின் விளக்கங்களுக்கு - 30.04.2010 அன்று 'மணல் விநியோக சர்ச்சையில் மகேஸ்வரி நிதியம் சளாப்பல்' என்னும் தலைப்பில் தகுந்த பதில்களை உதயனும் வழங்கியிருந்தான்.

அதில் குறித்த தனியார் அமைப்பை நோக்கியும் அரச அதிகாரிகளை நோக்கியும் சில கேள்விகளையும் ''உதயன்'' கேட்டிருந்தான்.




✱ மகேஸ்வரி நிதியம் குடாநாட்டுக்கான மணல் விநியோக ஒட்டுமொத்த உரிமையை எவ்வாறு பெற்றது?

✱ அது சட்டபூர்வமாக மகேஸ்வரி நிதியத்திடம் ஒப்படைக்கப்பட்டதா?

✱ இது தொடர்பான பகிரங்க கேள்வி அறிவித்தல் விடுக்கப்பட்டதா?

✱ மணல் விநியோகம் தொடர்பாக ஏற்பட்டுள்ள இந்தச் சர்ச்சை தொடர்பான உண்மை நிலையை சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகள் தெளிவுபடுத்தாமல் மௌனம் காப்பது ஏனோ?

என்பன போன்ற மிக முக்கியமான கேள்விகளை ''உதயன்'' கேட்டிருந்தான். இந்தக் கேள்விகள் குடா நாட்டில் உள்ள எல்லாப் பொதுமக்களினதும் மனதில் எழுந்த கேள்விகள்தாம்.

இத்தகைய கேள்விகளுக்கு மகேஸ்வரி நிதியத்தினரும் சம்பந்தப்பட்ட அரச அதிகாரிகளும் உரிய விளக்கம் அளிப்பார்கள் என்று பொது மக்களாகிய நாம் காத்திருந்தோம். ஆனாலும் இன்றுவரை குறித்த அமைப்பிடமிருந்தோ அல்லது உரிய அரச அதிகாரிகளிடமிருந்தோ எந்தப் பதிலும் இல்லை. அப்படியாயின் அவர்களுடைய மௌனம் ''உதயன்'' கூறிய குற்றச்சாட்டுக் களை ஏற்றுக் கொண்டுவிட்டதாகத் தானே எண்ணத் தோன்றுகிறது?

ஆனாலும் இலங்கையில் வேறெந்த மாவட்டத்திலும் இல்லாத விநோதமாக, யாழ்.மாவட்டத்தில் மட்டும் மணல் விநியோகத்தில் மக்கள் எதிர்கொள்ளும் அலைச்சல்களும், மகேஸ்வரி நிதியத்தின் ஏகபோகமும் இன்னமும் தொடரவே செய்கின்றன. இந்தப் பிரச்சினைக்கு முடிவே கிடையாதா?

உரிய அதிகாரிகளாவது மக்களுக்கு பதில தருவார்களா?

- க.குலசிங்கம், யாழ்ப்பாணம்.

## நாளை

| | |
|---|---|
| வைகாசி 3 | 17.05.2010 திங்கட்கிழமை |
| திதி | : சதுர்த்தி பி.இ. 01.59 வரை |
| நட்சத்திரம் | : திருவாதிரை பி.இ. 12.34 வரை |
| [illegible] | : [illegible] - 01.23 |
| [illegible] | : 07.23 - 08.53 |
| சதுர்த்தி விரதம் | |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்கள்

## விநாசித்தம்பி கனகலிங்கம்



இணுவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட விநாசித் தம்பி கனகலிங்கம் 14.05.2010 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான விநாசித்தம்பி-அன்னமுத்து தம்பதிகளின் மகனும் காலஞ்சென்றவர்களான ஐயாத்துரை-இரத்தினம் தம்பதியரின் மருமகனும், சரஸ்வதியின் அன்புக் கணவரும் மகேஸ்வரன், யோகேஸ்வரன் (ஓய்வுபெற்ற அதிபர், யா/துணைவி அ.மி.த.க. பாடசாலை, வட்டுக்கோட்டை), ஞானேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரரும் திருச்செல்வம், அருந்தவராணி, விநாயகமூர்த்தி (சுவிஸ்), முருகானந்தன் (சுவிஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் கலாவதி, தர்மராசா (சாந்தி TEX), நளாயினி, அபிராமி ஆகியோரின் மாமனாரும், பரமேஸ்வரி, மகேஸ்வரன், காலஞ்சென்ற யோகேஸ்வரி மற்றும் விக்கினேஸ்வரன், சிவகுமார் (அ.தொ.வி.பி), பாலசிங்கம் ஆகியோரின் மைத்துனரும் காலஞ்சென்றவர்களான காலிங்க ராஜா, வேலாயுதபிள்ளை ஆகியோரின் சகலரும், திவ்யா (4 ஆம் வருட மருத்துவபீட மாணவி), ரம்யா, சரண்யா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), பத்மலோசினி, கோவர்த்தனன், கோபிநாத்,தர்மினி ஆகியோரின் பெரியப்பாவும், துவாரகன், லகுவரன், பிரசாந்தி ஆகியோரின் மாமனும் தர்மிகா,பவித்திரா, நேத்தரி, ஜெகச்செல்வி, இரமணன், விதுஷிகா, நவீதன், வினுட்ஷ்சா, அஸ்வின், ஆராதனா ஆகியோரின் பேரனும் சுதாஸ்கரன், சுதர்சினி, யசோதினி, புவனேஸ்வரி, உலகநாதன், கருணைநாதன், ஞானசகுந்தரி, ஸ்ரீலங்கநாதன், சகலகலாவாணி, அகிலாண்டநாயகி, காசிநாதன், அருள்நாதன், இராசமனோகரி, ஞானசௌந்தரி ஆகியோரின் சித்தப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (17.05.2010) திங்கட்கிழமை முற்பகல் 10மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மாணிக்கர் வீதி,
இணுவில்கிழக்கு,
இணுவில். (98334)

தகவல்:
குடும்பத்தினர்.

## சுப்பையா சிவராசா



வேலணை மேற்கு, வண்ணாம்புலத்தைப் பிறப்பிடமாகவும் ஜேர்மனி, பிராங்பேர்ட்டை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பையா சிவராசா கடந்த 13.05.2010 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவரான சுப்பையா மற்றும் கமலம் தம்பதியினரின் அன்பு மகனும், சமரசேனா-ஆரியவதி தம்பதியினரின் அன்பு மரு மகனும் ஸ்ரீமதியின் பாசமிகு கணவரும், சனுஸ்கா, ஸ்ரெபான், ஸ்வென் ஆகியோரின் பாசமிகு தந்தையும் இந்திரபூபதி, தவமணிதேவி, நாகேஸ்வரி, தண்டபாணிமூர்த்தி, அருட்சோதி, வசந்தா காலஞ்சென்றவர்களான சுபத்திராதேவி, ரவிகாந்தன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், காலஞ்சென்ற செல்வநாயகம் மற்றும் நடேசபிள்ளை, சுந்தரலிங்கம், சுசிலாதேவி, சுந்தரமூர்த்தி, தேவநேசன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் தகனக்கிரியைகள் எதிர்வரும் (20.05.2010) வியாழக்கிழமை மு.ப. 10.30 மணியளவில் Hauptfriedhof, Frankfurt, Eckenheimer Land str194 60320 frankfurt am main இல் நடைபெறும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
நடேசபிள்ளை(மைத்துனர்),
விக்கினேஸ்வரன்(சகோதரன்)
தொடர்பு: மனைவி/ பிள்ளைகள்: 0049694930458,
தாயார்: 0213213433,
விக்கினேஸ்வரன்: 0112543512

'நாகபவனம்'
மட்டுவில் மத்தி,
சாவகச்சேரி.
(98326)

# அறை வாடகைக்கு

மாநகரசபை எல்லைக்குள் சகல வசதிகளுடன் கூடிய அறை வாடகைக்கு விடப்படும். அலுவலக உத்தியோகத்தர், பல்கலைக்கழக மாணவர்கள் விரும்பத்தக்கது.
தொடர்பு: 29/2, மருதடி வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே.: 0212226173

# Computer Repair கணனித் திருத்தம்

உங்கள் கணனிகள் பழுதடைந்து விட்டனவா?
உடனடியாகவே உங்கள் வீடுகளுக்கு வந்து உரிய முறையில் திருத்தித் தருகின்றோம்.
Computer Repair
தொடர்பு: 0771329513

# தேவை

Akai Spool Tape Deck Gx Head (Professonal)
விற்பனைக்கு இருந்தால் கீழ்க்காணும் தொ.பே. இலக்கத்துடன் தொடர்புகொள்ளவும்.
தொ.பே.: 0777901197, 0716960600

# தேவை

இல்லப் பாதுகாவலர் உடனடியாகத் தேவை.
தொடர்புகொள்ள வேண்டிய முகவரி
ILE Supply Chain Centre
இல.102, 3 ஆம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம்.
தொ.பே.: 0773412549

# விற்பனைக்கு

சவுதியில் இருந்து கொண்டுவரப்பட்ட
Sony LCD 32" TV, LG Washing machine Fully Automatic, Samsung Big Fridge Fully Automatic
தொடர்பு: 0778253295, 0212221733, 021 222 1734
70, Karaikaddu lane, Vannarpannai

# வேலை ஆள்கள் தேவை

★ விநியோக நிறுவனம் ஒன்றுக்கு கணனி அறிவுள்ள பெண்கள் தேவை. (ஆனைக்கோட்டை, மானிப்பாயிலுள்ளவர்களுக்கு முன்னுரிமை)

★ புடைவை வியாபாரத்தில் அனுபவமுள்ள/ பழகவிரும்புபவர்கள் (பெண்கள்) யாழ்ப்பாணத்துக்கும் சாவகச்சேரிக்கும் தேவை.

உடன் விண்ணப்பிக்கவும்.
விள. இல. 4021
C/o உதயன்.

## பழைய மாணவர் சங்கக் கூட்டம்

நவாலி, மே 16

நவாலி மகா வித்தியாலயத்தின் பழைய மாணவர்சங்க பொதுக் கூட்டம் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெறும்.

அனைத்து அங்கத்தவர்களையும் சமுகந்தருமாறு கேட்கப்பட்டுள்ளது.

(1-100)

# மரண அறிவித்தல்கள்

## தம்பிராசா திருஞானசம்பந்தர்



மானிப்பாய், வேலக்கைப்பிள்ளையார் கோயிலடியைச் சேர்ந்த தம்பிராசா திருஞானசம்பந்தர் (இளைப்பாறிய பயிற்றப்பட்ட ஆங்கில ஆசிரியர்,யா/பாலசுப்பிரமணிய வித்தியாசாலை, ஆனைக்கோட்டை) நேற்று (15.05. 2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற திரு.திருமதி தம்பிராசா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற மணிமேகலாதேவியின் (முன்னாள் பிரதி அதிபர்,யா/மானிப்பாய் மகளிர் கல்லூரி) அன்புக் கணவரும், திருமாறனின் அன்புத் தந்தையும்,கணேசலிங்கத்தின் (இளைப்பாறிய உள்ளகக் கணக்காய்வாளர், யாழ். மாநகரசபை) அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2010) ஞாயிற்றுக்கிழமை மு.ப.9.30மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வேலக்கைப் பிள்ளையார்,
கோயிலடி, மானிப்பாய்,
0777246902 (98331)

தகவல்:
த.கணேசலிங்கம்
(சகோதரன்).

## வீரகத்தி சிவப்பிரகாசம்

(தொழில்நுட்ப உதவியாளர், படவரைஞர்,
வீதி அபிவிருத்தி அதிகார சபை,யாழ்ப்பாணம்)



வடமராட்சி,கரவெட்டி,கிழவிதோட்டத்தைப் பிறப்பிடமாகவும், தென்மராட்சி அல்லாரையை வதிவிடமாகவும், தற்பொழுது கந்தர்மடம், அன்ன சத்திரலேனை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட திரு.வீரகத்தி சிவப்பிரகாசம் (படவரைஞர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை, யாழ்ப்பாணம்) நேற்று (15.05.2010) சனிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் கரவெட்டியைச் சேர்ந்த காலஞ் சென்றவர்களான வீரகத்தி- தெய்வானை தம்பதியினரின் புதல்வனும், அல்லாரையைச் சேர்ந்த காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம்- செல்வநாயகி தம்பதியினரின் அருமை மருமகனும், ஜெகதாம்பிகையின் (பிரதம முகாமைத்துவ உதவியாளர்,வீதி அபிவிருத்தி திணைக்களம்,யாழ்ப்பாணம்) அன்புக் கணவரும், அச்சுதன் (பொறியியலாளர்,லண்டன்), மயூரன் (பொறியியற்பீட இறுதி வருடமாணவன், மொறட்டுவ பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்றவர்களான சிவலிங்கம் (A.G.A, மன்னார்), குணசிங்கம் மற்றும் ஜெயலட்சுமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.05.2010)ஞாயிற்றுக்கிழமை பி.ப.2மணிக்கு அவரின் கந்தர்மடத்திலுள்ள இல்லத்தில் நடை பெற்று பூதவுடல் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் தகனம் செய் யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார்,உறவினர்,நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்வும்.

அன்னசத்திரலேன்,
யாழ்ப்பாணம். (98337)

தகவல்:
மனைவி,பிள்ளைகள்.

# நீங்காத நினைவினில் நிலைத்திருக்கும் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மலர்வு 05 - 08 - 1950



உதிர்வு 16 - 05 - 2009



மலர்வு 12 - 04 - 1973

நீக்கிலஸ் சுவாம்பிள்ளை     சுபேரா றோஸ்மேரி


ஆண்டு ஒன்று ஆனாலும் ஆறவில்லை எம்துயர்
ஆயிரம் உறவுகள் இங்கிருந்தும் ஐயா, சோதரி உங்களுக்கு ஈடாகுமா.

கடந்த 16.05.2009 இறைபதம் அடைந்த எமது அன்புத் தெய்வங்களின் ஆத்மசாந்தித் திருப்பலி நேற்று(15.05.2010) சனிக்கிழமை பி.ப. 5 மணிக்கு லூர்த்து அன்னை ஆலயத்தில் இடம் பெற்று இன்று(16.05.2010) ஞாயிற்றுக்கிழமை மதியபோசன விருந்து தற்காலிக இல்லத்தில் இடம்பெறும். எனவே இந்நிகழ்வில் கலந்துகொள்ளும் வண்ணம் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

4 ஆம் குறுக்குத்தெரு,
அந்தோனியார் கோயில் வீதி, பருத்தித்துறை (சி-567686)

குடும்பத்தினர்.

# மரண அறிவித்தல்



## சங்கரப்பிள்ளை கந்தசாமி

(முகாமையாளர், எரிபொருள் நிரப்பு நிலையம், கைதடி)

கைதடி கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சங்கரப்பிள்ளை கந்தசாமி 14.05.2010 வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சங்கரப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான கைதடி வடக்கு, கந்தையா - அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மருமகனும் இந்திராணிதேவியின் பாசமிகு கணவரும் குகாந்தகி (லண்டன்), குகாமினி(கைதடி), குகாயினி(சுவிஸ்), குகந்தன்(கனடா), குயிதன்(கனடா) ஆகியோரின் பாசமிகு தந்தையும் சிறீஸ்கந்தராஜா (லண்டன்), பார்த்தீபன்(கமநலசேவை நிலையம், உரும்பிராய்), சிறிதரன் (சுவிஸ்), ஜீவிகா (கனடா), மகிந்தினி(கைதடி) ஆகியோரின் பாசமிகு மாமனாரும் பத்மஜன் (லண்டன்), லக்சிகா(லண்டன்), கோபீசன்(கைதடி), அபிராமி (சுவிஸ்), ஆகாஷ்(சுவிஸ்), பமிக்கா (கனடா) ஆகியோரின் அன்புப் பேரனும் விஜயரட்ணம், கமலாதேவி ஆகியோரின் சகோதரனும் அருணாசலம், செல்வமலர், சத்தியதேவி(லண்டன்), குருபரன்(கொழும்பு), காலஞ்சென்ற சறோஜினிதேவி மற்றும் இராஜகீதா ஆகியோரின் பாசமிகு மைத்துனரும் கைலாயபிள்ளையின் சகலனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(16.05.2010) ஞாயிற்றுக்கிழமை அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பி.ப. 3 மணியளவில் தகனக் கிரியைக்காக கைதடி ஊற்றல் இந்துமயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்லை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

"தககிரி"
கைதடி கிழக்கு, கைதடி.
0212225747 (98286)

தகவல் :
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ருவென்ரி-20 உலகக்கிண்ண சம்பியன் யார்? அவுஸ்திரேலியா - இங்கிலாந்து இன்று மோதல்

யாழ்ப்பாணம்,மே16

கிரிக்கெட் ரசிகர்களுக்கு இன்று மிகவும் மகிழ்ச்சியான நாளாகும். கடந்த 16 தினங்களாக நடைபெற்ற ஐ.சி.சியின் மூன்றாவது ருவென்ரி-20 உலகக்கிண்ணத்தின் சம்பியன் யார்? என்பதைத் தீர்மானிக்கும் நாளாக இன்றைய நாள் அமையவுள்ளது.

12 நாடுகள் பலப்பரீட்சை நடத்திய இந்த உலகக் கிண்ணத்தில் ஆப்கானிஸ்தான், அயர்லாந்து அணிகள் முதல்முதலாகக் களமிறங்கின. அயர்லாந்து அணி ஏற்கனவே சர்வதேசப் போட்டிகளில் பங்கு கொண்டிருந்தது. ஆனால் சர்வதேசப் போட்டிகளில் முதன் முறையாகக் களம் இறங்கிய ஆப்கானிஸ்தான் பலரின் பாராட்டையும் பெற்றது என்றே கூறலாம்.

ஐ.சி.சி. புதிய அணிகளின் விடயத்தில் அல்லது பலமற்றனவாகக் கருதப்படும் அணிகளின் விடயத்திலும் தொடர்ந்து பாராபட்சத்தைக் காட்டி வருகின்றது என்றே கூறலாம். போட்டி அட்டவணைகளில் மிகப் பலம் பொருந்திய அணிகளுடன் பலமற்ற அணிகள் மோதவேண்டிய நிலையால் அந்த அணிகள் தொடர்ந்து தோல்வியைச் சந்தித்து வெளியேறுகின்றன. இந் நிலைமை கிரிக்கெட் எதிர்காலத்தைப் பாதிப்புறச் செய்யும் செயற்பாடாகவே தொடர்ந்து அமைகிறது எனலாம்.

இம்முறை சுப்பர்-8 ஆட்டங்களில் எதிர்பார்க்கப்பட்ட கிரிக்கெட் ஜாம்பவான்களே நுழைந்தன. ஆனாலும் இறுதிப் போட்டிக்குள் அவுஸ்திரேலியா - இங்கிலாந்து அணிகள் அதிரடியாகப் புகுந்துள்ளன என்றே கூறலாம்.

இம்முறை பெரிதும் எதிர்பார்க்கப்பட்ட அணிகளாகக் கடந்த இரு உலகக்கிண்ணங்களிலும் சம்பியன்களான இந்தியா, பாகிஸ்தான் அணிகள் பெரிதளவில் பிரகாசிக்கவில்லை என்றே கூறலாம்.

அரையிறுதிக்குள் அதிரடியாக நுழைந்த பாகிஸ்தான், இலங்கை, இங்கிலாந்து, அவுஸ்திரேலிய அணிகளின் ஆட்டங்கள் சிறப்பாக இருந்தது. ஆனால் எந்த ஒரு போட்டியிலும் வெற்றிபெறாது சுப்பர்-8 இற்குள் நுழைந்த இங்கிலாந்து சுப்பர்-8 இல் அனைத்துப் போட்டிகளிலும் வெற்றிபெற்று அரையிறுதியில் இலங்கைக்கு அதிர்ச்சி வைத்தியம் கொடுத்தது எனலாம்.

கிரிக்கெட்டின் ஜாம்பவான் என்று வர்ணிக்கப்படும் அவுஸ்திரேலியா மீண்டும் தனது பலத்தை நிரூபித்தது என்றே கூறலாம். அரையிறுதியில் பாகிஸ்தான் நிர்ணயித்த 191 ஓட்டங்கள் என்ற கடின இலக்கை அடைந்து இறுதிப் போட்டிக்குள் நுழைந்தமை இங்கிலாந்துக்குக் கடும் சவாலை ஏற்படுத்தும் எனலாம்.

எது எவ்வாறு இருப்பினும் முதன் முறையாக ருவென்ரி-20 உலகக்கிண்ணத்தின் இறுதிப்போட்டிக்குள் நுழைந்துள்ள இரு அணிகளும் கிரிக்கெட்டின் மிகப்பெரும் ஜாம்பவான்களே.

இங்கிலாந்து, கிரிக்கெட்டை உலகுக்கு அறிமுகப்படுத்தியதுடன் ருவென்ரி-20 போட்டிகளையும் அவர்களே ஆரம்பித்து வைத்தனர். அவுஸ்திரேலியாவைப் பொறுத்தவரை கிரிக்கெட்டில் முடிசூடா மன்னர்களாகத் திகழ்பவர்கள்.

ஆனாலும் இங்கிலாந்து - அவுஸ்திரேலிய அணிகள் என்றால் கிரிக்கெட் ரசிகர்களுக்கு நினைவுக்கு வருவது ''ஆஷஸ்'' போட்டிதான். இதுவும் ''ருவென்ரி-20 ஆஷஸாக'' அமையும் என்றே எதிர்பார்க்கலாம்.

**போட்டி இல.13**

## 2010 ரி-20 உலகக்கிண்ண கிரிக்கெட் போட்டியை முன்னிட்டு 'உதயன்' நடத்தும் பரிசுப்போட்டி

★அனுப்புபவர் பெயர் :..........................................

★ முகவரி :..........................................

★ தொ.பே.இல. :..........................................

**கேள்வி:**

1. 3 ஆவது ரி 20 உலகக்கிண்ணப் போட்டியில் முதன்முறையாக இறுதிப்போட்டிக்கு தெரிவுசெய்யப்பட்ட அணி எது?
..........................................
2. 3 ஆவது உலகக்கிண்ண 1 ஆவது அரையிறுதிப் போட்டியடின் போது நடுவரின் தவறான தீர்ப்புக்கு உள்ளாகிய இலங்கை வீரர்?
..........................................
3. 3 ஆவது உலகக்கிண்ணப் போட்டியின் போது இறுதிப் போட்டிக்கு முன்னதாக எத்தனை சதங்கள் பெறப்பட்டன.
..........................................

போட்டி இலக்கம் 13 இல் வெற்றி பெறும் போட்டியாளருக்கு 212, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் அமைந்துள்ள **கிருபா லேணர்ஸ்** சார்பாக ரூபா 2,000/- பெறுமதியான பரிசுப்பொதி வழங்கப்படும்.

★ பூர்த்தி செய்யப்பட்ட கூப்பனை 'உதயன் பணிமனை', 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

அனுப்பும் போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் போட்டி இலக்கத்துடன் T-20 உலகக் கிண்ணப் போட்டி எனக்குறிப்பிடப்பட வேண்டும்.

DHL WORLDWIDE EXPRESS
யாழ் குடாநாட்டிலிருந்து உலக நாடுகளுக்கு DHL சேவையினைப் பெற்றுக்கொள்ள!
உள்நாடு வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை
விரைவு பாதுகாப்பு நம்பகத்தன்மை
குறிப்பிட்ட சில நாட்களுக்கு விசேட விலைக்கழிவு
உள்நாடு வெளிநாடுகளுக்கு கடிதங்கள் அன்பளிப்புப் பொருட்கள் உணவுப்பொருட்கள், உடுபுடவைகள் மற்றும் DVD பிரதிகள் CD க்கள் என்பன ஏற்றுக்கொள்ளப்படும்
குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைக்கப்படும்.
தற்பொழுது 24மணி நேர உள்நாட்டிற்கான தபால்கள் பொதிகள் சேவை (சனி ஞாயிறு தினங்கள் தவிர்ந்த)
திருமுருகன் கொம் நெற்
லண்டன், சுவிஸ், பிரான்ஸ், நாடுகளுக்கு 3கிலோவுக்கு குறையாத பொதிகளுக்கு 1Kg 400/= ரூபா விதமும் கனடாவிற்கான 3 கிலோவிற்கு குறையாத 1Kg பொதிகளுக்கு 500/= ரூபா வரையான விசேட சலுகை
ஞாயிறு விடுமுறை தினங்களிலும் சேவைகள் இடம்பெறும்
TCN EXPRESS
2B, Nelsan Place, Colombo -06
259,கே.கே.எஸ்.வீதி, யாழ்ப்பாணம். T.P- 2227835 (ஆல் சிலோன் டிஸ்ரிபியூட்டர் முன்பாக)
46, ஆடியபாதம்,வீதி, திருநெல்வேலி. (ந.ப.நோ.சங்கம் முன்பாக)
பிரதான வீதி, நெல்லியடி.(ஹற்றன் நஷனல் வங்கிக்கு அருகாமையில்)
குடாநாட்டில் முகவர்கள் தேவை

# கண்ணீர் அஞ்சலி

## அமரர் சங்கரப்பிள்ளை கந்தசாமி

**(முன்னாள் முகாமையாளர், எரிபொருள் நிரப்பு நிலையம், கைதடி)**



கடமை, கண்ணியம், கட்டுப்பாடு தவறாது
அன்பிற்கு இலக்கணமாய் பாசத்தின் இருப்பிடமாய்
எங்கள் அனைவருடனும்
ஒற்றுமையாய் வாழ்ந்தீர்கள்!
சீற்றமே அறியாது என்றும் சிரித்த முகத்துடன்
எங்களுடன் வாழ்ந்தீர்கள்!
இல்லை என்ற வார்த்தைகள்
உங்கள் உதடுகளில் ஒரு நாளும் உதித்ததில்லை!
எமது குடும்பத்தில் ஒருவராய்,
உடன்பிறவாச் சகோதரனாய்,
எம்மேல் அக்கறை கொண்ட பெரியப்பாவாய்
என்றும் எம்முடன் இருந்தீர்கள்!
உதவிகள் பல செய்து எம்மை உங்களது
உறவுகளாக நினைத்து மகிழ்ந்தீர்கள்
மிக உயர்ந்த உங்களை இன்று நாம் இழந்து நிற்கின்றோம்!
உங்களுடன் நாம் வாழ்ந்த இனிமையான நினைவுகளை
என்றும் நாம் மறவோம்!-
உயர்ந்த பண்பும், சாந்தமான குணமும்
கொண்டு வாழ்ந்த உங்களை இழந்த சோகம்
தாழ் வைத்துப் பூட்டினாலும் தாழாது!!!

உங்களது பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், உங்களது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கும்:
திரு. திருமதி விஜயகுமார் குடும்பம் (சுவிஸ்),
திரு. திருமதி சந்திரன் குடும்பம் (சுவிஸ்),
திருமதி சங்கரப்பிள்ளையும், குடும்பத்தினரும்
(கைதடி கிழக்கு, கைதடி)

(98323)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பருத்தித்துறை - யாழ். காலை 6 மணி பஸ் சேவை நிறுத்தம்; மக்கள் அவதி

யாழ்ப்பாணம், மே 16

பருத்தித்துறையில் இருந்து யாழ்ப்பாணம் வரும் 751 ஆம் இலக்க இலங்கைப் போக்குவரத்துச் சபையின் காலை 6 மணி பஸ்சேவை கடந்த 7 நாள்களாக நடத்தப்படவில்லை.

இதனால் பல்கலைக்கழக மாணவர்கள், தொழில் செய்வோர், அரச உத்தியோகத்தர்கள், தமது தேவைகளுக்காக யாழ்ப்பாணம் வரும் பொதுமக்கள் எனப் பலரும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள் இதுகுறித்து பருத் தித்துறை டிப்போவுடன் தொடர்பு கொண்ட போது பயணிகள் குறை வால் பஸ்சேவை நிறுத்தப்பட்டதாகக் கூறியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இச்சேவை நிறுத்தப்பட்டதால் பலரும் பாதிப்படைந்துள்ளனர். எனவே, இச் சேவையை மீளவும் நடத்தமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (50-6-10)

# 7.6 மில்லியன் ரூபா பெறுமதியான நான்கு அதிநவீன கட்டில்கள்

## யாழ். ஆஸ்பத்திரிக்கு ஜேர்மன் வங்கி வழங்கியது

யாழ்ப்பாணம், மே 16

அதிநவீன தொழில்நுட்ப வசதிகளைக் கொண்ட 7.6 மில்லியன் ரூபா பெறுமதியான நான்கு கட்டில்கள் யாழ். போதனா வைத்தியசாலையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவுக்கென நேற்று சனிக்கிழமை வழங்கப்பட்டன.

ஜேர்மன் நாட்டு வங்கியான டொச் (Deutsch) வங்கியினால் அன்பளிப்பாக வழங்கப் பட்ட இந்தக் கட்டில்கள் தலா 1.9 மில்லியன் ரூபா பெறுமதியானவை என்று கூறப் பட்டது. மயக்க மருந்து சிகிச்சை நிபுணர் எஸ். பிறேமகிருஷ்ணாவின் முயற்சியின் பலனாகவே இந்த அன்பளிப்பு கிடைக்கப்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். போதனா வைத்தியசாலையில் நேற்றுக் காலை இடம்பெற்ற கையளிப்பு நிகழ்வில் வைத்தியசாலைப் பணிப்பாளர் வைத்திய கலாநிதி எஸ்.ஸ்ரீபவானந்தராஜா, அதிதீவிர சிகிச்சைப் பிரிவின் வைத்திய நிபுணர்கள், வைத்திய அதிகாரிகள் மற்றும் வங்கியின் இலங்கைக்கான பிரதிநிதி மற்றும் உயரதிகாரிகள் பலரும் கலந்து கொண்டனர். (50-14)

# ஜி.எஸ்.பி. வரிச்சலுகை குறித்துப் பேச அரசின் பிரதிநிதிகள் பெல்ஜியத்துக்கு

கொழும்பு, மே 16

'ஜி.எஸ்.பி.' வரிச்சலுகையை மீளப் பெறுவது தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியப் பிரதிநிதிகளுடன் பேச்சுகளை நடத்துவதற்காக அரச பிரதிநிதிகள் எதிர்வரும் 20ஆம் திகதி பெல்ஜியத்தின் பிரசல்ஸ் நகருக்குச் செல்கின்றனர் என்று ஐ.தே.கட்சி எம்.பி. ஹர்ஸா டி சில்வா கூறியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றிய அவர் இது தொடர்பாக மேலும் கூறியவை வருமாறு:-

பொருளாதாரக் கொள்கைகளைப் பொறுத்தமட்டில் அரசு இரு முகங்களைக் கொண்டே செயற்பட்டு வருகின்றது. 'ஜி.எஸ்.பி.' வரிச்சலுகை இருந்தாலும் ஒன்றுதான், இல்லாவிட்டாலும் ஒன்றுதான் என அரசு கூறுகின்றது. நாட்டின் இறைமைக்கு ஒரு புள்ளிகூட பாதிப்பு வரக்கூடாது என்பதற்காக 'ஜி.எஸ்.பி.' வரிச்சலுகை கிடைக்காவிட்டால் பரவாயில்லை என்று அரசு தொடர்ந்து கூறிவருகின்றது.

அதேவேளை, 'ஜி.எஸ்.பி.' வரிச்சலுகையை எப்படியாவது பெற்றுக்கொள்ளவேண்டும் என்ற நோக்கில் அரசு பெல்ஜியத்தின் பிரசல்ஸ் நகருக்கு அதிகாரிகள் நால்வரை அனுப்பி வைத்து இதுதொடர்பாகக் கலந்துரையாடல்களை மேற்கொண்டது. எதிர்வரும் 20 ஆம் திகதி அரசின் முக்கிய பிரதிநிதிகள் அங்கு சென்று இதுதொடர்பில் கலந்துரையாட உள்ளனர்.

அவசரகாலச் சட்டத்தின் சில சரத்துகளை அரசு நீக்கியது. அத்துடன் ஊடகவியலாளர் திஸநாயகத்துக்கு மன்னிப்பு வழங்கியது. 'ஜி.எஸ்.பி.' வரிச்சலுகையைப் பெற்றுக்கொள்வதற்காகவே இவை இரண்டையும் அரசு பிரதானமாகச் செய்துள்ளது.

சர்வதேச நாணய நிதியத்தின் கடன் தொடர்பான விடயத்திலும் அரசு இவ்வாறே செயற்படுகின்றது. கடன் கிடைத்தாலும் ஒன்று, கிடைக்காவிட்டாலும் ஒன்று என 'ஜி.எஸ்.பி. வரிச்சலுகைக்கு கூறியதுபோன்றே நாணய நிதியம் தொடர்பாகவும் அரசு தெரிவித்தது - என்றார். (அ-சி)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடத்துவதாயின், அது மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கு வேலைத்திட்டத்துக்கு அமையவே இடம் பெறவேண்டும். அதனை மீறி எதுவும் இடம்பெறக்கூடாது.

நாட்டுக்குப் பொருத்தமான அரசமைப்பு மாற்றங்களை மேற்கொள்வது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தியுள்ளது. இதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப் பட்டு வருகின்றன.

அரசமைப்புத் திருத்தங்கள் தொடர் பில் ஆராய்வதற்கு வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் தலைமை யில் விசேட குழுவொன்று அமைக்கப்பட் டுள்ளது.

அரசமைப்புத் திருத்தங்களை மேற்கொள்வது தொடர்பில் அரசாங்கம் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அனைத்து உறுப்பினர்களிடமும் யோசனைகளைப் பெறவேண்டும். அவர்களுடன் கலந்து ரையாடி இணக்கப்பாட்டுக்கு வரவேண்டும் - என்றார். (அ-1)

## நாணய நிதியத்தின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.செயலகத்தில் வடக்குமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜீ.ஏ.சந்திரசிறி, யாழ்.அரச அதிபர் கே.கணேஸ் மற்றும் அதிகாரிகளை நிதியத்தின் குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

யாழ்.மாவட்டத்தில் இதுவரை மேற்கொள்ளப்பட்ட மீள்குடியமர்வு சம்பந்தமான செயற்பாடுகளின் முன்னேற்றம், மீள்குடியமர்ந்த மக்களின் தேவைகள் ஆகியன குறித்துக் குழுவினர் கேட்டறிந்தனர்.

ஒவ்வொரு துறைசார்ந்த தேவைகள் குறித்தும்,விவரமான ஆவணம் ஒன்று சர்வதேச நாணயநிதியக்குழுவினரிடம் கையளிக்கப்பட்டது.

வழமையாக சர்வதேச நாணயநிதியத்தின் குழு கொழும்பு அதிகாரிகளுடன் பேச்சு நடத்திவிட்டுத் திரும்பிவிடும். முதல்தடவையாக அக்குழு யாழ்ப்பாணத் துக்கும் வருகைதந்தது விசேட அம்சம் எனச் சுட்டிக்காட்டப்பட்டது. (ஒ-1)

## திருமலைத் தமிழர்களில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்தில் தமிழகத் துக்கும் இலங் கைக்கும் இடையில் பயணி கள் கப்பல் சேவை ஆரம்பிக் கவுள்ளதாக இந்தியா அறிவித்துள்ள நிலையில் -

மீளக் குடியமர விரும்புபவர்களை கப் பல் மூலம் அழைத்துவர அகதிகளுக்கான ஐ.நா.தூதரகம் முடிவு செய்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஒ-1-151)

## புலிகளுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பவர்ஸ் இந்தத் தீர்ப்பை வழங்கினார்.

எனினும் தனது கணவர் இலங்கையில் பசியால் வாடும் மக்களுக்கு உணவளிப்பதற்காகவே நிதி சேகரித்தார் என்றும், இலங்கை அரசாங்கம் ஒரு பயங்கரவாத அரசாங்கம். அதற்குக் கனேடிய அரசு ஏன் உண்மையைப் புரியவைக்கக் கூடாது என்றும் அவரது மனைவி கருத்துத் தெரிவித்ததாக இணையத்தளம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

இதேவேளை, தம்பித்துரைக்கு சிறைத் தண்டனை விதிப்பதன் மூலம் கனேடிய நீதித்துறை தவறிழைத்துள்ளதாக அந்த நாட்டின் லிபரல் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் உஜால் டொசாங் குற்றம் சாட்டியுள்ளார். (அ-10)

## வன்னியில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இடம்பெயர்ந்து மக்கள் வவுனியா முகாங்களில் தங்கியிருந்தபோது கூட்டமைப்பினர் அவர்களைச் சந்திக்க அரசு அனுமதி வழங்க மறுத்து வந்தது இங்கு குறிப்பிடத்தக்கது.

எனினும் இடையிடையே உத்தியோக பூர்வமற்ற முறையில் கூட்டமைப்பின் எம்.பிக்கள் வன்னி சென்று இடம்பெயர்ந்தவர்களை சந்தித்து வந்துள்ளனர்.

தற்போது, முதல்தடவையாக சகல எம்.பிக்களும் வன்னி செல்கின்றனர். (ஒ-1)

## தேசிய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தமிழர் பிரச்சினையை ஆராய்வதற்கென நல்லிணக்க ஆணைக்குழு நியமிப்பது என்பதும் பம்மாத்து.

காலத்தை இழுத்தடிக்கவும் இந்தியாவையும் சர்வதேசத்தையும் ஏமாற்றவும் தமிழர்களை ஏமாற்றவும்தான் நல்லிணக்க ஆணைக்குழுவை அரசு நியமிக்கின்றது. இந்த ஆணைக்குழுவை நியமித்து, தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்வு கிடைக்கும் என்பது கேள்விக்குரிய, நகைப்புக்குரிய விடயமே.

வடக்கு மாகாண சபைத் தேர்தலில் வெற்றிபெற்று ஆட்சியைக் கைப்பற்றும் நோக்கில் அரங்கேற்றப்படும் நாடகம்தான் இந்த ஆணைக்குழு என்று உறுதியாகக் கூறலாம்.

இந்த ஏமாற்றுச் சதியில் தமிழ்மக்களை வீழ்த்த முடியாது என்பதை அரசு புரிந்துகொள்ளவேண்டும். இத்தகைய ஏமாற்றுத் திட்டங்களை நிறுத்தி பிரச்சினைக்கு விரைந்து தீர்வு ஒன்றை முன் வைக்க அரசு முன்வரவேண்டும்-என்றார் அவர். (ஒ-1)

## வன்னியில் உயிர்நீத்த..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த வருடம் வன்னியில் உயிர்நீத்த உறவுகளின் நினைவாக, அவர்களை நினைவு கூர்ந்து பல்வேறு சமய நிகழ்வுகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

நாளை கொக்கட்டிச்சோலை தான்தோன்றீஸ்வரர் ஆலயத்திலும், பளுகாமம் கிறிஸ்தவ தேவாலயத்திலும் விசேட பிரார்த்தனைகள் நடைபெறும். தான்தோன்றீஸ்வரர் ஆலயத்தில் காலை முதல் திருவாசக முற்றோதலும் நடைபெறவுள் ளது.

மறுநாள் செவ்வாய்க்கிழமை மாமாங்கம் பிள்ளையார் ஆலயத்தில் , காலை 8 மணி முதல் வன்னியில் உயிர்நீத்த உறவு களுக்காக பிதிர்க்கடன் நிறைவேற்றப்பட்டு, முற்பகல் 10மணிக்கு நினைவுக் கூட்டமும் நடைபெறும்.

அதனைத் தொடர்ந்து அன்னதானத்துக்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது - என்று அரியநேத்திரன் எம்.பி. மேலும் தெரிவித்தார். (ஒ-1)

# மரண அறிவித்தல்கள்

## திருமதி இராஜஇராஜேஸ்வரிஅம்மா சச்சிதானந்தேஸ்வரக்குருக்கள்

கோப்பாய் மத்தி, வெள்ளெருவைப் பிள்ளையார் கோயில் ஆதீன குருக்களின் மனைவி திருமதி இராஜஇராஜேஸ்வரி அம்மா சச்சிதானந்தேஸ்வரக்குருக்கள் நேற்று(15.05.2010) சனிக்கிழமை மாலை இறைபதம் எய்தினார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று(16.05.2010) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோப்பாய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

வெள்ளெருவைப் பிள்ளையார் கோயிலடி,
கோப்பாய் மத்தி, கோப்பாய். (98341)

தகவல் :
பிள்ளைகள்.

## மருதனாச்சிப்பிள்ளை இராசதுரை

சுழிபுரத்தைப் பிறப்பிடமாகவும், சுதுமலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி மருதனாச்சிப்பிள்ளை இராசதுரை நேற்று (15.05.2010) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகசபை - கதிராசிப்பிள்ளை தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற கிருஸ்ணர் - இராசம்மா தம்பதிகளின் அன்பு மருமகளும், காலஞ்சென்ற இராசதுரையின் அன்பு மனைவியும், அம்பலவாணர், புனிதவதி, தேவன், மகேஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரியும், புஸ்பராணி (கணக்காளர், பனை தென்னைவள அபிவிருத்திச் சபை), சறோஜினிதேவி, புஸ்பமலர் (பிரதி அதிபர், யா/மானிப்பாய் சென்ற் ஆன்ஸ் றோ.க.த.க. பாடசாலை), நந்தினிதேவி (ஆசிரியை, யா/ஆனைக்கோட்டை பாலசுப்பிரமணியம் வித்தியாசாலை), அமரர் விமலலோஜினி, விமலாம்பிகை (பிரான்ஸ்), ஜெயமுகானந்தன் (பிரதி திட்டமிடல் பணிப்பாளர், புனர்வாழ்வு அமைச்சு), காலஞ்சென்ற ஜெயசிவானந்தன் (சித்த மருத்துவபீட மாணவர்) ஆகியோரின் அன்புத் தாயாருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

ஏச்சாட்டி,
சுதுமலை தெற்கு,மானிப்பாய். (98339)

தகவல் :
குடும்பத்தினர்

**German-Deutsch,Dutch french Italian**
வகுப்புகள்
கொழும்பு விவேகானந்தா அக்கடமியின் யாழ்.கிளையில் தற்பொழுது ஜேர்மன் எம்பஸி பரீட்சைக்கான Deutsch மற்றும் நெதர்லாந்து Dutch,Italian, Frenchவகுப்புக்கள் நடைபெறுகின்றன.
Vivekananda Academy
(Center for Internatinal Language Studies)No.3,2nd Lane Palaly Road,Jaffna (அப்பலோ ஆஸ்பத்திரிக்கு எதிரில்)
GOV.Reg.No W/A76795
Tel-0774842464/0213216928/0779927117

LAZER AC
யாழ் விநியோகஸ்தர்கள்
e city
NO:338A,KASTHURIAR ROAD,JAFFNA. T.P: 0212228147
0777317712
ஒப்பந்தக்காரர்கள்,மீள்விற்பனை செய்வோருக்கு விசேட விலைக்கழிவு
Available:A/C Installation and Service also




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 16.05.2010 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

எங்கள் இரண்டாவது தேனிலவு






"எங்களுக்குத் திருமணமாகி 10 ஆண்டுகள். வாழ்க்கையில் இன்று ஓர் புதுமலர்ச்சி தோன்றியுள்ளது. முன்னரைவிட அதிக உத்வேகம். எங்கள் தாம்பத்திய வாழ்க்கையில் இந்த இனிய மாற்றத்திற்கு வழிகோலியது ட்ரைபுல்..."

இயற்கை மூலிகைச் சாறுகள் அடங்கிய ட்ரைபுல், உங்கள் பாலுறவுச் செயற்பாட்டைஅதிகரிக்கும். உயர்ந்த தரநியமங்களுக்கேற்ப அவுஸ்திரேலியாவில் தயாரிக்கப்படும் ட்ரைபுல் மாத்திரைகளை எந்த வயதான ஆண்-பெண் இருபாலாரும் எவ்வித பக்க விளைவுகளும் இல்லாமல் பாவிக்க முடியும். நாள் ஒன்றிற்கு 2 மாத்திரைகள் எடுப்பதன் மூலம் உங்கள் தாம்பத்திய உறவை உற்சாகமாகவும் பூரணமாகவும் அனுபவிக்க ட்ரைபுல் உதவும்.

சகல ஃபாமஸிகளிலும் கிடைக்கும்

Alaris touching aspirations

**Alaris Pharmaceuticals (Pty) Ltd.**
A Division of Zifam Pinnacle Pty Ltd., Sydney, Australia.
மின்னஞ்சல்: tribull.alaris@gmail.com
For further details contact 077 810 5 810 / 4 931 732

**உடனடி அழைப்பு 0775 612 303 / 0773 943 113**

# Fancy Shop

ஒன்றை நடாத்துவதற்கு உத்தேசமா ?





நாம் உங்களுக்குத் தேவையான இன்றைய நவ நாகரீகத்திற்கேற்ற FANCY பொருட்களை விநியோகிக்கத் தயாராக உள்ளோம்.






யாழ் நகரில் மொத்த வியாபாரிகள் தேவை

**R.D.P. Fancy Mahal**
Importers of Cosmetics, Immitation Jewellery, Fancy Good & Toys.
No 79, Prince Street, Colombo -11

Tel : 09411 - 2458733
Mob : 0773 081946
E-mail :- rdp.email@gmail.com

Whole Sale dealers in fancy Items & Soft Toys

IATA Accredited Agent

# யாழ் மண்ணில்...





# புதிய உதயம்

வெளிநாட்டு விமானப்பயணச்சீட்டை
மிகக்குறைந்த விலையில்,
சிறந்த சேவையை பெற்றுக் கொள்ள

SPICE TRAVELS & TOURS (PVT) LTD

*Experience your Travel with Ease.*



24 Hrs Fly Cool Line : 0773 916 416

இல. 412, (முதலாம் மாடி). வைத்தியசாலை வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி : 021-2228591 தொலைநகல் : 021-2228546


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நமது நாட்டில் மக்கள் மத்தியில் யோகாசனக் கலை குறித்த அக்கறை மிகக் குறைந்த அளவில் காணப் படுவதாகவும் அதற்கான அடிப்படைக் காரணங்கள் குறித்தும் யாழ்ப்பாணப் பகுதியில் யோகாசனக் கலைப் பயிற்றுவிப்பாளர்கள் நால்வர் தமது கருத்துக்களை, உதயன் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கின்றனர்.

**எஸ்.சிவனேஸ்வரராஜா**
**(யோகக்கலை போதனாசிரியர்)**

உடல்,உள, ஆன்மீக ஆரோக்கியத்தை ஏற்படுத்தக் கூடியது யோகாசனம். இதனை உலக சுகாதார நிறுவனமே ஏற்றுக் கொண்டுள்ளது. எனவே மனிதப் பிறப்பெடுக்கும் ஒவ்வொருவரும் யோகாசனம் தொடர்பான அடிப்படை அறிவையாவது பெற்றிருத்தல் அவசியமாகும். தினசரி யோகாசனப் பயிற்சி செய்வதன் மூலம் எமது உடல், உள உபாதைகளிலிருந்து எம்மை நாமே பாதுகாத்துக் கொள்ள இயலும்.

எமது மக்களிடையே இன்று யோகாக்கலை தொடர்பாகப் போதிய விழிப்புணர்வு கிடையாது. இதனால் யோகாக் கலை குறித்த அவர்களின் நாட்டமும் குறைவாகவே உள்ளது.

யோகாக்கலை தமிழ் மக்களுடைய பாரம்பரிய கலைகளில் ஒன்று. இக்கலை தற்காலத்தில் தென்னிந்தி

குறிப்பாக ஐரோப்பிய நாடுகளில் இன்றைய காலகட்டத்தில் யோகக் கலை பிரபல்யமாகி வருவதனை அவதானிக்க முடிகிறது. அவர்கள் காலமாற்றத்திற்கு ஏற்ப யோகப்பயிற்சிகளில் சில நுணுக்கங்களையும் மாற்றங்களையும் புகுத்தி நவீன மயப்படுத்தி கல்விச் சாலைகளில் இக்கலையை ஒரு பாடமாகச் சேர்த்திருக்கிறார்கள். இதன் காரணமாக முறைசார்ந்த பயிற்சியும், ஆர்வமும் அங்குள்ள மக்களுக்குக் கிட்டுகிறது.

அது மட்டுமன்றி அவர்கள் மேற்கத்தேய மருந்து மாத்திரைகளை வெறுத்து, தமது உடல் உள ஆரோக்கியத்தை மேம்படுத்தும் நோக்கில் யோகக் கலையைக் கற்றுக் கடைக் கொள்வதில் ஆர்வம் காட்டுகின்றனர்.

ஆனால் எமது பிரதேசத்தைப் பொறுத்த வரையில் பொது மக்கள் மத்தியில் யோகாக் கலை மீதான ஆர்வம் மிகக் குறைவாகவே காணப்படுகிறது. இந்த

# யோகக் கலைமூலம் எமது உடலிலும் உள்ளத்திலும் வியத்தகு மாற்றங்களை ஏற்படுத்திக் கொள்ளலாம்

**யோகி ராஜன்**
**(பிரபல யோகக் கலை வளவாளர்)**

இந்த உலகத்தில் மக்களின் மனத்தை வளப்படுத்தக் கூடிய யதார்த்தமான பல வாழ்வியல் அம்சங்கள் இருக்கின்றன. அத்தகைய நடைமுறை அம்சங்களால் நமக்குக்கிட்டும் நற்பலன்களை அறிந்து தெளிந்து அவற்றில் மக்கள் ஈடுபாடு காட்ட வேண்டியது அவசியமாகும். அந்த வகையில் உடல், உள, ஆரோக்கியத்தைத் தரும் 'யோகா'க் கலையில் மக்கள் நாட்டம் காட்டவேண்டியது இன்றைய காலத்தின் தேவையாகிறது.

எனினும் 'யோகா' க்கலை தொடர்பாக எமது மக்கள் மத்தியில் விழிப்புணர்வின்மை நிலவுவது மிகுந்த மனவேதனையைத் தருகிறது.

இமயமலைச் சாரலில் நீண்டகாலமாக யோகா நிலையில் அமர்ந்திருக்கும் ஆன்மீக துறவிகளுடன் நான்கு வருடங்கள் நானும் வாழ்ந்து அளவற்ற சக்திகளைப் பெற்றிருக்கிறேன்.

'நான் பெற்ற இன்பம் பெறுக இவ் வையகம்' என்ற கோட்பாட்டுக்கிணங்க, நான் பல்வேறு வழிகளில் மக்கள் மத்தியில் யோகாவைப் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்த முயன்று

யாவில் அதிக செல்வாக்குப் பெற்றிருக்கிறது. குறிப்பாக இவ்விடயத்தில் அங்கு ஊடகங்களின் பங்களிப்பு மகத்தானது. யோகாக் கலை தொடர்பாக தொலைக் காட்சிச் சேவைகளில் தனியான அலைவரிசை கூட செயற்படுகிறது. பத்திரிகை களில் அனேகமானவை யோகாக்கலையை முன்னிலைப் படுத்தி விசேட ஆக்கங்களைப் பிரசுரித்து வருகின்றன.

அதேவேளை நமது நாட்டில் யோகாசனம் தொடர்பாக வரவேற்கத்தக்க பொது சன அபிப்பிராயத்தை மக்களிடையே உருவாக்குவதில் நமது ஊடகங்கள் தவறிவிட்டன. மக்கள் மத்தியில் யோகாசனம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தக் கூடிய வகையில் ஊடகங்கள் நிகழ்ச்சி நிரலைத் தயாரிக்க வேண்டும்.


மேலைத்தேச மருந்து மாத்திரைகளைத் தவிர்த்து உரிய யோகாசனப் பயிற்சிகளைச் செய்வதன் மூலம் எவ்வித நோய் நொடிகளிலிருந்தும் விடுபட முடியும் என்ற உண்மைமீது மக்கள் நம்பிக்கை வைக்கச் செய்யப்பட வேண்டும். அது மட்டுமன்றி உடல், உள, ரீதியாக , பாதிக்கப்பட்டவர்கள் தான் யோகாசனம் செய்ய வேண்டும் என்ற தொரு தவறான எண்ணத்தை நாம் கைவிடவேண்டும். முழுமையான ஆரோக்கிய நிலையைப் பேற விரும்புவோர் யோகாக் கலையை

நிலைமை மாற்றப்படவேண்டியது அவசியமாகும்.

உடல் மற்றும் உள நலனை மேம்படுத்தும், எவ்வித பாதகமான விளைவுகளும் அற்ற யோகப் பயிற்சியினை முறையாகக் கடைக் கொண்டு வந்தால் எவ்வித நோய்களும் எம்மை அணுகாது. நீடித்த இளமையுடன் நீண்ட காலம் இன்புற்று வாழலாம்.

தற்போதைய எமது வாழ்க்கை நடை முறைகளினால் எமது ஆரோக்கியத்தில் பல பாதகமான விளைவுகளை எமது மக்கள் எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. பல்வேறு விதமான கொடிய நோய்களின் தாக்கத்துக்கு உட்படுவோரின் எண்ணிக்கையும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. எனவே இந்த நிலைமையைக் கருத்தில் எடுத்து, நாம் தினமும் ஒரு குறிப்பிட்ட நேரம் யோகப் பயிற்சிக்கு என ஒதுக்க வேண்டும். பெண்களுக்கெனவும் இலகுவான யோகப் பயிற்சிகள் உள்ளன. அதன் மூலம் பெண்களுக்கு ஏற்படும் பல்வேறு உடல் ரீதியிலான உள பிரச்சினைகளிலிருந்து விடுபடமுடியும்.

இளம் சமூகத்தினர் குறிப்பாக மாணவப்பருவத்தி லுள்ளவர்கள் நிச்சயமாக யோகப் பயிற்சிகளைச்



செய்வதன் மூலம் வாழ்வில் ஆரோக்கியமான ஆளுமைப் பண்புகளை வளர்த்துக் கொள்ள கூடியதாக இருக்கும்.

எனவே யோகாக்கலையில் பாண்டித்தியம் பெற்ற குருவிடம் யோகக் கலையை சரிவரக்கற்று தொடர்ந்து பயிற்சி செய்துவரின் ஆரோக்கியமாக வாழ முடியும்.

# எனினும் எமது மக்களிடையே அந்த அரியகலை குறித்த அக்கறை மிக மிகக் குறைவு

வருகிறேன்.அந்த வகையில் யோகா வகுப்புகள், கருத்தமர்வுகள் போன்றவற்றை இலவசமாக நடத்தி வருகின்றேன். ஒரு சில அரச சார்பற்ற நிறுவனங்களும் இக்கலைக்கு முக்கியத்துவம் கொடுத்து அதனைப் பொது மக்கள் மத்தியில் பிரபல்யப் படுத்தும் விதத்திலான திட்டத்தை முன்னெடுத்து வருகின்றன. இருந்தபோதிலும் அதற்குப் பொது மக்களின் ஒத்துழைப்பு மற்றும் ஆர்வம் மிகக் குறைவாகவே காணப்படுகிறது.

நிச்சயமாக ஒவ்வொரு மனிதனும் யோகாசனக் கலை குறித்துத் தெரிந்து வைத்திருத்தல் அவசியமாகும். அதனைத் தொடர்ச்சியாகத் தினசரி முறைப்படி கடைக் கொண்டு வந்தால் நமது உடல், உள நலன்கள் விருத்தியடையும்.

நாம் அன்றாட வாழ்க்கையில் எதிர் கொள்ளும் சவால்கள் மற்றும் இடர்களுக்கு முகம் கொடுத்து நிலை தளராமல், தளம்பாமல் வாழ்வதற்கு யோகா மற்றும் தியானம் உதவும் என்பது மறுக்க முடியாததொரு யதார்த்த உண்மை ஆகும்.

இன்று பொழுதுபோக்கு என்ற பெயரில் தொலைக் காட்சிப் பெட்டிகளுக்கு முன்னால் கூடிய நேரத்தை வீணடிக்கும் பொது மக்கள் வாழ்க்கையில் இன்றியமையாத அம்சமான, உடல் நலத்துக்கு நன்மை பயப்பதென விஞ்ஞான பூர்வமாக உறுதிப்படுத்தப் பட்ட யோகாசனக் கலையை தேவையற்ற விடயங்களில் ஒன்றாகக் கருதுகின்றனர். இந்த நிலைமை மாற்றப்படவேண்டும்.

மனித வாழ்க்கையில் உடல் உள நலத்துக்கு யோகா தான் அடிப்படை மையம். யோகா மூலம் ஞானம், கல்வி, செல்வம், ஆத்ம திருப்தி அனைத்தும் கிட்டும் எனச் சுட்டப்படுகிறது.

எமது இன்றைய இளம் சமுதாயம் யோகாக் கலையை முறைப்படி கடைக்கொண்டு எல்லையற்ற சக்தியை பெற்று ஆரோக்கியமாக வாழ வேண்டும்.

தென்னிந்திய ஊடகங்கள், அவை பத்திரிகை ஊடகங்கள் ஆகட்டும், இலத்திரனியல் ஊடகங்கள் ஆகட்டும் யோகாக் கலைக்குக் கொடுக்கும் முக்கியத்துவம் அளவுக்கு எமது நாட்டு ஊடகங்கள் முக்கியத்துவம் அளிப்பதில்லை என்ற மனக் குறைபாடு எனக்குண்டு.

யோகாகலையை வளர்த்தெடுப்பதில், மக்கள் மத்தியில் அக்கலை குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்துவதில் எமது ஊடகங்கள் குறிப்பிட்ட அளவு பங்களிப்பு வழங்க வேண்டும். இதனை யாழ். மாவட்டத்தில் உள்ள ஊடகவியலாளர்களிடம் பலமுறை அழுத்திக் குறிப்பிட்டிருக்கிறேன்.

முறைப்படி மேற்கொள்வது அவசியமானதாகும்.

யோகா தொடர்பான விழிப்புணர்வை இளைய சமுதாயத்தினர் மத்தியில் ஏற்படுத்துவதற்கு பாடசாலை மட்டத்திலும் சரி, பல்கலைக்கழக மட்டத்திலும் சரி யோகாக் கலை குறித்த கல்வியை அமுல்படுத்துவது இன்று தேவையாக உள்ளது.

தென்னிந்திய ஊடகங்களிலும், புத்தகங்களிலும் யோகாக் கலை குறித்த நடைமுறைகளைப் படித்து விட்டு ஒரு சிலர் சுயமாக யோகாக் கலையைக் கடைப்பிடிக்க முயல்கின்றனர். இது தவறானது.

யோகக் கலையில் பரிச்சயமுள்ள ஒரு குருவின் வழிகாட்டலுடன் தான் யோகாக்கலையை நாம் கடைக்கொள்ள வேண்டும். இல்லையேல் தேவையற்ற உடல் உபாதைகளை அனுபவிக்கவேண்டியேற்படும். யாழ். மாவட்டத்தில் சாந்திகம், இந்து கலாசாரத் திணைக் களம் போன்றவை யோகக் பயிற்சி நெறிகளை மிகச் சிறப்பாக நடத்தி வருகின்றன.

**நேர்காணல் :- உமா**

சகல வசதிகளுடனான யோகா பயிற்சி நிலையம் ஒன்றை யாழ்.நகரில் நிறுவுவதற்கு நானும் பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் சிலரும் நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

உடற்பயிற்சிக்கும் யோகா பயிற்சிக்கும் இடையில் குறிப்பிடத்தக்க வித்தியாசம் இருக்கிறது. யோகா செய்வதற்கு மைதானம் தேவையில்லை. ஒரு சிறிய சுத்தமான இடமே போதும். மனிதனின் இறுதி மூச்சு நிற்கும் வரை யோகாப் பயிற்சிகளைச் செய்ய முடியும். யோகாப் பயிற்சிகளைத் தவறாது முறைப்படி மேற்கொண்டு தமது வாழ்வை வளம்படுத்துமாறு இளம் சமூகத்திற்கு அழைப்பு விடுக்கிறோம்.

**எஸ்.நதிபரன்**
**(யோகா பயிற்றுவிப்பாளர்)**

எமது பிரதேசத்தைப் பொறுத்த வரை யோகாசனம் பற்றிய பிரக்ஞை, மக்களிடம் அதிகளவில் சென்றடையாத நிலைமை நிலவுகிறது. இந்த நிலைமைக்கு பல காரணங்களைக் குறிப்பிட முடியும். யோகாசனம் பற்றிய போதியளவு விழிப்புணர்வின்மை, அது குறித்து மக்கள் மத்தியில் நிலவும் சில தப்பான அபிப்பிராயங்கள். அப் பயிற்சியை மேற்கொள்ள அவசியமான நேரத்தை ஒதுக்குவதற்கு இயலாது போதல். யோகக் கலையை ஓர் ஆன்மீகக் கலை என்ற கண்ணோட்டத்தில், அதனை இந்து சமயம் சார் கலையாகக் கணிப்பிடும் தன்மை, இதனால் ஏனைய மதங்களைப் பின்பற்றுவோர் குறிப்பிட்ட இந்தக் கலையின் மகிமையை, சிறப்பை அறிந்து கொள்வதில் ஆர்வம் காட்டாமை [illegible] மாக [illegible] என்பன இந்நாட்டு மக்களிடையே மங்கிக் கிடக்கிறது.

**என்.கோணேஸ்வரன்**
**(யோகா பயிற்றுவிப்பாளர்)**

யோகாசனம் எனும் வாழ்வியல் கலையானது ஐயாயிரம் வருடங்களுக்கு முற்பட்ட பாரம்பரிய பெருமைக்குரியதாகும். யோகாக் கலையானது கடைப்பிடிப்பதற்கு மிக இலகுவானது. அறிவு பூர்வமான விஞ்ஞான அடிப்படையில் அமைந்தது. இதன் மூலம் வியத்தகு அற்புத மாற்றங்களை எம்மில் ஏற்படுத்திக் கொள்ளமுடியும்.

இந்த யோகாசனம் எமது பகுதியில் செல்வாக்கிழந்துள்ளதனை உணரமுடிகிறது. இக்கலை குறித்த விழிப்புணர்வு எம் மக்களின் மத்தியில் உரிய முறையில் ஏற்படுத்தப்படவில்லை என்றே கூறலாம். இதற்குப் பல காரணங்கள் உள்ளன. யோகாத்துறை சார்ந்தவர்களது கருத்துக்கள், விழிப்புணர்வு நடவடிக்கைகள் பரவலாக மக்களை உரிய முறையில் சென்றடையாமை; ஊடகங்கள் இந்தக் கலைக்கு முக்கியத்துவம் கொடுக்காமை, பாடசாலை மட்டக் கல்விப் போதனையில் அதன் அவசியத்தை உணர்த்தத் தவறியுள்ளமை , யோகா பயிற்சி நிலையங்கள் சிலவற்றில் உரிய முறையிலான பயிற்சிகள் வழங்கப்படாமை உள்ளிட்ட பல காரணங்களைக் குறிப்பிடமுடியும்.

அத்தோடு மக்களிடையே உள்ள யோகா தொடர்பான தெளிவின்மையையும் இங்கு குறிப்பிட வேண்டும். அதாவது உடல், உள நோய்கள் உள்ளவர்கள் தான் யோகா செய்ய வேண்டும். நாம் செய்தால் எமக்கும் அத்தகைய பிரச்சினை இருக்கிறது எனப் பிறர் நினைக்க கூடும் என்ற தப்பபிப்பிராயம் மற்றும் யோகாக் கலையைக் குறிப்பிட்டதோர் மதம் சார் கோட்பாடாகக் கணித்துநோக்கும் நிலை, என்பவை மாற்றப்பட வேண்டும்.****************

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஏலவிற்பனை

## OF DIESEL & PETROL MOTOR VEHICLES

மே மாதம் 22ந் திகதி சனிக்கிழமை
10.00 மணியிலிருந்து

At LOLC Vehicle Yard Facility Centre,
98 J/1, Avissawella Road,
Mahabuthgamuwa, Wellampitiya.

## LOLC Lanka ORIX Leasing Co. PLC

### MOTOR CARS

| | | |
|---|---|---|
| NISSAN | PRESEA R10 | 19-9xxx |
| VOLVO 940 | | 19-1xxx |
| B M W 318 I | | WP GB 6xxx |
| MERCEDES BENZ | | 64-9xxx |
| AUDI / A61.BT | | WP JO - 2xxx |
| HONDA/CIVIC VTI 4A | 2002 1493.cc | WP KB-xxx |
| HONDA/CIVIC VTI 4A | 2002 1493.cc | WP KB-xxx |
| PEUGEOT/406/PETROL | 2003 1749.cc | WP JA-xxx |

### JEEP

| | | |
|---|---|---|
| MITSUBISHI | CREW CAB | WP PA 1xxx |

### BUSSES

| | | |
|---|---|---|
| ASHOK LEYLAND | CHITAL | 60-7xxx |
| MITSUBISHI | FUSO | 62-8xxx |

### VANS

| | | |
|---|---|---|
| MAZDA | BONGO BROWNY | SP HD 8xxx |
| MAZDA | BONGO | WP GD 2xxx |

### MOTOR BIKES

| | |
|---|---|
| BAJAJ CT 100 | WP TL 6xxx |
| BAJAJ KRISTAL SCOOTER BIKE | SP UI 9xxx |

### THREE WHEELERS

| | | |
|---|---|---|
| PIAGGIO APE | THREEWHEELER | WP HA 2xxx |
| PIAGGIO | THREEWHEELER | SP JK 4xxx |

### LORRIES / TIPPERS

| | | |
|---|---|---|
| ERF | EC11 MOTOR LORRY | WP HR 1xxx |
| DUTCH LANKA TRAILER | | WP HW 6xxx |
| MAZDA | TC-SK82T PETROL TRUCK | WP LF 9xxx |
| TATA 1210 | LORRY | 47-5xxx |
| FOTON FORLAND TRUCK | | SP LF 3xxx |
| SUBARU SAMBAR | | CP LF 9xxx |
| MITSUBISHI U61T MINI TRUCK | | WP LE 8xxx |
| MITSUBISHI MINI CAB | | NC LB 1xxx |
| MITSUBISHI | CANTER MOTOR LORRY | 226-9xxx |
| NISSAN CABSTAR LORRY | | WP JI-8xxx |
| ISUZU MOTOR LORRY | | 227-6xxx |
| ABL ZIBO FULL BODY TRUCK | | WP LF 4xxx |
| NISSAN MOTOR LORRY | | SP JP 2xxx |
| DAIHATSU FREEZER TRUCK | | WP LG 0xxx |
| TOYOTA TOWN ACE TRUCK | | NW LD 7xxx |
| TATA LPT TRUCK | | CP LC 9xxx |
| TATA LORRY | | 47-9xxx |
| TATA LORRY | | 42-7xxx |
| TATA ACE TRUCK | | WP LF 1xxx |

### TRACTORS

| | |
|---|---|
| MAHINDRA 275DI | EP RA 9xxx |
| MASSEY FERGUSON | UP RA - 6xxx |
| KUBOTA | UP RA - 7xxx |

## CLC COMMERCIAL LEASING COMPANY LTD.

### MOTOR CARS

| | | | |
|---|---|---|---|
| PEUGOT 406 | EXECUTIVE | 1997 | 300-XXXX |
| NISSAN SUNNYN16 | SUPER SALOON | 2006 | CP KB-XXXX |

### TRACTORS

| | | | |
|---|---|---|---|
| TAFE | 45DI | 2007 | EP RD-XXXX |
| TAFE | 35DI | 2008 | NC RB-XXXX |
| KUBOTA K600A | HAND TRACTOR | 2001 | WP SG-XXXX |
| MUBOTA Rt140 | HAND TRACTOR | 2008 | SP SG-XXXX |
| SIFAN | HAND TRACTOR | 2008 | NC SG-XXXX |
| SIFAN | HAND TRACTOR | 2008 | NC SG-XXXX |
| YONGTUO | HAND TRACTOR | 2008 | NC SG-XXXX |

### THREE WHEELER

| | | | |
|---|---|---|---|
| BAJAJ | AUTO 4 STROKE | 2009 | WP QT-XXXX |

### MACHINERY

| | | |
|---|---|---|
| MUBOTA 4L 22 | AUTO | COMBINE HARVESTER |
| DAKSHIMA 0035 | TRESHER MACHINE | |

### LORRIES

| | | | |
|---|---|---|---|
| DAIHATSU | HIJET | 2002 | CP LB-XXXX |
| DAIHATSU | HIJET | 1998 | WP HS-XXXX |
| SUZUKI | CARRY | 1998 | WP HN-XXXX |
| NISSAN | ATLAS | 1992 | 68-XXXX |
| LANKA ASHOK LEYLAND | COMET | 1996 | 48-XXXX |
| TATA | ACE | 2006 | SP LB - XXXX |
| MAHINDRA | MAXI | 2008 | WP LG XXXX |
| TATA 609 | | 1995 | 47- XXXX |

### TIPPERS

| | | | |
|---|---|---|---|
| LANKA ASHOK LEYLAND | | 1992 | 43-XXXX |
| DAIHATSU | | 1991 | 226-XXXX |
| MAZDA | TITAN | 2000 | SP HT-XXXX |
| TOYOTA | DYNA | 1992 | 68-XXXX |

### MOTOR VAN

| | | | |
|---|---|---|---|
| DAIHATSU | HIJET | 1999 | CP JC-XXXX |

## PMB PEOPLE'S MERCHANT BANK

### LORRIES

| | |
|---|---|
| DIMO BATTA | SP LF -xxxx |
| MAZDA BONGO | CP LE -xxxx |

### BUS

| | |
|---|---|
| LANKA ASHOK LEYLAND | 63- xxxx |

**On View Thursday 20th & Friday 21st May 2010 Between 9.00 a.m. - 5.00 p.m.**

### CONDITIONS OF SALE

Entrance by a Non Refundable Ticket of Rs.500/- & Refundable Deposit of Rs.5000/- per person on Days of

Payment: 25% in cash at the fall of the Hammer (cash non refundable), Balance 75% also in Cash & removal latest by 3.00 p.m. on Monday 31st to paid to Lanka ORIX Leasing Company PLC., No.100/1, Sri Jayawardenepura Mw, Rajagiriya.

The Management has the right to withdraw any vehicle (s) from the Auction without prior notice.

# Schokman & Samerawickreme

Government Approved & The Only ISO 9001:2000 Certied Reputed Pioneer Chartered Auctioneers, Consultant Valuers & Realators in Sri Lanka

**Head Office:**
24, Torrington Road, Kandy.
Tel: 081 2227593 Tel/Fax: 081 2224...
e-mail schokmankandy@sltn...

**City Oce & Showroom:**
290, Havelock Road, Colombo 05.
Tel: 011 2502680, 2585408, Tel/Fax: 011 2588176
e-mail schokman@samera1892.com

Web: www.schokmanandsamerawickreme.com Our is An Islandwide Service of Quality

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்-கொழும்பு பிரயாண சேவை



★ 29 இருக்கைகள் கொண்ட
A/C மினிபஸ் 1200/-



★ டொல்பின் வான்
யாழ்-கொழும்பு மட்டும் 1100/-

**புறப்படும் நேரம்: 17.05.2010 திங்கள் இரவு 7 மணி.**

வீடுகளுக்கு வந்து ஏற்றி இறக்கப்படும்.

**முன்கூட்டிய ஆசனப் பதிவுகளுக்கு**

★ ஞானம்ஸ் ரெக்ஸ்
நவீன சந்தை,
யாழ்ப்பாணம்.
0213008197, 0212225679.

★ சாருஜன்
கொமினிக்கேசன்
கொக்குவில் 0212226127

★ யோகாஸ் கொமினிக்கேசன்
வட்டுக்கோட்டை
0213215948

★ தேவி கொமினிக்கேசன்
கொழும்புத்துறை
021 2223318



## காணி விற்பனைக்கு

கல்வியங்காடு, 3ஆம் கட்டை வீதியில் பாதுகாப்புமிக்க அமைதியான சூழலில் 3¾ பரப்புக் காணி விற்பனைக்குண்டு.

தொடர்பு:- 0770711512
0776081693
0777419161



## வீடு தேவை

கொழும்பிலுள்ள பிரபல பொறியியல்துறை கம்பனிக்கு யாழ்ப்பாண நகரத்தில் அல்லது 2km சுற்றாடலில், சகல வசதிகளும் கொண்ட கிட்டத்தட்ட 2000 சதுர அடிகொண்ட ஒரு வீடு நீண்ட காலத்திற்கு உடனடியாகத் தேவை.

தொடர்பு: 0772753146


## அபராதம்

சட்டவிரோதமாக சாராயம், கசிப்பு என்பவற்றை வைத்திருந்த மூவருக்குச் சாவகச்சேரி நீதிமன்றில் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அபராதத் தொகை விதிக்கப்பட்டது.

சாவகச்சேரி மதுவரித் திணைக்களத்தினால் தாக்கல் செய்யப்பட்ட வழக்குகளை விசாரித்த நீதிவான் குறித்த மூன்று பேருக்கும் தலா 10 ஆயிரம் ரூபா வீதம் அபராதம் விதித்ததுடன் அபராதத் தொகையைச் செலுத்தத் தவறின் தலா ஒரு மாதம் சாதாரண சிறைத் தண்டனை அனுபவிக்குமாறும் உத்தரவிட்டார். (எ-207)

## முக்கிய அறிவித்தல்
## அராலி ஆவரம்பிட்டி முத்துமாரி அம்பாள் ஆலயம்

அம்பிகை அடியார்களே!

**அனுமதி இல்லாது பணம் சேர்த்தல்**

அராலி ஆவரம்பிட்டி ஸ்ரீ முத்துமாரி அம்பாள் ஆலயத்திற்கு ஒரு சிலர் பணம் சேர்ப்பதாக அறியவந்துள்ளது. ஆனால் பரிபாலன சபை எவருக்கும் ஆலயத்திற்குப் பணம் சேர்ப்பதற்கு அனுமதி கொடுக்கவில்லை.

ஆகவே அம்பிகை அடியார்கள் யாராவது அம்பாள் ஆலயத்திற்கு பணம் கொடுக்க விரும்பினால் நேரடியாக வந்து ஆலயத்தில் பணத்தைக் கொடுத்து அதற்கான பற்றுச்சீட்டினை உடன் பெற்றுச்செல்லுமாறு அன்புடன் கேட்டுக் கொள்கின்றோம்.

சு.செந்தில்நாதன்
தலைவர்,பரிபாலன சபை.

(98278)

## 5 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



வைத்திய கலாநிதி
திருமதி வாசுகி தயாளன்

தோற்றம்
09★10★1962

மறைவு
11★05★2005

திதி: 16.05.2010
(ஞாயிற்றுக்கிழமை)

பண்பேர் பத்தினியாய் கண்ணாள் தாயார்
கண்ணியமாய் காத்தவெம் தெய்வமே! எம் கூடு விட்டு
விண்ணாவனானாய் பொன், புகழ், தாய்மையென எல்லாமிழந்தோம்
பண்புறப் பாரில் வாழ அருள் பாலித்தேத்துவாய் எம் குல விளக்கே

துவாரகை,
கைதடி.

குடும்பத்தினர்.




# IELTS இன்றி Spot Admission மூலம் UK இல் உயர் கல்வி

**இடம்:** 04, IBC Road, Wellawatte, Colombo 6.

**திகதி:** 5th June 2010

**நேரம்:** காலை 10.00 மணியிலிருந்து மாலை 4.00 மணி வரை

For appointment please contact : > 0777-761346

VISA பெற்றுக்கொள்ள முன்னர் அல்லது அதன் பின்னர் எந்தவொரு கட்டணமும் அறவிடப்படமாட்டாது.

எமது சேவை முற்றிலும் இலவசம்

O/L உடன் குறைந்த கட்டணத்தில்!

flex Institute
Step Towards a Bright Future

4, IBC Road, Wellawatte, Colombo 6.
Hotline: 0777-761346
Email: flexinstitute@sltnet.lk
www.flexinstitute.lk
(A Subsidiary of Flex Graphic)

FLEX Graphic



## MRF

மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி டயர்களுக்கு

**வவுனியா மாவட்டத்தில் விநியோகஸ்தர்கள் தேவை**

வரையறுக்கப்பட்ட டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனியினால் இறக்குமதி செய்யப்பட்டு விநியோகிக்கப்படும் MRF மோட்டார் சைக்கிள் மற்றும் முச்சக்கர வண்டி டயர்களுக்கு வவுனியா மாவட்டத்திற்கான விநியோகஸ்தர்களுக்கான பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

தேவையான தகைமைகள் :-

- களஞ்சியசாலை வசதிகள் காணப்படுதல்
- போக்குவரத்து வசதிகள் காணப்படுதல்
- வங்கி பிணையாளர் ஒருவரை முன்வைக்கக் கூடிய வசதி

**மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளவும் -**
**மிஹிபால் பெரேரா - 0777 776727**

உங்கள் விண்ணப்பங்களை அனுப்பும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "MRF டயர் விநியோகஸ்தர் பதவி" எனக் குறிப்பிட்டு, 14 நாட்களுக்குள் கிடைக்கக் கூடியவாறு கீழே குறிப்பிடப்பட்டுள்ள முகவரிக்கு தபால் செய்யுங்கள்.

விற்பனை முகாமையாளர்,
உதிரிப் பாகங்கள் மற்றும் உபகரணப் பிரிவு,

DPMC **டேவிட் பீரிஸ் மோட்டார் கம்பனி லிமிட்டட்**
நிறுவன பதிவு இலக்கம்: PB270
இலக்கம் 120, 120A, பன்னிப்பிட்டிய வீதி, பத்தரமுல்லை.
தொலைபேசி : 011 4700600


tradlanka



# தற்போது யாழ்ப்பாணத்தில் அமோக விற்பனையில்...

Abbe JOURNEY 48CC

Imported By: Abbe (PVT) LTD, Colombo.



5000 km or 6 மாத உத்தரவாதம்

New Model Alloy Wheel For 48CC

❖ Soomth Shock Absorber

❖ Saree Cover Guard

கிடைக்குமிடங்கள்:

**JAFFNA ELECTRICAL**

141,Power House Road, Jaffna.
T.P: 021 222 8378, 5766.

No. 04,New Market,
Chavakachchri.T.P: 0213008702

Midea Electro Mart

No: 1-1, 1-H, Stanley Rod,
Jaffna, SriLanka.
T.P: 021 222 4566, Fax:021 222 1646.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவிழாக் காணும் தம்பதிகளை மனமார வாழ்த்துகின்றோம்



திரு.திருமதி

**இ.பேரின்பநாயகம்**

**தம்பதிகள்**

(ஸ்தாபகர் – சுதுமலை சஞ்சடி நாவலர் பாலர் பாடசாலை)

வாழ்த்துப்பா

பாலர் கல்விக்கு நாவலர் பெயரில் பாடசாலை நயந்தீர்
நாவலர் போல் நற்பணிகள் பல செய்தீர்
சீலமுடனே சிறுவர் உயர சிறுவர் அரங்கமைத்தீர்
கோல விழா வெடுத்து விழா மலர் வெளியிட்டீர்
ஆலயமாம் ஞானவைரவர் தனில் தர்மகர்த்தாவாய்
சாலப்பணி பல ஆற்றி நின்றீர்
தூய நும் பணி தொடரவே மணிவிழாவொடு
நூற்றாண்டு விழாவும் காண வாழ்த்துகின்றோம்.

ஆக்கம் - இ.ஆனந்த நடராசா

நாவலர்பாலர் பாடசாலை. மணிவிழாச்சபை சஞ்சடி, சுதுமலை.

### முன்பள்ளியின் விளையாட்டு விழா

கைதடி, மே 16

கைதடி வடக்கு கலைமகள் முன் பள்ளி விளையாட்டு விழா நாளை மறு தினம் செவ்வாய்க் கிழமை பி.ப. 2 மணிக்கு முன்பள்ளி மைதானத்தில் கைதடி வடக்கு சன சமூக நிலையத்தின் உப தலைவர் சி.கஜமுகன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் கைதடி குருசாமி வித்தியாலய அதிபர் திரு.த. கணேசபாலேந்திரன் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார். (க-288)


## சேவை

மலேசியா வீசா சுலபமாக்கிப் பெற்றுத் தரப்படும். இரண்டாவது சிட்டிசன் வீசா, வியாபார வீசா, ஸ்ருடன்ட் வீசா, வேலை வாய்ப்பு வீசா, உங்கள் உறவினர்கள் மலேசியாவில் பாஸ்போட் வீசா இல்லாமலிருப்பின் நாடு திரும்ப ஏற்பாடு செய்து தரப்படும்.

தொடர்பு 0777 562290

## வேலையாள்கள் தேவை

யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி விஸ்தரிப்பு வேலைகளுக்குப் பின்வரும் வேலையாள்கள் தேவை

★ கூலியாள்கள்
★ மேசன், தச்சுத்தொழிலாளர்கள்
★ உழவு இயந்திர சாரதிகள்
★ பாரவூர்தி சாரதிகள்
★ றோலர் இயக்குநர்
★ மேற்பார்வையாளர்கள்

தொடர்புகளுக்கு: குஞ்சர்கடைச் சந்தி, கரவெட்டி. 0773358152.


# வலி.கிழக்கு வடபகுதி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி (வ.து)

## கிளைக்குழு உறுப்பினர் தெரிவு தொடர்பான

# அறிவித்தல்

வடக்குக் கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் பதிவாளரும் அவர்களினால் ஆக்கப்பட்டு 1998.05.19 ஆம் திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான "வடக்குக் கிழக்கு மாகாண எல்லைக்கு உட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கிளைக் குழுக்களைத் தெரிவு செய்வதற்கான விதிகள்" இதற்கு அமைய யாழ்.மாவட்டக் கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளராகிய நான் 2009.04.08 ஆம் திகதிய 1596/17 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானி மூலம் எம்மீது பாரிக்கப்பட்ட அதிகாரங்களின்படி மேற்படி சங்கத்தின் துணைவிதி 23 இற்கமைய மேற்படி சங்கத்தின் சகல கிளைகளுக்குமான கிளைக் குழுத் தெரிவிற்கான கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவணையின்படி நடைபெறுவதற்காக இக்கூட்டங்களை அழைப்பதற்கும் அவற்றின் தவிசாளராகக் கடமையாற்றுவதற்கும் பின்வரும் அலுவலர்களை பெயர் குறித்து நியமித்துள்ளேன்.

★ இதற்கமைய இக் கூட்டங்களில் சமுகமளித்து வாக்களிக்க உரிமையுள்ள உறுப்பினர்களுக்குத் தனித்தனி அறிவித்தல்கள் சம்பந்தப்பட்ட அலுவலர்களினால் அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இவ் அறிவித்தல் கிடைக்காவிடின் இதனை ஏற்றுக் கொண்டு சம்பந்தப்பட்ட கிளைகளுக்கு சமுகமளித்து கிளைக்குழு தெரிவு செய்ய உதவவும்.

★ கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கான நிறைவெண் கூட்டத்திற்கு சமுகமளித்து வாக்களிக்கத் தகுதியுள்ள உறுப்பினர்களின் நான்கிலொரு (¼) பங்கினர் அல்லது 25 பேர் அதில் எதுகுறைவோ அத்தொகையாகும்.

★ தவிசாளர் குறித்த கிளையின் பொதுச்சபையில் இருந்து கிளைக்குழுவிற்கான ஒன்பது (09) உறுப்பினர்களைத் தெரிவு செய்யும்படி கிளையின் பொதுச் சபையைக் கோருவார். இவர்களுள் ஆகக்குறைந்தது இருவர் (02) 18 வயதிற்கும் 35 வயதிற்கும் இடைப்பட்டவர்களாக இருத்தல் வேண்டும்.

★ சபையில் இருந்து கிடைக்கப்பெறும் முன்மொழிவுகள் ஒன்பது (09) பேருக்கு மேற்படின் தவிசாளர் இரகசிய வாக்கெடுப்பின் மூலம் தெரிவினை மேற்கொள்வார்.

★ இரண்டு வேட்பாளருக்கு அல்லது இரண்டிற்கு மேற்பட்ட வேட்பாளர்களுக்கிடையே சமவாக்குகள் கிடைக்கப்பெறும் பட்சத்தில் திருவுளச்சீட்டு மூலம் தெரிவு மேற்கொள்ளப்படும்.

★ தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர்களைத் தவிசாளர் கிளையின் பொதுச்சபையில் பிரகடனப்படுத்துவதுடன் சங்கச் செயலாளருக்கும் எனக்கும் எழுத்து மூலம் அறிவிப்பார்.

★ தகுதியுள்ள கிளைப் பொதுச்சபை அங்கத்தினருக்கு கிளைக்குழு தெரிவு தொடர்பான அறிவித்தல்கள் தனித்தனியாக அனுப்பிவைக்கப்படுகின்றன. இந்த அறிவித்தல்கள் கிடைக்கப்பெறாத எவரேனும் தகுதியுள்ள அங்கத்தவர்கள் இந்த அறிவித்தலை ஏற்றுக் கொண்டு இக்கிளைப் பொதுச்சபை நடைபெறும் திகதியில் தங்களுக்குரிய கிளைப் பொதுச்சபைக் கூட்டத்திற்கு சமுகமளித்து கிளைக்குழுவைத் தெரிவு செய்யுமாறு வேண்டுகிறோம்.

## கிளைப் பொதுச்சபைக் கூட்டங்கள் தொடர்பான விவரம்

## 23.05.2010 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணி

| தொ.இல. | கிளை இல. | கிளையின் பெயர் | கிளைப் பொதுச்சபைக் கூட்டம் நடைபெறும் இடங்கள் | கிளைப்பொதுச்சபைக் கூட்டத்தை நடத்தும் தவிசாளர் பெயர் |
|---|---|---|---|---|
| 01 | 01 | அச்சுநகர் | கிளை 1 இன் கட்டடம் | செல்வி த.மாலினி |
| 02 | 02 | பத்தமேனி | கிளை 2 இன் கட்டடம் | திரு என்.பத்மசோதி |
| 03 | 03 | தம்பாலை | கிளை 3 இன் கட்டடம் | திரு பா.சிவபாலன் |
| 04 | 04 | இடைக்காடு | கிளை 4 இன் கட்டடம் | திரு க. திசாகரன் |
| 05 | 05 | வளலாய் கிழக்கு | கிளை 5 இன் கட்டடம் | திரு க.பாலகிருஷ்ணன் |
| 06 | 06 | வளலாய் மேற்கு | கிளை 6 இன் கட்டடம் | திரு ஐ. நாகேஸ்வரன் |
| 07 | 07 | புஸ்பவதி | கிளை 7 இன் கட்டடம் | திரு வி.சிவகுமார் |
| 08 | 08 | அச்சுவேலி தெற்கு | கிளை 8இன் கட்டடம் | திரு தி.வித்தககலாநிதி |
| 09 | 09 | தோப்பு | கிளை 9 இன் கட்டடம் | திரு இ.தயாகரன் |
| 10 | 10 | ஆவரங்கால் தெற்கு | கிளை 10 இன் கட்டடம் | திருமதி பா. கலைச்செல்வி |
| 11 | 11 | ஆவரங்கால் கிழக்கு | கிளை 11இன் கட்டடம் | திரு ச. பாலகுமார் |
| 12 | 12 | நவக்கிரி | கிளை 12 இன் கட்டடம் | திரு வை.கைலைநாதன் |
| 13 | 13 | புத்தூர் மேற்கு | கிளை 13 இன் கட்டடம் | திரு அ.சீராளன் |
| 14 | 14 | சிறுப்பிட்டி | கிளை 14 இன் கட்டடம் | திருமதி அ.ரஞ்சினி |
| 15 | 15 | சூரியோதயம் | கிளை 15 இன் கட்டடம் | திரு பா.ஸ்ரீக்குமார் |
| 16 | 16 | நாவற்காடு | கிளை 16 இன் கட்டடம் | திரு க.கமலநாதன் |
| 17 | 17 | வாதரவத்தை | கிளை 17இன் கட்டடம் | திரு பொ. கோகுலன் |
| 18 | 18 | கதிரிப்பாய் | கிளை 18 இன் கட்டடம் | திரு இ.விஜயமோகனராசா |
| 19 | 19 | அச்சுவேலி வடக்கு | கிளை 19 இன் கட்டடம் | திரு வி. ஜெயந்தன் |
| 20 | 20 | கலட்டி | கிளை 20 இன் கட்டடம் | திரு சி.ஸ்ரீதரன் |
| 21 | 21 | ஆவரங்கால் வடக்கு | கிளை 21 இன் கட்டடம் | திரு க.நிமலன் |
| 22 | 22 | புத்தூர் கிழக்கு | கிளை 22 இன் கட்டடம் | திரு சி. குணாளன் |

**குமாரசிங்கம் அருந்தவநாதன்**
கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர்,
யாழ்.மாவட்டம்.

கூ.அ.உ. ஆணையாளர் பணிமனை,
357,கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.

(சி/567684)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# MBBS/MD

**Lugansk State Medical University**
UKRAINE - EAST EUROPE
Recognized by **SRI LANKA MEDICAL COUNCIL**
**With A/Ls 6 years**
Minimum : 2C + 1S in Biology, Chemistry and Physics
எமது நிறுவனத்தின் மூலம் அனுப்பபட்ட கொழும்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு, வவுனியா, முல்லைதீவு, நுவரேலியா, மாத்தளை, மாணவர்கள் தற்பொழுது Ukraineல் கல்வி கற்கின்றனர்.
**www.lugmedi.com**
யாழ்ப்பாணத்தில் தொடர்புகளுக்கு:
Tel: (தமிழில்): 0777 767818/ 0779004194
**Scholars Information Center (SIC)**
இல.734, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.



**மணமகள் தேவை** கௌரவ சைவ போசன இந்துப் பெற்றோர், உயர் நிலையில் உள்ள, 1977இல் பிறந்த, செவ்வாய்க்குற்ற மற்ற மணமகனுக்கு அதே தராதரத்தில் (Pure Vegetarian) மணப்பெண்ணைத் தேடுகின்றார்கள். சாதகக் குறிப்பு, முகவரி அல்லது T.P.No. மற்றும் முழு விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும்.
e mail: redparrot3541@yahoo.com or Fax No: 021 222 9502





கல்வியுடன் வேலை வாய்ப்பு
**LONDON, & SINGAPORE**
**COURSES**
Business & Management (Dip, BA)
IT (Dip, BSc), Accounting (Dip, BSc),
Hotel Management (Dip, BSc),
Early Childhood Education,
Art and Design, Teaching, Travel &
Tourism, Health & Social Care,
And Many more............
Hot Line : 0716210327
Tel : 0115691776
**No IELTS, Age Limit**
தங்குமிடம், விமான நிலையத்திலிருந்து அழைத்து வரல் மற்றும் பகுதிநேர வேலைவாய்ப்பு ஆகியன ஒழுங்கு செய்துதரப்படும்.
**Summerset College**
Local & Overseas Education
3rd Floor, DFCC Bank Building, 135, Highlevel Road, Maharagama.
(OPPOSITE FASHION BUG)
E-mail: - scl@slt.lk Fax 0112 863 561
FLEX Graphic



**இலவசம்**

SUZUKI Way of Life!
SUZUKI MARUTI
Count on us

# யாழ் மண்ணில் உங்களுக்காக

## சுசூக்கி மற்றும் சுசூக்கி மாருதி சேவை நிலையம்

## 21 மற்றும் 22ம் திகதிகளில் இலவச சேவை செயற்றிட்டம்

றோயல் லுப்ரிகேஷன் சேவை நிலையம்
K.K.S. வீதி சுன்னாகம், யாழ்ப்பாணம்
இலவச பரிசோதனை
பதிவுகளுக்கு இன்றே அழையுங்கள்
முரளி 0212 241090, 0213 217771, 0776 013568

**உடனடி தொடர்பு - விராஜ் 0772 245719**

அசோசியேட்டட் மோட்டர்வேய்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
Web : www.amwltd.lk
E mail : maruti@amwltd.com
For Trade-in offer login to : www.amwtradein.com



**மின்சார மற்றும் எந்திரவியல் பொறியியல் சேவைகள்**
**Electrical and Mechanical Engineering Services**
பின்வரும் சகலவிதமான
We undertake all types of
- மின்சார ஒப்பந்த வேலைகள் Electrical Contracting Work
- வீடுகளுக்கு மின் இணைப்பு House Wiring
- மின் பிறப்பாக்கி திருத்துதல் Generator Repairs
- டீசல் இயந்திரம் திருந்துதல் Disel Engine Repairs

Hot Line : 0777-374817
Nadesan
E-mail: nadesan@koolairgroup.com



KOOLAIR (PVT) LIMITED
68,Kannathitiya Road, Jaffna.
Tel: 0212225575 E-mail: jaffna@koolairgroup.com



**வேலை ஆள் தேவை**
கொழும்பில் பிரபல்யமான நிறுவனம் ஒன்றின் யாழ்ப்பாணக் கிளைக்கு டிசைன் பிறிண்ட் செய்வதற்கு உதவி ஆள் தேவை
கணனி அறிவு இருத்தல் வேண்டும், ஏனைய விடயங்கள் நேரில் தீர்மானிக்கப்படும்.
TRADEMASTER®
DIGITAL PRINTING
தொடர்புகளுக்கு
தொ.பேசி:0772394422
0217538770



**புதிய இடத்தில் எமது சேவைகள்**
பொலிமர் றபர் ஸ்ராம் 200ரூபா
பிறீ இங்க் றபர் ஸ்ராம் 500ரூபா
வரிக்கணக்கோ, அளவோ இல்லை. உங்கள் விருப்பம் போல் இக்கட்டணத்தில் செய்துகொள்ள யாழ்.நகரில்.
S.S.யசோதரன் ஆட்ஸ்,
381/u, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.
(வண்ணை சிவன் கோயில் அருகில்)





**பணியாளர் தேவை**
- கணக்காளர் } ஆண் / பெண்
- விற்பனையாளர் }
- உதவியாளர்
- பஸ் ரிக்கற் புக்கிங்காளர்
- விடுதி மேற்பார்வையாளர் (சிங்களம் தெரிந்தவர்)

நேரில் வரவும்
தொடர்புகளுக்கு:
**யாழ்.போல் சொர்**
இல.09, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
தொ.பே.: 077 3611282
(இ/5676665)


**கண்ணீர் அஞ்சலி**

யாழ்.பல்கலைக்கழக தாவரவியல் துறையில் கடமையாற்றும் ராகுலன் அவர்களது அன்புத் தந்தை

**குட்டித்தம்பி பாலசுப்பிரமணியம்**

அவர்களின் மறைவால் துயருற்றிருக்கும் அன்னாரின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதுடன் அவரின் ஆத்ம சாந்திக்காக இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஊழியர்கள்,
தாவரவியற் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org